


யோகி சுத்தானந்த பாரதி.

நவரஸ நடனஞ்ஜலி

(நாட்டியக் கலை விளக்கத்துடன்)

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

புது யுக நிலையம்
புதுச்சேரி

முதற் பதிப்பு : பிப்ரவரி, 1948

விலை ரூபா: இரண்டு
Price Rs : 2

ஸ்ரீ அரவிந்த ஆஸ்ரம அச்சகம், புதுச்சேரி

374/48/1000

பதிப்புரை

நாட்டியக் கலைக்காக கவியோகி சுத்தானந்த பாரதியார் செய்த அரிய தொண்டின் பயனே நவரஸ நடனாஞ்ஜலி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் "**சுத்தானந்தம்**" என்ற கலை நூல் வழங்கியது; அந்தப் பெயருடைய தமிழ் முனிவரே இந்த அரிய நூலை இயற்றி நாட்டியக் கலைக்குப் புத்துயிர் அளித்திருக்கிறார்.

இந் நூலின் முதற் பாகம் **நாட்டியக் கலை விளக்கம்.** அதில் ஆசிரியர் அரிய கலைக் குறிப்புகளைத் தருகிறார். இரண்டாம் பாகம் நாட்டியக் கலையின் நவரஸக் காட்சிகள் அடங்கிய இனிய பாடல்கள். இப் பாடல்கள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற் பயன்களையும் தருவன; வரிக்கு வரி கலை நுட்பங்கள் உடையன. சரியான கலை வாணரைக் கொண்டு இந்த நூலுக்குரிய கரணம் முத்திரை, அபிநயங்களுக் கேற்ற படங்களை வரைந்து, **நடனச்சித்திரம்** என்ற தனி நூலாக வெளியிடமுயல்கிறோம், அதனாலேதான் இதில் படவிளக்கம் சேர்க்க வில்லை.

இந்த நவரஸ நடனாஞ்ஜலியை அரங்கேற்றிப் பரப்ப முன் வந்துள்ள கலைவாணர்களுக்கு நன்றி.

புதுச்சேரி
21-2-48

புது யுக நிலையம்.

பொருள் அடக்கம்

நவரஸ நடனுஞ்ஜலி

I. நாட்டியக் கலை விளக்கம்

1. எங்கும் நடனம்

விண்ணும் மண்ணும் ஆடரங்கம்; சுற்றிலும் இடைவிடாமல், நடனக்காட்சிகள் நடக்கின்றன. இரவின் கருந்திரையைப் பிளந்துகொண்டு, மேகமார்பை ஊடுருவிப் பாய்ந்து பாய்ந்து பளிச்சிட்டு நடம் புரியும் மின்னலைப் பாருங்கள்! மின்னற் கொடிக்கு மேக கர்ச்சனை முழவு கொட்டுகிறது. சூரியன் கிழக்கே சாந்த நடனம் புரிந்து வந்து, தணல் மயமாக மேற்கே குதித்து மறையும் காட்சியைக் கண்டு நம் உள்ளம் இன்பக் கூத் தாடுகிறது! காற்றுப் பாட்டுடன் கூடிக் குலாவி நடனம் புரியும் மரஞ் செடி கொடிகளைப் பாருங்கள்! காற்றின் வேகத்திற்குத் தக்கபடி பூவும் இலையும் அசைவதைப் பாருங்கள்! இலைகள், முத்திரை காட்டுவது போலவும், காற்று, வீணையை மீட்டும் விரல் கள் போலவுங் காண்கின்றன! மலையிலிருந்து அருவி தடதட வென்று படிகத்தை உருக்கி விட்டதுபோல் ஆனந்த நடனமாடி வருவதைப் பார்த்தால், நம் உள்ளமும் ஆனந்தக் கூத்தாடும். ஆறு, மேட்டிலும் பள்ளத்திலும் ஜதிமிதித்துச் சென்று, எல்லை யற்ற கடலுடன் சேர்ந்து, அலைகளுடன் அலையாக நடம்புரியும் பிரம்மானந்தக் காட்சியைப் பாருங்கள்! கடலின் அகண்ட கீத மும், ஆவேச நடனமும் கண்ணுள்ள மட்டும் பார்த்துக்கொண்டு காதுள்ள மட்டும் கேட்டுக்கொண்டே யிருக்கலாம்! உலக வாழ்வே நடனந்தான்!

எல்லா வுயிர்களும் இன்பம் வந்தால் துள்ளிக் குதிக்கின்றன; துன்பம் வந்தாலும் சோகநடனமாடுகின்றன. விருப்பு வெறுப்பு, இன்பம் இடர், கசப்பு களிப்பு முதலிய எந்தத் தன்மையும் ஒரு முகக் குறியால், கைக்குறியால், இடுப்பு வளைவால், அங்க அசை வால் நமக்குப் புலனுகிறது. பேச்சுடன் கை வீச்சும், கால் வீச்சும், முகச்சுளிப்புகளும் இளிப்புகளும் களிப்புகளும் சேர்ந்துதான் உள்ளக் கருத்தை உணர்த்துகின்றன. உயிரே, நமது உள்ளத் தில் "பட் பட்"டென்று நடம்புரிந்துகொண்டிருக்கிறது. இரத்த

நாடிகளெல்லாம் "டப் டப்" என்று நடம்புரிகின்றன. இந்த நடனம் நின்றால், மனிதர் வாழ முடியாது. ஜட யந்திரங்களும் "ஓம்" என்று சத்த மிட்டுச் சக்கரஞ் சுற்றி, மின்சாரத்தாலும் ஆவியாலும் நடனம் செய்கின்றன. படச்சுருளை ஓட்டும் மின்சாரப் பொறியைப் பாருங்கள்! ஒரு சுரங்கத்தில் தங்கங் காய்ச்சும் பெரிய யந்திரங்களின் தாண்டவத்தைப் பாருங்கள்! எந்த யந்திரமும் நடனமாடிக்கொண்டுதான் வேலை செய்கிறது. இந்தச் சீவ யந்திரத்தின் விசை இதயத்தில் நடக்கும் திருவடி நடனமே!

2. நடனக் கலையின் வரலாறு

மனிதன் பேசத்தெரியு முன்பே முகக்குறி கைக்குறிகளாலும், உறுப்பசைவுகளாலும் தன் உணர்ச்சியையும் கருத்தையும் வெளியிட்டான். ஆதலால், மொழிக்கும் இசைக்கும் முன்பே **நடனம்** இருந்தது. மொழியும் இசையும் சேர்ந்து நடனக் கலைக்கு ஒரு வடிவ மீந்தன. சொல்லிற்கேற்ற கைக்குறி கண்குறிகளும், சொல்லாலான இசைகளுக்கேற்ற ஆட்டங்களும் இயற்கையாகவே உண்டாயின. இசைக்கேற்றபடி இராக தாளங்கள் உண்டாயின. இராக தாளங்களுக்கு, முதலில் குரலும் கைகளும் பயனையின. பிறகு, மனித அறிவும் சுவையும் முதிர முதிரப் புதிய புதிய இசைக்கருவிகளும் ஆடல்பாடல்களின் முறை வகுப்புகளும் அபிநய லட்சணங்களும் எழுந்தன. யாழ், குழல், முழவு முதலிய கருவிகள் மனிதக்குரலை இன்புறுத்தத் துணை செய்தன. இவ்வாறே இயற்கையான நடனம், பல கலைநுணுக்கங்களுடன் வளர்ந்து ஒரு சாத்திரமானது. தகுந்த அருட்புலவர் அதற்கு இலக்கணமும் இலக்கியங்களும் வகுத்தனர். இதுதான் நடனக் கலையின் இயற்கையான வரலாறாகும்.

3. வாழ்வே நாட்டியம்

வாழ்வே, ஒரு நாட்டியக் கலைதான்; மனித உணர்ச்சி தான் மூளையில் அறிவாகவும், நாவில் பேச்சாகவும், வாக்கில் கவியாகவும், குரலில் பாட்டாகவும், விரலில் கருவி யிசையாகவும் நடம் புரிகிறது. உணர்ச்சிதான் முகபாவனைகளாலும், தலை, மார்பு, கைகள், இடுப்பு, கால்கள், அங்கங்களாலும் அபிநயித்துச் சாடையில் பேசுகிறது. பேச்சுடன் அபிநயமும் கலந்தே வருகிறது. பேச்சில்லாமல் சாடையாலேயே உணர்ச்சியை

வெளிப்படுத்துகிறோம். ஒருவன் மனதை முகக்குறியும் கைக்குறியும் காட்டும். "ஹா, என்ன வியப்பு !....அப்பா, காரியம் ஒரு வழியாக முடிந்தது ! என் இன்பமே வா, வா ! என் கண்ணே சாப்பிடு !....ஐயோ, என்கதி இப்படியானதே ! ஹா, புலி புலி! பாம்பு, பாம்பு ! சை, இதென்ன உலகம் ! என்ன மனிதன், எல்லாம் அவ்வளவுதான் ! விடு கழுதையை ! அட மோசக்காரா, இப்படியா செய்தாய் !....நன்றாக வேண்டும், படு, படு !..ஹ..ஹ. ஹ, சிரிப்புத்தான் !..பூனையிலே கரடி ஒட்டுவதுபோல வந்தான். ஓடு, ஓடு, நாழியாயிற்று ! இதென்னடீ இந்த மனிதர் அதிசயம்; நன்றாயிருக்கிறதம்மா !......இப்படித்தானுண்டோ ? எனக்குப் பிடிக்கவே யில்லை ! நாதா! நாம் அன்றில்போலிருப்போம்..ஹா, ப்ராணநாதா !" இந்த உணர்ச்சித் தொடர்களை ஒரு கண்ணாடி முன் பேசிப்பாருங்கள் ; அப்போது உங்கள் அங்க அசைவைப் பாருங்கள் ! பேச்சுக்கு ஏற்ற அபிநயம் தானே வரும். பேசக் கூடத் தேவையில்லை; ஒருவன் தலையில் கைவைத்து முகத்தைக் கோணும்போது, கையை விரிக்கும்போது, அவன் உள்ளம் "ஐயோ, இப்படி வந்ததே " என்ற சோகத்தை விளக்கும். இரண்டு காதலர் இரண்டு கைகளையும் அகல விரிக்கும்போது, "நீயே என் ஆவி ; உன்னை என் உயிரில் அணைந்துகொள்வதே இன்பம் !" என்று மனம் அவருள்ளே பேசும். இப்படி இயற்கையாக வருவதே உண்மையான நாட்டியமாகும். அதில் சுருதியும் பாட்டும் போலவே, பேச்சும் அபிநயமும் பொருந்தியிருக்கும்.

நீண்ட காலமாக உலகில் இந்த அபிநய பாஷைதான் வழங்கி வந்தது. இன்னும் சில ஜாதியாரிடையே சைக்கினைதான் உள்ளுணர்வை வெளியிடுகிறது. தமிழே அறிந்த ஒருவன், தமிழே அறியாத ஒரு இந்திவாலாவுடன் பேசுவதானால், மொழி பயனாவதில்லை ; கைச்சாடையும் முகக்குறிகளுமே பயனாகும். அபிநயம், " **பேசா உலகமொழியாக** " வழங்குகிறது. அதை மனித சமுதாயம் நன்றாக உணர்ந்தால், எவரும் எவருடனும் பாஷை தெரியாமலே கைக்குறிகளாலும், கரணங்களாலும், முகச்சுளிப்புகளாலும் நன்றாகப் பேசலாம். "கானா காலியா ?" என்று பேசத் தெரியாத ஒரு தமிழன், ஓர் இந்திவாலாவைப் பார்த்து பத்ம கோச முத்திரையாக வலக்கை விரல்களை மடக்கி, வாய்க்கருகே வைத்துச் சாடை காட்டினால், உடனே இந்திவாலா, " காலியா " என்று பதிற் சொல்லுவான். " அவன் வயிறு காலி யில்லை, நிரம்பிவிட்டது " என்று நாமும் அறிவோம். அல்லது, அவன் ஆம் என்று தலையை அசைத்து வயிற்றைக் காட்டினாலும்

போதும். பசித்தவன் வலக்கையால், எக்கிய வயிற்றைக் காட்டி முகஞ் சோர்ந்தாலே, அவன் பசி மிகுந்தவன் என்றறிவோம். காதலர் மனத்தந்தியை முகக்குறிகளாலும் கண் குறிகளாலும் கைச்சாடைகளாலும் அனுப்பி, உட்கலப்பெய்துகின்றனர். அவள் ஏழாம் மாடிமேல் நின்றாலும், இவன் முச்சந்திப் புழுதியில் இருந்தாலும், கண் பார்வையாலும் உதட்டு மடிப்புகளாலும் காதல் தந்தி பறந்துபோகிறது ; கையும் சேர்ந்துவிட்டால், தந்தியின் வேகத்திற்குக் கேட்க வேண்டியதில்லை ! இப்படி இயல்பாக நமது மனித வாழ்வில், ஏன் விலங்கு வாழ்விலே கூட, அபிநய பாஷைதான் முதன்மையாக உணர்ச்சி யறியும் சாதனமா யிருக்கிறது.

4. உலகெங்கும்

இந்த அபிநய பாஷையை எல்லா நாட்டினரும் போற்றி வளர்க்கின்றனர். தற்கால நாகரிகத்தை எட்டிப்பாராமல் திரியும் காட்டு மக்களிடையே கூட்டமாகவும் தனித்தும் ஆடிக் களிக்கும் நடனக்கலை விளங்குகிறது. ஆஃப்ரிக்காவில் ஜூலுக்களும் **(Zulus)** ஹாடென்டாட்டுகளும் **(Hottentots)** பரவசமாக ஆடிக்களிக்கின்றனர். அவர்கள் வேட்டையாடுவதும் ஒரு நடனமே. வேட்டைப் பொருளை உண்டு களித்துக் கைகோத்துக் கூத்தாடுவதும் களிநடனமே. ஆஸ்திரேலியக் காட்டிலும் வனாந்திரத்திலும் வசிக்கும் பழங்குடி மக்களிடையே, கவர்ச்சியான நடனம் உண்டு. ஜாவா மக்களிடையே அற்புதமாக நடனக்கலை வளர்ச்சி பெற்றிருக்கிறது. பர்மியருக்கு உற்சாகமளிப்பது நடனம். ஜப்பானியர் தமது நடனக்கலையை அபாரமாக வளர்த்திருக்கிறார்கள். சீனருக்கு நடனம் நாடகம் என்றால் கொண்டாட்டந்தான். பாரசீகர் பாட்டிலும் நாட்டியத்திலும் சொக்குகின்றனர். ஐரோப்பியரைப் பற்றிக் கேட்கவேண்டியதில்லை ; வெள்ளையர் கலைமுறையில் நடனம் ஒரு சமுதாயத் தேவையாயிருக்கிறது. ஐரோப்பியர் சண்டையிலும் சமாதானத்திலும் ஆண்பெண் கைகோத்து நடம்புரிகின்றனர். பாட்டும், கொட்டும், விருந்தும், கூட்டமும் சேர்ந்து, அவர்கள் கால்களையும் கைகளையும் அசைத்து நடிக்க உற்சாகப்படுத்துகின்றன. பால் **(Ball Dance)** என்னும் கேளிக்கை, பலவகையான கலைநடனங்கள்—எல்லாம் ஐரோப்பியரிடையே முறையாக வளர்ச்சி பெற்றிருக்கின்றன. ஆனால், நாட்டியக்கலையின் உயிரையும், பயனையும், உயர்ந்த இலட்சியத்தையும் கண்டு போற்றியது நமது பாரத தேசமே யாகும் ; அதிலும் தமிழகமே யாகும் !

5. பரத நாட்டியம்

பாரத நாட்டின் நாட்டியக்கலையே **பரத நாட்டியம்.** முதன்மையாக பரதநாட்டியக்கலை தமிழகத்தில் நல்ல வளர்ச்சி பெற்று, இன்றும் பொலிந்து விளங்குகிறது. ஐரோப்பா ஜப்பான் முதலிய நாடுகளின் நடனம் பெரும்பாலும் கொட்டுக்குக் குதிக்கும் கூத்தே. புலன்களின் இன்பமே அவற்றின் குறிப்பாகும். நமது நாட்டின் நடனக்கலை ஜீவான்மா பரமான்மாவைக் கண்டு கலக்கச் செய்யும் ஒரு பக்தி யோக மாகும் !

நாட்டிய வேதத்தைப் பற்றிய ஐதிகக் கதையைக் கேளுங்கள் : இந்திராதி தேவர்கள், ஒரு காலம் நவ ரசானுபவங்களைக்காண ஒரு கலையைச் சிருட்டிக்கும்படி பிரம்மாவை வேண்டிக் கொண்டார்களாம். ருக் வேதத்திலிருந்து பொருளும், சாம வேதத்திலிருந்து பண்ணும், யஜுர் வேதத்திலிருந்து அபிநய பாவங்களும், அதர்வண வேதத்திலிருந்து நவரசமும் எடுத்துத் தொகுத்து, நாட்டியக் கலையாக்கி பிரம்மா பாரத முனிவருக்கு உபதேசித்து, " முனிவரே, இக்கலையை நன்றாக உம் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் பயிற்றி, உலகில் தெய்வ பக்தி பரவசத்தைப் பரப்பும் " என்றாராம். பரதர், ஐந்தாம் வேதமாக நாட்டிய சாத்திரத்தை அறிந்து, தம் நூறு பிள்ளைகளுக்கும் பல மாணவருக்கும் கற்பித்தார். ஆனால், சில அபிநயங்களைப் பெண்களே செய்ய முடியும் என்றறிந்து, அப்ஸர கந்தர்வர்களுக்கும் பயிற்றி, பரதமுனிவர் பரமசிவன் முன் அரங்கேற்றினார். மயன் வகுத்த பெரிய ஆடரங்கில், நாட்டியம் நடந்தது. முதலில் அசுரர்கள் தடுத்தனர். இந்திரன் அவர்களை வென்றோட்டினான். பரமசிவன் பூர்வரங்க பூஜை செய்து, நடனத்தைத் தொடங்கச் செய்தான். அவ்வாறே, இன்றும் அரங்க வழிபாடு நடந்தே ஆட்டம் தொடங்குகிறது. பரமேசனே, **தண்டு** முனிவரைக் கொண்டு **தாண்டவமும், பார்வதி**யைக் கொண்டு **லாஸ்யநடன**மும் பாரத முனிவருக்குக் கற்பித்தாராம். பாரதமுனிவர் நாட்டியக் கலைக்கு விரிவான இலக்கணம் வகுத்தார். பிரம்மா, நாட்டிய சாத்திரத்தின் நோக்கத்தை இவ்வாறு அருளினாராம் : " இந்த நாட்டியக்கலை, உங்கள் ஐம்புல மகிழ்விற்கு மட்டும் ஏற்பட்டதன்று. இது மூன்றுலகிற்கும் முக்குணவிகாரங்களையும் நவரச பாவனைகளையும் விளக்கி, மனிதர் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பயனையும் பெறவேண்டியே எழுந்த புனித வேதமாகும். இந்த மனோரம்மியமான ஆடல், தளர்வை நீக்கும்; வீரரை ஊக்

கும் ; அறிவிலிகளுக்கும் அறிவளிக்கும் ; புலவர் புலமையை வளர்க்கும் ; மன்னருக்கு உற்சாகமான விளையாட்டாகும் ; மனிதரின் தன்மைகளைச் சுவைபடக் காட்டி, வாழ்விற்குச் சிறந்த படிப்பினை யளிக்கும்."

தொன்றுதொட்டே நடனக்கலை யிருந்தது; அதை மாசுறுத்திய கொலையரக்கரை வீழ்த்தித் தெய்வத்தன்மை பெற்ற பெரியாரே இக்கலையைக் காத்தனர் என்பது இக்கதையின் பொருளாகும்.

6. புனிதக் கலை

நம் முன்னோர் நடனக்கலையை எவ்வளவு பயபக்தியுடன் போற்றினர் என்பதற்குச் **சிலப்பதிகாரத்**தில் ஒரு கதை காண்கிறது : இந்திர சபைக்கு அகத்தியர் வந்தார். இந்திரன் அவரை மகிழ்விக்க ஊர்வசியை நடனமாடச் சொன்னன். தோரிய மடந்தை (ஆடி மூத்தவள்) வாரம் பாடினுள். ஆனல் ஊர்வசி இந்திரகுமாரனை சயந்தன்மேல் காதல்கொண்டு, மயங்கி நின்ருள். அவனும் அவளிடம் மோகங்கொண்டான். இதனல் ஆட்டம் கெட்டது.; வீணை மங்கலமிழந்தது. முனிவர் முனிந்தார். " நீங்கள் மன விகாரத்தால் கலையைக் கெடுத்ததால், உலகில் பிறக்கவேண்டியது " என்று சாபங்கொடுத்தார். சயந்தன் **குழலாகப்** பிறந்தான். ஊர்வசி, மாதவியாகப் பிறந்தாள். தலைக்கோல் தானத்தில் மாதவி யாடும்போது, குழலான சயந்தன் துணை செய்ததால், சாபம் நீங்கியது. நம் முன்னோர்கள் நாட்டியக் கலையைப் பக்திசாதனமாக்கிப் புனிதமாகக் காத்தனர்.

வேதரிஷிகள், வேள்விகளில் நடனமாடினர். புத்தர், தமது சமயப்பிரசாரத்திற்கு நடனக்கலையையும் பயன்படுத்தினர். மஹாவீரர், தமது சமவ சரணத்திலும் ஸ்ரீ கோயில்களிலும் திவ்விய நடனத்தைப் புகுத்தினர். அருச்சுனன் விராடன் புதல்விகளுக்குப் பரதநாட்டியம் கற்பித்தான். நந்திகேச்வரர், தமது **அபிநய தர்ப்பண**த்தில் நாட்டியக்கலை அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பயனையும் பெறவே ஏற்பட்டதெனச் சொல்லுகிருர். மஹா கவி காளிதாஸன் **மாளவிகாக்னி மித்திரம்** என்னும் நாடகத்தில் நடனக்கலையை, இவ்வாறு போற்றுகிருன் :—

" நாட்டியக்கலை, தேவர் விழிகளுக்கு இனிய விருந்தாகும். உமாபதியே அதைத் தன் அர்த்தநாரீச வடிவால், தாண்டவம் லாஸ்யம் என இரண்டாக வகுத்தான். முக்குணங்களிற் பிறந்த பல ரச பாவனை கொண்ட மனித வாழ்வையும் உணர்வுகளையும்

இதில் நேராகக் காணலாம். பல பான்மையுணர்வுள்ள மனிதரை மகிழ்விக்கும் கலை, நாட்டியம் ஒன்றேயாம்."

பரத நாட்டியக்கலை நம்முடைய கோயில்களில் வளர்ந்து வந்தது. கடவுளுக்கே நம்மவர் நடராஜ வடிவம் தந்து ஆடுந்தெய்வமாக வணங்கினர். கோயில்களில் நர்த்தனமும் தாண்டவமும் வழிபாடாயின. கோயில் தூண்களிலும் சுவர்களிலும் அழகான நாட்டிய வடிவங்கள் செதுக்கப் பெற்றிருக்கின்றன. மதுரை, சிதம்பரம் கோயில்களில், அபிநய முத்திரைகளும் கரணங்களும் கூடிய நாட்டியக்கலைச் சித்திரங்கள் பல காண்கின்றன. நம் பெரியார்கள் கலையைக் கல்லிற் சமைத்து அழியாப் புத்தகமாக்கினார்கள். அந்தோ ! அந்தச் சித்திரங்களின் மேல் இன்று பிசுக்கும் மெழுக்கும் படர்ந்திருக்கின்றன ! நாட்டியக்கலை இப்போது உயிர்த்தெழுந்து, மறுமலர்ச்சி பெற்று வருகிறது. நமது சிற்பக் கலைக்கும் மறுமலர்ச்சி வரவேண்டும் ; அழகை நாம் போற்ற வேண்டும்.

7. பரத சாஸ்திர விளக்கம்

நமது இந்தியாவில் பலவகை நடனங்கள் உண்டு; வங்காளத்தில் தாண்டவ வகையைச் சேர்ந்த **மணிபுரி நடனம்** அதிகம். குஜராத்தில் கரகம், கும்மி, கோலாட்டம், பின்னற் கோலாட்டம் போலவே **கர்பா நடனம்** நடக்கிறது. கத்தியவாரில் ஒருவகை நடனம் நடக்கிறது. மலையாளத்தில் புராணக்கதைகளைக்கொண்ட **கதகளி** நடத்துகிறார்கள். நடனத்தில் இரண்டு பிரிவுகளுண்டு : ஆண்மையும், உக்கிரமும், வீரமுங் கொண்டு அங்கங்களை அசைத்துப் பாட்டின் பொருளுக்கேற்றபடி ஆடுவது **தாண்டவ**மாகும். தாண்டவத்திலும் அங்க அசைவு மட்டும் காட்டுவது ஒருவகை ; உடைகளை அடிக்கடி மாற்றிக்கொண்டு தில்லானுக்கள் பாடிக் குதிப்பது ஒருவகை. பிரத்யங்கம் உபாங்கம் அனைத்தையும் நளினமாக ரசபாவனையுடன் அபிநயித்து ஆடுவது **லாஸ்ய நடன**மாகும். தாண்டவம், ஆண்மை ; லாஸ்யம், பெண்மை. இரண்டும் **சிவபார்வதி நடன**மாகி, அர்த்தநாரீசருள் அடங்கியுள்ளன. லாஸ்யத்தில் தலைவன் தலைவி காதல் நடிப்பு சரிதம் ; அழகிய மயக்காட்டங்கள் மதுரமான யுவதம். **மார்க்கம், தேசியம்,** என்று நிருத்தம் இருவகை. பண்ணும் பரதமும் சேர்ந்து பல பாவனைகளில் நடிப்பது மார்க்கம். அரசர், செல்வர் மகிழ நடிப்பது தேசியம். தஞ்சை, மதுரை, இராமநாதபுரம், திருச்சி ஜில்லாக்களில் பரத நாட்டியம் இன்றும் ஜீவகளையுடன் விளங்குகிறது.

8. பரத சாஸ்திரம்

பரதம் என்பதை அறிவாளர் பலவகையாக ஆராய்கின்றனர். "பரதனால் போற்றப்பெற்ற கலை" என்பர் சிலர். "இராமன் தம்பி பரதன், சகுந்தலை மகன் பரதன், ஜடபரதர், பரத முனிவர் ஆகிய நான்கு பரதர் இருந்தனர்; இவருள் பிரம்மாவிடம் உபதேசம் பெற்ற பரதரே கலையை வகுத்து நாட்டிய சாத்திரம் எழுதினர்; சகுந்தலை மகன் பரதன் அக்கலையைப் பரவச் செய்தான்" என்பர் வேறு சிலர். "பரதம் என்பது தொகுதிச் சொல்: **ப**-பாவம், **ர**-ராகம் **த**-தாளத்தைக் குறிக்கும். "**பாவ-ராக-தாள** ஸமன்வய சாத்திரமே, பரதம்" என்று வேதாந்த தேசிகர் சொல்லுவதைப் பலர் ஒப்புவர். "பரதநாட்டிற்கு உரிய சிறப்பான கலையாதலால் **பரதம்**" என்பர் ஒரு சாரார். எப்படியோ காலச் சுழலைத் தப்பிப் பிழைத்து, நமக்கு இரண்டு நல்ல நாட்டிய நூல்கள் கிடைத்துவிட்டன: ஒன்று பரத முனிவரின் "**நாட்டிய சாஸ்திரம்**"; மற்றொன்று, நந்திகேச்வரர் அருளிய "**அபிநய தர்ப்பணம்**". இந்த இரண்டையும் சும்மா படித்தால் போதாது; தொழில் தெரிந்த புலவரிடம் கற்றாலே பயனுண்டு. பரத சாஸ்திரம் எழுதிய முனிவர் **பாணினி** காலத்திற்குப் பிறகே இருந்ததாகத் தெரிகிறது. அந்த அரிய நூலுக்கு கலி 4115—ல் (கி.பி. 1024), காஷ்மீரில் வசித்த **அபிநவகுப்தாசாரியார்** என்னும் புலவர் பெரிய விரிவுரை எழுதினர். நாட்டிய சாஸ்திரம் 36 அத்தியாயங்களில், நாடகம், சங்கீதம், கலை நுணுக்கம், இலக்கணம், நாட்டியம் ஆகிய அனைத்தையும் விரிவாக விளக்குகிறது; நடை மிகவும் எளிது; அதில் பரத நாட்டியக் கலையை, சுமார் பதின்மூன்று அத்தியாயங்களில் (7-19) பரதமுனிவர் விளக்குகிறார். இக்கலையைப் பரதர், **நாட்டியம், நிருத்தியம், நிருத்தம்** என மூன்று கூறுகப் பிரிக்கிறார்: (1) நாட்டியம், நாடகத்திற் பயனாவது; கதைப்பொருளுடன் இணைந்த ரசாபிநயத்தைக் கொண்டது; (2) ரசம், குணப் பண்புகளைப்பற்றி அபிநயித்தல் நிருத்தியம்; (3) நிருத்தம், தாளலயத்தை முதன்மையாகக் கொண்ட வரிக்கூத்து; இவற்றில் காதலும் கலைச்சுவையும் சேர்ந்து சுகுமாரமாக நடிக்கும் லாஸ்யநடனமும், எழுச்சியுள்ள வீரம் விளங்க ஆண்கள் நடிக்கும் தாண்டவமும் சேரும். தாண்டவம், எழுவகையாகும்; இன்பத்தைக் காட்டும் **ஆனந்தத்** தாண்டவம், மாலையில் ஆடும் **சந்தியா** தாண்டவம், சிவனும் உமையும் ஆடும் **உமா** தாண்டவம், **சிவகௌரி** தாண்டவம், **காளிகா**

தாண்டவம், **திரிபுர** தாண்டவம், **ஸம்ஹார** தாண்டவம். ஆங்கிகம், வாசிகம், ஆஹாரியம், சாத்விகம் என்று நடனம் நான்கு வகையாம். உடல், முகம், உறுப்புக்களைப் பொருளுக்கேற்ப அசைத்தல், ஆங்கிகமாகும். தலை, மார்பு, கை, கால், பக்கம், இடுப்பு-இவை அங்கங்கள். தோட்பட்டை, புஜம், புறங்கை, முன்கை, முதுகு, வயிறு, தொடை, குதிகால், கணுக்கால்-இவை பிரத்யங்கங்கள் அல்லது துணையுறுப்புக்கள்; கண் இமை, விழி, கருவிழி, கண்மணி, புருவம், பொட்டு, மூக்கு, கன்னம், உதடுகள் ஆகியவை உபாங்கங்கள். இவையனைத்தையும் பண்ணுைத்தசைத்தல், சரீர ஆங்கிகமாகும். முகத்தசைகளைப் பாவத்திற்கேற்றபடி அசைத்தல், முகஜமாகும். உடலை அலைத்தாடல் சேஷ்டிதமாகும். இவையெல்லாம் ஆங்கிக நடனமாகும். வாசிகம் ஆடும்போதே வாயால் பாடல், பேசுவதுபோல் உதட்டை அசைத்தல் முதலியனவாம். ஆடையணிகள், பூச்சுகள், அலங்காரங்கள், வேடங்கள் எல்லாம் ஆஹாரியமாகும். தற்காலம் "மேக்கப்" **(Make-up)** என்பதே அது. பலவிதமான மனோபாவங்களைக் காட்டி நடித்தலே சாத்விகமாகும்.

9. நடிகர் இலக்கணம்

எல்லாருக்கும் இன்பமளிக்கும் இந்த நாட்டியக்கலையைத் தமிழர் பலநூற்றாண்டுகட்கு முன்னரே வளர்த்து வந்தனர். கூத்திலக்கணங்களின் குறிப்புக்கள், நமக்குச் சிலப்பதிகாரம் அரும்பதம், அடியார்க்கு நல்லார் உரைகளாலேதான் தெரிகின்றன. அவை "**சுத்தானந்தம்**" என்னும் கூத்திலக்கணத்தைத் தழுவியன; அந்நூலும் மறைந்தது. இப்போது வடமொழியிலுள்ள **நாட்டியசாஸ்திர**மும், **அபிநய தர்ப்பண**முமே உருப்படியாக நமக்குக் கிடைப்பன. அவற்றுடன் பழந்தமிழ் நூல்களிலுள்ள குறிப்புக்களையும், மணிபுரி, கர்பா, ஐரோப்பிய நடனக் கலை ஆராய்ச்சிகளையும் கொண்டே இந்நூலை வகுக்கிறேன்.

நடனக்கலை, அங்கங்கள் நன்றாக வளைந்துகொடுக்கும் இளம் பருவத்தில் பழகத்தக்கது. ஐந்துவயதிலேயே தண்டியக்கொம்பு கொடுத்து, கலைதொடங்கி, பன்னிரண்டு வயதில் நிறைவாகக் கற்கலாம். நல்ல இளம்பொலிவு, உடலுறுதி, கால் வீசியாடக்கூடிய சுறுசுறுப்பு, ஊளைச் சதையின்றி கட்டுமஸ்தான உடல், முக மலர்ச்சி, வசீகரப்புன்னகை, அகன்ற விழிகள், நிவந்த மார்பு, இசைப்பயிற்சி, தாளஞானம், தாய்மொழிப் பயிற்சி, பாட்டின் பொருளுக் கேற்றபடி அபிநயம் பிடிக்கும் திறமை, நற்குணம்,

கலையில் ஆர்வம்-இவை நடிகைக்கு இலக்கணமாகும். ஆண் நடிகருக்கும் வசீகரமான உடலும் சுறுசுறுப்பும் வேண்டும். ஆடல் பாடல் அழகு வசீகரம் இருவருக்கும் பொது.

பூவிழுந்த கண்ணி, ஒற்றைக்கண்ணி, பொதுக்கை, எலும்பி, சக்தி யில்லாதவள், கூனி, இனிய குரலற்றவள், அவலட்சணி—— இவர்கள் நாட்டியத்திற்குப் பொருத்தமற்றவர்கள். நடிகன்,அறிவும் கல்வியும், கலைத்திறனும், வசீகரமும், இசைப்பயிற்சியும் பெற்றிருக்க வேண்டும். இருபாலாருக்கும் ஒழுக்கம் அவசியமாகும். நடிகர் உண்ணுமுன்பு, அல்லது உண்டு நான்கு மணி நேரத்திற்குப் பின்பே நடிக்கவேண்டும் ; சுகாதாரத்தைக் காக்க வேண்டும். காயசுத்தி அவசியம் ; மனதை உற்சாகமாக வைத்துக்கொள்ள வேண்டும். கலை வெற்றிபெற வேண்டுமானால், இருபாலாரும் இயன்றமட்டும் பிரமசரியம் காக்கவேண்டும். விஷயாதிகளை முடிந்தமட்டும் அடக்கி, ஜீவசக்தியை வீணாக்காமல் வளர்த்தால், அறிவும் திருவும், ஆற்றலும் பெருகும்.

10. ஆடலாசிரியன்

ஆடல் பாடல்களுக்குப் புத்தகம் பார்த்துக் காரியம் நடவாது. கடுமையான பயிற்சி வேண்டும்; ஆசிரியர் வேண்டும்; அழகன், புலவன், சமர்த்தன், கற்பனா சக்தி மிக்கவன், சொல்லும் குரலும் இனியன், சாத்திரமறிந்த அனுபோகி, பாட்டு, ஆட்டம், வாத்தியம் மூன்றிலும் தேர்ச்சிபெற்றவன், நவரசங்களையும் முத்திரைகளையும் பயிற்றவல்லோன் ஆடலாசிரியனாவான். பரத நாட்டியம், கதகளி, மணிபுரி, கர்பா, ஐரோப்பிய நடன முறைகளை அவன் அறிந்து, காலத்திற்கும், சபைக்கும் ஏற்றபடி பயனாக்கி, பொது மக்களுக்கு நடனக்கலையால் உள்ளக் கிளர்ச்சியும், உண்மை யுணர்ச்சியும் உண்டாக்க வேண்டும். ஆடலாசிரியன், தனியாகவும் கூட்டமாகவும் செய்யும் நடனங்களை அறிந்திருக்கவேண்டும்; தனிப்பதங்களுக்கு அபிநயம் பிடிப்பதுடன், பழைய புதிய கதைகளைக் கொண்டு இசை நாடகம் அபிநயலட்சணத்துடன் நடத்த வேண்டும். நடனக் கலை சும்மா கையுங்காலும் ஆட்டிக் குதிக்கும் கூத்தன்று ; அஃது உணர்ச்சியிலெழுந்து, உணர்ச்சியை விளக்கி, உணர்ச்சியைத் தூண்டும் ஒப்பற்ற உணர்ச்சிக் கலை. அதில் பண்ணும், மொழியும், அபிநய உணர்ச்சியுருக்கொண்டு, மனவுணர்ச்சியைக் கிளர்த்துகின்றன. அந்த உணர்ச்சியால், சபையோர் தெய்வ பக்தி,

தேச பக்தி, பொதுநலவூக்கம், வாழ்விற்கு உயர்ந்த ஆதர்சம், வீரம், தைரியம், கலைச்சுவை, ரசானுபவங்கள், உள்ளன்பு; சமுதாய ஒற்றுமை, ஆன்மநேயம் ஆகிய பயன்களைப் பெறலாம்.

11. கவிஞன்

ஆடலாசிரியனுக்குக் கவிஞன் உயிர் போலாவான். கவியின் வாக்கே அபிநயத்தை ஊக்குகிறது. கவிஞன் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணங்களையும், இராக தாள லய லட்சணங்களையும் நவரச பாவங்களையும், காலதேச வர்த்தமானங்களையும், நடிகர் திறமைகளையும், உலக வரலாறு களையும், பண்டைக் கதைகளையும் நன்கு யறிந்திருக்க வேண்டும். அவன் புனையும் பாட்டு, வெறும் சொற்றொடர்களா யிராமல், உணர்ச்சி ததும்பப் பல பாவனைகளில் அபிநயம் பிடிப்பதற்கு ஏற்றதா யிருக்கவேண்டும்; எளிதான சொற்களில் நிறைந்த இசையின்பமும், உயர்ந்தபொருளும், நடிக்க உற்சாகமான மெட்டும் கொண்டதா யிருக்கவேண்டும். இசை நாடகங்களில் இடை யிடையே வசனங்களும் விருத்தங்களும் வரலாம்.

12. இசைவாணன்

கவிதைக்கு உயிரளிப்பவன் பாடகன். அவன் ஆடலாசிரியருடன் ஒத்துழைக்க வேண்டும். அவரவர் தாய்மொழியில் பாடல் அமைவதே இயற்கையாகும். இசைவாணன் அகார சாதனம் செய்து, குரலை இனிமையாகப் பழக்கவேண்டும். குயிலும் கிளி யும் வண்டும், குழலும் யாழும் அமுதுங்கொண்ட இனிமைகளைக் குழைத்தெடுத்த குரலும், ஏழிசைகளில் ஏறி யிறங்கிக் காற்றைப் போல் சுதந்தரமாக விளையாடும் பண்ணினிமையும், தெளிவாக மொழிகளை உச்சரித்துப் பொருள் நன்கு விளங்கும்படி பாடும் புலமையும், இசைப்புலவனுக்கு வேண்டும். முதன்மையாக நாட்டியப் பாடகன் பதங்களை எல்லாருக்கும் விளங்கும்படி பாட வேண்டும். அப்போதுதான் பாட்டின் பொருளுக்கேற்ற அபிநயச் சுவையை எல்லாரும் உணரமுடியும். பாடகன் இசையொழுங்கிற் கேற்றபடி எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல், குடிலம்,

ஒலி, உருட்டு, தாக்கு ஆகிய எட்டுச் செயல்களைப் புலப் படுத்த வேண்டும். ஆரோகணம், அவரோகணம், டால், ஸ்புரிதம், கம்பிதம், ஆகதம், பிரத்யாகதம், திரிபுச்சம், ஆந்தோளனம், மூர்ச்சனை ஆகிய தசவித கமக லட்சணத்துடன், குரலை வன்மை மென்மை சமநிலை பார்த்து நான்கு காலத்திலும் பாடவேண்டும். அதனோடு பொருளுக்கேற்றபடி பாடலின் நவரச உணர்ச்சியையும் காட்டவேண்டும். பாடும் முறையிலேயே பொருள் எதிரே நடமாடுவதாகச் சபையோர் உணரவேண்டும். அப்போது அபிநயம் உள்ளத்தை அள்ளும். சரளி, ஜண்டை, ஸ்தாயி வரிசைகள், எட்டு அலங்காரங்கள், கீதங்கள், வர்ணங்கள், பல்லவி, அனுபல்லவி சரணம் கொண்ட கீர்த்தனங்கள், பதங்கள், ஜாவளிகள், சிந்துகள், பள்ளுகள், தில்லானுக்கள் முதலிய எல்லா வகைப் பாடல்களும் இசைவாணன் அறிந்து சமயத்திற்கேற்றபடி பயன்படுத்த வேண்டும் ; பழைய மெட்டுக்களுடன் காலத்திற்கேற்றபடி புதிய மெட்டுக்களும் தெரிந்திருக்க வேண்டும்.

இசைக்கலை மிக்க விரிவானது. ஆரோகண அவரோகணக் கிரமத்தில், நிறைவாக சுத்தமாக அமைந்த இராகங்கள் மேளகர்த்தா ராகங்களாம். ஸ்வரங்கள் குறைந்தும் வளைந்தும் கூடியும் வருவன ஜன்ய ராகங்களாம். மொத்தம் 72 மேளகர்த்தா ராகங்களும், சுமார் 100 ஜன்ய ராகங்களும் உள்ளன. இவற்றைத்தவிர இந்துஸ்தான் ராகங்கள் பல தமிழகத்திலும் கலந்து முழங்குகின்றன. இங்கே நமக்கு நாட்டியக்கலைக்கேற்ற பண்களே குறிப்பு. இந்த நூலுக்கு இலக்கியமாய் அமைந்துள்ள “ நவரஸ நடனுஞ்ஜலியில் ” எளிதாகப் பாடக்கூடியனவும், கேட்பதற்கு இனிமையாகவும், காலெடுத்து வைத்து நடனமாடத் தோதாகவும், உற்சாகந் தரத்தக்கனவாகவும் உள்ள பண்களையே கையாண்டிருக்கிறேன். இதில்வரும் இராகங்கள் பெரும்பாலும் சங்கராபரணம், தோடி, ஹனுமத்தோடி, கனகாங்கி, சக்ரவாகம், நடபைரவி, ஆனந்த பைரவி, பைரவி, சிந்து பைரவி, தீர சங்கராபரணம், காம்போதி, எதுகுல காம்போதி, சாவேரி, அசாவேரி, அடாணு, கானடா, உசேனி, ஆரபி, காமாசு, காபி, பியாகு, மாண்டு, நாதநாமக்கிரியை, பரசு, தன்யாசி, சுரட்டி, செஞ்சுரட்டி, நாட்டை, நாட்டைக்குறிஞ்சி, கேதாரம், நீலாம்பரி, ஸஹானு, பூர்விகல்யாணி, கல்யாணி, புன்னுகவராளி பந்துவராளி, வராளி, பிலகரி, மத்யமாவதி, மணிரங்கு, ஸ்ரீ, மோகனம், முகாரி, மாஞ்சி, ஹம்ஸத்வனி முதலிய பிரபல ராகங்களேயாம். இவற்றில் பாடகன் நல்ல தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

13. முழவோன்

பாட்டிற்குச் சுருதி மாதா, தாளம் பிதா. தாளமின்றி நடனமில்லை. அபிநயத்திற்குப் பாட்டும், ஆட்டத்திற்குத் தாளமும் வேண்டும். பாட்டிற்கேற்ற தாளம், தாளத்திற்கேற்றபடி மத்தள கெத்துக்கள் அமையும். துருவம், மட்டியம், ரூபகம், ஜம்பை, திரிபுடை, அட, ஏக தாளங்கள் ஏழாம். இவை ஒவ்வொன்றும் திச்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம் என்று ஐந்து ஜாதி பெறும். 7×5=35. இந்த முப்பத்தைந்தும் பஞ்ச கதி பேதத்தால் 175 நுட்பத் தாளங்களாக விரியும். இவையும் ஒன்றிலொன்று கலந்து இன்னும் விரியும். அனுத்ருதம், த்ருதம், லகு, குரு, ப்லுதம், காகபாதம் என்ற தாள அங்கங்கள் ஆறும் அறிந்து, அததற்கேற்ற அக்ஷரங்களைக் கணக்கிட்டுத் தாளம் அடிக்கவேண்டும் ; தாளஜாதி 108-ன் கணிதமும் எடுப்பும் முழவோனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். “ தரிகிட தக திமி ததிங்கிணதோம், தளாங்கு தரிகிட தகஜிமி, தகஜிமி தாகிட தகதீம் தின்ன தகதகிட தோம் ” என்று மனதுட் சொல்லிக் கொண்டே கை புரள வேண்டும். கூத்திற்கேற்றபடி தத்தக்காரங்களை ஒருவர் சொல்லி வரலாம். நர்த்தனம் செய்யும்போது மிருதங்கம் பலமாகக் கேட்கலாம். அபிநயம் பிடித்து, ரசபாவங்களைக் காட்டும்போது அடக்கி வாசிக்கவேண்டும். அப்போதே பாட்டின் பொருள் விளங்கும். முழவாசிரியனுக்கு ஆடல் வகை, பாடல் வகை, இசை நுணுக்கம், இயலிசை நாடகத் தமிழறிவு, தாளப் புலமை, கூத்திலக்கணம் ஆகியவை தெரிந்திருக்க வேண்டும்.

14. வாத்தியங்கள்

நமது நாட்டில் நூற்றுக்கணக்கான இசைக்கருவிகள் உண்டு. அவற்றுள் பரதநாட்டியத்திற்கு இனிமை தருவன : குழல் யாழ், பிடில், சாரந்தா, ஸிதார் ஆகியவையாம். முற்காலத் தமிழர் யாழ் குழல் இரண்டையும் சிறப்பாகக் கையாண்டனர். அக்காலம் கடத் தொண்டைக்கு ஒத்தூதும் சுருதி யில்லை. சிறிய நாதஸ்வரம், குழல் போன்ற சத்தமிருந்தால்,வைத்துக்கொள்ளலாம். அக்காலம் ஆடி முதிர்ந்த பெண்களே வாரம் பாடினர். நட்டுவன் தைதா தகதிமி என்று தத்தக்காரங்களைச் சொல்லி ஆட்டி வைத்தான். யாழும் குழலும் மத்தளமும் பாட்டுடன் இசைந்து ஆட்டத்திற்கு எழுச்சி தந்தன.

குழல்

சந்தனம், வேங்கை, மூங்கில், வெண்கலம், கருங்காலி முதலியவற்றால் குழல் செய்யப்படும். வேய்ங்குழலே இனிது, எளிது. குழல் சுமார் 20 விரற்கடை நீளமுடையது ; நான்கு விரற்கடை சுற்றளவுடையது. அதன் இடப்புறவாய் அடைத்து வலப்புற வாய் திறந்திருக்கும். முதல் வாயிலிருந்து ஏழு விரற்கடை, வளைவாயிலிருந்து இரண்டு விரற்கடை தள்ளி, நடுவிலுள்ள ஒன்பது விரற்கடையில் எட்டுத் துளையிடுவர். ஒன்று தொழிற்படாத முத்திரை. மற்றை ஏழிலும் ஏழு விரல்களை வைத்து வாசிப்பர். இடக்கையில் நடு மூன்று விரல்கள், வலக்கையில் கட்டைவிரல் தவிர மற்ற விரல்களைத் துளையில் வைத்து வாசிப்பர். மூச்சைப் பெய்து வாசிக்கும் குழல், நாதஸ்வரம் போன்ற வாத்தியங்கள் மிகவும் சிரமமானவை.

பாடலாசிரியனை ஒத்த இசையறிவு குழலாசிரியனுக்கும் வேண்டும். ஆரோகண அவரோகணக் கிரமத்தில் வர்த்தனைகளை நான்கு காலத்திலும் வாசிக்க வேண்டும். பாடல்கள் குரலுக்கும் யாழுக்கும் முழவுக்கும் இசைந்தபடியே, நாட்டிய அபிநயத்தைக் குறித்து, சமயம் போல மெல்லவும் உயர்த்தியும் விரைந்தும் இசைச்செறிவுடன் ஒத்து வாசிக்க வேண்டும் குழலோன்.

யாழ்

யாழ் பலவகையாகும். மொஹெஞ்சதாரோ புதைபொருள்களில் யாழ் காண்கிறது. அக்காலம் **ஆள்** என்று அதன் பெயர் வழங்கியதாம். ஆளைப் பார்த்தே முற்காலத் தமிழர் யாழை அமைத்தனர். இடை, பிங்கலை, சுழுமுனை ஆகிய யோக நரம்புகள் இணைந்த மேரு தண்டத்தின் அமைப்பைப் போன்றதே யாழ். அது மனிதக்குரலைப்போலவே தசவித கமகங்களுடன் முரலும். பேரி, சகோடம், மகரம், செங்கோடு என யாழ் நான்கு வகையாகும். இவற்றிற்கு முறையே 21, 16, 17, 7 தந்திகள் உண்டு. இப்போது வழங்கும் வீணை செங்கோட்டியாழ்போன்றதே. கோட்டு, யஸ்ராஜ், ஸித்தார், ஸ்வரகெத்து, தம்பூரா எல்லாம் அதன் வழி வந்தனவே. வீணையின் மார்பில் அனுமந்திரம், மந்திரம், பஞ்சமம், சாரணை ஆகிய நான்கு இசைத்தந்திகள் உள்ளன. இவற்றை இடக்கை விரல்களால் அழுத்தி மீட்டவேண்டும். பக்கத்தில், அனுசாரணை, உயர்பஞ்சமம், உயர்சாரணை ஆகிய மூன்று தந்திகள் உள. இவை சுருதி கூட்டவே பயனாகும். வலக்

கை இடைவிடாமல் மேளம் செய்யவேண்டும். வீணையில் இரண்டு ஸ்தாயி மெட்டுக்கள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் பன்னிரண்டு வீதம் இரண்டிற்கும் 24 மெட்டுக்கள் உண்டு. நான்கு கம்பிகளுக்கும் மொத்தம் 96 மெட்டுக்கள் அல்லது வீடுகள் உள.அக்காலத் தமிழர் யாழில் எழு பாலைப்பண்கள் முழக்கினர் ; 103 பண்கள் அறிந்திருந்தனர். தேவாரங்களில் இவை அமைந்திருந்தன. நம்பியாண்டார் நம்பிக்குக் கிடைத்தவை 24 பண்கள் அடங்கிய தேவாரங்களே. மற்றவை யெல்லாம் பிற்காலம் எழுந்த இசை நூல்களில் புகுந்தன. யாழிசைப் புலவன், மேளகர்த்தா ஜன்ய ராகங்களை யெல்லாம் கமக சுத்தமாக மீட்டி, குழலோன் இசை வாணன் முழவோன் இவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். விரல், யாழிலும் குழலிலும் தவழ்ந்து முழவதிர இன்னிசை மீட்டி ஆட்டத்தை ஊக்கவேண்டும். ஸித்தார், கிட்டார், கிளாரிநெட், சாக்ஸாபோன், தபேலா, டோலக், கஞ்சிரா, மோர்சிங் முதலிய வாத்தியங்களும் சதிருக்குத் தகுந்தவையே.

15. ஆடரங்கம்

அரங்கிற்கு நல்ல இடம் வேண்டும். கூட்டம் அதிகம் வருமாதலால், ஊரின் சுகாதாரம் கெடாமலிருக்க வேண்டும். கோயில், குளம், பள்ளி, அந்தணர் இருக்கை, ஊருணி, கிணறு சோலை, புட்கள் முதலியவற்றிற்குத் தீங்கில்லாமல், ஈளை, உவர், களி, சாம்பல் நாற்றம், பொடிமண் இல்லாமல் ஊருக்குநடுவே, தேரோடும் வீதிகளுக்கு எதிர்முகமாக நிலம் அமைக்கவேண்டும். காலத்திற்கும் மக்கள் கலைச்சுவைக்கும் தகுந்தபடியே இடமும், பொருளும், அரங்கும், காட்சிகளும், வேடங்களும் அமைய வேண்டும். இதற்கு இது என்று கலைவாணரே தீர்மானிக்க முடியும். இக்காலம் கலைச்சுவை பெருகி வளர்ந்திருக்கிறது. பாட்டு, சதிர் என்றால் ஏராளமான பேர்கள் பார்க்க வருகிறார்கள். அத்தனை பேரும் அடக்கமாக உட்கார்ந்து அமைதியாகக் கேட்கும்படி விசாலமான இடம் அமையவேண்டும். அரங்கில் வேடங்கட்டும் இடம், ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே அமைய வேண்டும். ஆணுக்கு ஆண், பெண்ணுக்குப் பெண், வேடம் புனையத் துணை செய்க ! அதற்கு வேண்டிய சாதனங்களெல்லாம் ஒருவர் பாதுகாப்பில் தயாரா யிருக்கவேண்டும். சாயங்கள், வர்ணங்கள், முகமூடிகள், கதைக்கேற்ற ஆடையாபரணங்கள், ஆயுதங்கள், காட்சிக்கேற்ற படங்கள், திரைகள், தட்டிகள் ஆகிய இவை கலை

நிபுணர்களால் ஜோடிக்கப் பெறவேண்டும். மலை, ஆறு, சோலை, மலர்வனம், கோயில், குளம், சிறுமனை, மாளிகை முதலிய காட்சிகள், திரைப்படம், அட்டை அல்லது தட்டிகளாலமைந்து, காட்சிக்கேற்ற பின்னணிகளாக விளங்கவேண்டும். கண்ணனும் இராதையும் மலர்வனத்தில் சந்திக்கிறார்கள் என்றால் அரங்கில் வனக் காட்சி அவசியம் இலகவேண்டும். அதன்முன் இராதா கிருஷ்ண நடனம் நிகழவேண்டும். அரங்கில் ஆடுவதற்குப் போதிய இடம் அளந்துவிட்டு, பக்க வாத்தியக்காரருக்குப் பக்கத்தில் வசதியாக இடந்தரவேண்டும். நடிகருக்குப் பின்னே காட்சி ஜோடிப்பு பளிச் சென்று தெரியவேண்டும். ஜோடிப்பில் நடிகர் மறைந்து மறைந்து விளையாடத் தகுந்த திரைகள் வேண்டும். நடிப்பவர் வர, செல்ல, பக்கத்தில் வாயிலும், திரைநடுவிலேயே ஓடியாடப் படுதாக்களும் அமைக்கவேண்டும். அக்கால நடனங்களில் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என்று மூன்று திரைகள் அமைத்தனர். அரங்கெல்லையில் வாரம் பாடும் தோரிய மடந்தையர், நட்டுவன், இசைவாணன், யாழோன், பிடிலோன், குழலோன், முழவோன், தாளக்காரன், சுருதிக்காரன் ஆகியவர்களே கச்சிதமாக இருக்கவேண்டும். ஓர் ஆட்டம் நடந்ததும் சிறிது இளைப்பாற இருபாலாருக்கும் தனித்தனி இடங்கள் பின்னால் அமைந்திருக்க வேண்டும். ஒரு நடன அணி முடிந்ததும் அதன் நடிகர் இளைப்பாறும்போது, மற்றோரணி இன்னொரு காட்சியை நடத்தவேண்டும் ; அல்லது இன்னிசை முழங்க வேண்டும்.

16. அவை

அரங்கின் முன்னே சபை விசாலமாக அமைந்திருக்கும். சபையில் பெண்களுக்குத் தனியாக இடம் அமைக்கவேண்டும். அபிநய தர்ப்பணம் சபை ஒழுங்கைப்பற்றி நன்றாக விளக்குகிறது. சபை ஒரு கற்பகம். அதற்கு வேதங்களே கிளைகள். கலை நூல்களே மலர்கள். புலவர்களே மலரில் தேனுண்ணும் வண்டுகள். சபையில் தகுந்த புலவர், கலை வளர்க்கும் செல்வர், அறிஞர், கவிகள், இரசிகர், ஒழுக்கத்திற் சிறந்த பெரியார் முன்னிலையில் இருக்கவேண்டும். அவர்கள் நாற்காலிகளில் அமர்ந்திருப்பார்கள்; இவர்களுக்கு இடப்பக்கம், பெண்கள் உரிய இடத்தில்அமர்வார்கள் ; பின்புறம் மற்றப் பொதுஜனங்கள் வீற்றிருப்பார்கள். அவர்களுக்குத் தட்டுப் பலகைகள் அமைக்கலாம். சபாநாயகன் ஊர்மதிக்கும் உத்தமனாக, கலைத்தேர்ச்சி பெற்றவனாக இருக்க

வேண்டும். கூத்துத் தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே ஆடுவோர், காட்சி விளக்கம், கட்டண விவரங்களை அச்சிட்டுப் பரப்ப வேண்டும்.

17. தலைக்கோல்

முற்காலம் அரங்கேற்றுவிழா சிறப்பாக நடத்தி, ஆடற்பெண்ணை ஊர்த் தலைவரும் செல்வரும் தலைக்கோலீந்து ஆடச் சொல்வது வழக்கம். புண்ணிய மலைகளில் அறுத்த மூங்கிலால், அல்லது பகைவரிடம் கொண்ட வெண்குடைக் காம்பால் எழு சாணுள்ள தலைக்கோல் தயாரித்து, பூண்பிடித்து, அணிவேலைகள் செய்து அலங்கரித்து, மாலைசூட்டி ஊர்வலஞ் செய்துவந்து கவியின் கையில் கொடுத்து வாங்கிச் சபைத்தலைவன், ஆடும் பெண்ணிடந் தருவதுண்டு. தலைக்கோல் விழாவில் மன்னரும், அமைச்சரும், வீரரும், கலைச்செல்வரும் கலந்துகொள்வார்கள். தலைக்கோல் பெற்ற கணிகை, அரங்கில் வலக்காலை முன்வைத்தேறுவாள். ஆடிடம் முக்கோல், நிலையிடம் ஒருகோல், பாடகர்க்கு ஒரு கோல், குயிலுவர் நிலையிடம் ஒருகோல் என்ற ஒழுங்குப்படி அரங்கில் அவரவர் இடத்தில் இருப்பார்கள். கோல் என்பது வளர்ச்சி பெற்ற ஆளின் 24 பெருவிரல்கொண்ட அளவை. அரங்கின் அகலம் எழு, நீளம் எட்டுக்கோல் ; மேடை உயரம் ஒருகோல் இருக்கும். முதன் முதல் அரங்கு வழிபாடு நடக்கும். இது தீமையை ஒட்டி நன்மை விளையச்செய்வது. இதை அரங்க பூஜை என்பர். பிறகு, அலாரிப்பு : " தா அ அம் தித்தாம், க்ருதக தைஇ தந் தாம் தகதிமிதகஜணு தளாங்குதரிகிட தோம்...." என்று ஒரு ஆவர்த்தனம் அடித்ததும் நடன மாது சபையில் வந்து குதிப்பாள். பிறகு நடன ராஜரான நடராஜா கீதம் நடக்கும். அதன் பிறகு சகல கலைகளுக்கும் நாயகியான கலைமகள் வணக்கம் நடக்கும். அதிலேயே நடனக்கலையின் இலக்கணம் விளங்கும். அதன்பிறகு சப்தம், ஸ்வர ஜதி, தான, தாள, பதவர்ணங்கள், பதங்கள், ஜாவளி, தில்லாணு, சுலோகம், மங்களம் என்ற வரிசையில் நடனக் காட்சிகள் தொடரும்.

18. நவ ரசங்கள்

நடனக் காட்சிகளுக்கு அபிநய நிறைவுள்ள பாடல்கள் வேண்டும். தனிப்பாடல்கள், அல்லது ஒரு சம்பவம், கதை, இயற்

கைக் காட்சி இவற்றை ஒட்டிய பாடல்கள் ஏற்றனவாம். பாடல்களுக்கு இடையே சிறிது வசனங்களும் கலக்கலாம். பாடல்கள் இனிய மெட்டுகளில், விறுவிறுப்பான எளிய நடையில், தாள லட்சணங்களுடன் அமைந்திருக்க வேண்டும்; உள்ளுணர்ந்து பொருளை அனுபவித்து அபிநயம் பிடிக்கவேண்டும். உணர்ச்சி தான் நடனத்தின் உயிர். மனவுணர்ச்சிகள் ஒன்பது சுவைகள் உடையன. அவையே நவரசம் ஆகும். அவற்றை முடிந்த மட்டும் விளக்குகிறேன் :—

1. **அற்புதம்** (வியப்பு) : கண் வாய் கைகளை அகல விரித்தல், அங்காத்தல், கையைக் கொட்டி முகவாய்க்கட்டையில் வைத்தல், உடல் ஒரே நிலையில் தம்பித்தல், ஆச்சரியமாகிப் பேச்சடைத்தல் முதலியவற்றால் காட்டலாம். நிறம் மஞ்சள்.

2. **சினம்** : மூக்கு விரிதல், கண் சிவத்தல், நெருப்பெழப் பார்த்தல், விழியை உருட்டல், நெற்றி சுருங்கல், புருவங் குவித்தல், கழுத்து விடைத்தல், தலையை வக்கரித்தாட்டல், தசை யிறுகல், விரல்களை மடக்கிக் குத்தல், கை ஓங்கல், உடல் படபடத்தல், நறநறவென்று பல்லைக் கடித்தல், காலை அழுத்தி மிதித்தல் முதலியவற்றால் சினக்குறி காட்டலாம். நிறம் சிவப்பு.

கையால் தடுத்தல், விரல்களை உதறல், முகவிகாரம், பல் இறுகல், கண்டிப்பான பேச்சுக் குரல், ஆத்திரம், சினம், முகச் சுளிப்பு இவற்றால் வெறுப்பைக் காட்டலாம்.

முகவாட்டம், மார்தட்டி அகந்தை பேசல், வயிற்றெரிதல், வயிற்றைத் தடவல், பல்லைக் கடித்தல், கையை நெரித்தல், கண்ணை உருட்டிப் பார்த்தல், மந்தமாகச் சிந்தித்தல், அழுதல், ஆவலாதி, மார்பில் அடித்துக்கொள்ளல் முதலியவற்றால் பொறாமையைக் காட்டலாம்.

3. **கருணை** : மலர்ந்த முகம். தெளிந்த இன்சொல், அடக்கம், அன்பு, ஆசிகாட்டல் முதலியவற்றால் வெளிப்படும்; புகைநிறம்.

4. **குற்சை** (இழிவு) : முகஞ் சுளித்தல், "சைசை" என்று கையை உதறல், கையை இடித்துக்காட்டல், உம் என்று எரிந்து விழல், பேசல், முதலியவற்றால் இழிவு காட்டலாம்; நிறம் நீலம்.

5. **சாந்தம்** (அமைதி) : உதடும் கண்ணும் சாதாரணமாகஇருத்தல், முகவிகாரமின்மை, சுபாவமா யிருத்தல், தியான பாவனை முதலியவற்றால் விளங்கும். வெண்ணிறம்.

6. **இன்பம்** (சிருங்காரம்): காதலின்பம், கடவுளின்பம்,வெற்றியின்பம் ஆகிய பலவகை இன்பங்கள் உண்டு. சிருங்கார ரசம் என்தைப் பெரும்பாலும் காதலுக்கே கொள்கின்றனர். சிருங்காரம்

என்றால் அழகின்பம். கண் மலர்ந்து, புன்சிரிப்புச் சிரித்து, கை தட்டி, குரலுயர்த்தி இன்பத்தைக் காட்டலாம். இனிய முறுவல், நாணப் பார்வை, கோணப் பார்வை, மெல்லிய குரல் இவற்றால் காதலைக் காட்டலாம். கபில நிறம்.

7. **அச்சம் :** அஞ்ச வரும் பொருளைச் சுட்டி வாயையும் கண்ணையும் அகலத்திறத்தல், புருவஞ் சுருக்கல், கை உயர்த்தல், உடல் நடுக்கம், மார்த்துடிப்பு, பெருமூச்சு, மெல்லிய குரல், பதற்றம் முதலியவற்றால் அச்சச் சுவை காட்டலாம். கறுநிறம்.

துன்பம் :—விரிந்த கூந்தல், தலையிற் கைவைத்தல், மயிர் பறித்தல், அழுகை, அலமரல், காலை அழுத்தி மிதித்தல், கண்ணை மேலே பார்த்தல், தலையைத் தொங்கப்போடல், முகத்தை முழந்தாளில் வைத்தல், முன்தானையால் மூடல், கண்ணீர் துடைத்துக்கொண்டு விம்மல், நிலைப்பின்றிப் புலம்பல் முதலியவற்றால் சோகரசம் அல்லது துன்பச் சுவையை விளக்கலாம்.கார் நிறம்.

8. **நகைச்சுவையில்** உவகைச் சிரிப்பு, பெருநகை, இடிநகை, கேலிச்சிரிப்பு, வஞ்சப் புன்னகை, வெறிநகை, பைத்தியச் சிரிப்பு இடர்க்கண் நகுதல், செருக்கு நகை எனப் பலவகை உண்டு. உதட்டை மலர்த்தியும் வாயை " ஓ " எனத் திறந்தும் கைகொட்டியும் குதித்தும் நகைச்சுவையைக் காட்டலாம். வெண்ணிறம்.

9. **வீரம் :** வில் தெறிப்பது போலக் கையை முன்னே தாக்கல். மார்பில் வலக்கை வைத்துச் சபதங்கூறல், உரத்த பேச்சு, தைரியம், தலை நிமிர்ந்து விழியை அகற்றல், காலைப் பாய்ச்சலில் வைத்தல் முதலியவற்றால் விளங்கும். பொன்னிறம்.

அற்புதம், கோபம், கருணை, குற்சை, சாந்தம், சிருங்காரம், பயம், பெருநகை, வீரம் என ரசங்கள் ஒன்பதாயினும், அவற்றுள் துன்பம், வெறுப்பு, பொறாமை போன்ற எத்தனையோ உபரசங்கள், உட்பிரிவுகள் உண்டு. குணதொந்த விகாரங்கள் மலிந்த வாழ்வில், ஆயிரக்கணக்கான நுட்ப உணர்ச்சிகளைக் காண்கிறோம். இந்த ரசங்களை யெல்லாம் அபிநய பாஷையில் விளக்குவதே பரதநாட்டியத்தின் குறிப்பாகும்.

கைவழி கண்ணும் கண்வழி மனமும் மனமுடன் உணர்வும் உணர்வுடன் சுவையுமாம். இதுவே ரஸபாவனையின் இலக்கணமாகும்.

உணர்வும் நிலையுணர்வு அலையுணர்வு என இருவகை. மனதில் நிறைந்து மாறுதிருப்பது நிலையுணர்வு; அது கடல்போலும். அடிக்கடி மாறி வருவது அலையுணர்வாம்—அடியில் வரும் அபிநயச் சொற்களின் பின்னுள்ள காற்புள்ளி விளக்கத்தையும்,

அரைப்புள்ளி பயன்களேயும் குறிக்கும். இவற்றை அறிந்த கலே ஞரிடமே அறிக—படத்தினும் பார்த்தறிவதே அறிவாம்.

19. தலேக்குறிகள்

1. சமம், இயற்கையான சமநிலே ; தியானம், தோத்திரம், திருப்தி, உதாசினம்.

2. துதம், மெதுவாக மண்டையாட்டல் ; கையசைத்தல், மன மின்மை, திகைப்பு, நிராதரவு.

3. விதுதம், விரைவாக மண்டையாட்டல் ; தடிமன், சூடு, பயம், குடிவெறி.

4. ஆதுதம், சற்று நிவந்து திருப்பல் ; பெருமை, பக்கப் பார் வை, செருக்கு.

5. அவதுதம், சற்று நிவந்து தலேயைக் குனித்தல் ; கேள்வி, " நில் " எனல், அழைத்தல் ; பேச்சு.

6. கம்பிதம், தலே மேலும் கீழும் அசைத்தல் ; அறிமுகமா தல், மனத்தாங்கல், தருக்கம், அச்சுறுத்தல், கேள்வி, நிறுத்து எனல்.

7. அகம்பிதம், தலே உயர்த்தி மெதுவா யசைத்தல் ; உப தேசம், விசாரம், ஏதாவது சொல்லல்.

8. ப்ரகம்பிதம், முன்னும் பக்கத்தும் தலே அலேதல், அற்புத ரசம், பாட்டு, பிரபந்தம்.

9. உத்வாஹிதம், சட்டென்று தலே நிமிரல் ; பெருமை, என் னுல் முடியும் என்பது.

10. அஞ்சிதம், தலேயைச் சிறிது பக்கச் சார்பாகத் திருப்பல்; காதல், அருவருப்பு.

11. நிஹஞ்சிதம், தோளே யுயர்த்தித் தலே தொடல்; காதலன் காட்சியின்பம், பாசாங்குச் சினம், பிலுக்கு.

12. பாரவ்ருத்தம், முகத்தைச் சுற்றித் திருப்பல் ; கட்டளே மனக்கசப்பு, சினம், வெட்கம்.

13. உத்க்ஷிப்தம், தலேயைச் சாய்த்து அண்ணுந்து பார்த்தல். வேண்டுகோள், கட்டளே.

14. அதோமுகம், தலேகுனிதல்; நாணம், விசனம், வணக்கம்.

15. லோலிதம், தலேசுழலல் ; தூங்கிவிழல், போதைமயக் கம்.

16. திர்யோன்னடான்னடம், மேலும் கீழும் ஆட்டல் ; உதா சினம்.

17. ஸ்கந்தானடம், தலேயைத் தோளில் இருத்தல் ; சிந்தை,

மயக்கம், உறக்கம், போதை.

18. ஆராத்ரிகம், தலையை இருபக்கமுந் திருப்பித் தோளில் இடித்தல் ; வியப்பு. பிறர் அபிப்பிராயத்தை ஆராய்தல்.

19. பாரிவாஹிதம் ; தலையை விசாலமாகத் திருப்பல் ;காமம், அவா, களிப்பு.

20. ஸௌம்யம், அசையாதிருத்தல் ; ஆட்டத் தொடக்கம்.

21. ஆலோலிதம், தலையை வட்டமாகச் சுழற்றல் ; உறக்கம், மயக்கம், அடங்காச் சிரிப்பு.

22. திரச்சினம், மேலே தலைதூக்கி இருபுறமும் பார்த்தல் ; நாணம்.

23. ஸௌந்தரியம், இடுப்பை வளைத்து மேலும் கீழும் பார்த்தல் ; காரணம், தேனீ, யோகம்.

24. பாரிவாஹிதம், ஒரு பக்கச்சாய்வு; வியப்பு, நகை தலைவன் நினைவு.

20. கண் குறிப்புகள்

அபிநயத்தின் கண், கண்களே. கண் பார்வை, விழிப்பு, இமைத்தல், புருவ அசைவு—இவற்றிற் பல வகையுண்டு. நவரஸபாவங்கள், ஸ்தாயீபாவம் (நிலையுணர்வு) ஸஞ்சாரீபாவம் (அலையுணர்வு) இவற்றைக் குறிக்கும் கண்குறிகள் பலவாம்.

எட்டுப் பார்வை—1. சமம், நேர்பார்வை. 2. ஆலோகிதம், விரைந்த கூர்ந்த பார்வை. 3. ஸூசி, ஓரப் பார்வை. 4. ப்ரலோகிதம், பக்கப் பார்வை. 5. நிமிலிதம், பாதி இமை திறந்த தபார்வை. 6. உல்லோகிதம், மேற்பார்வை. 7. அவலோகிதம், கீழ்ப் பார்வை. 8. அனுவ்ருத்தம்,விரைந்த மேல்—கீழ்ப் பார்வை இவற்றைத் தவிர வேறு சில பார்வைகளை பரத சாத்திரத்தில் காணலாம்.

1. ஸ்நிக்தம், குளிர்ந்த பார்வை. 2. சிருங்காரம், கருணை, அற்புதம், ஹாஸ்யம், வீரம், சினம், பயானகம், பீபத்ஸம் முதலிய நவரசப் பார்வைகள். 3. விஸ்மயம், வியப்பு. 4. திருப்தி. 5. தூரப் பார்வை. 6. இங்கிதம். மகிழ்வுக் குறிப் பார்வை. 7. மலினம். 8. விதற்கிதம் ; விசால நேர்ப்பார்வை. 9. சாங்கிதம், தயக்கப் பார்வை. 10. அபிதப்தம், உதாசினப் பார்வை. 11. சூனியம் , வெறுமை. 12. ஹ்ருஷ்டம், களி பார்வை. 13. உக்கிரம், செஞ்சினப் பார்வை. 14. விப்ராந்தம், பரபரத்த பார்வை. 15. சாந்தம், அமைதிப் பார்வை. 16. மிளிதம், குவிந்த பார்வை. 17. சூசனம், குறிபார்வை. 18. லஜ்ஜிதம், வெட்கப் பார்வை. 19.

முகுளம், மொட்டுப்பார்வை, இன்பக்குறி. 20. குஞ்சிதம், கசந்த பார்வை. 21. ஆகாசப் பார்வை. 22. அர்த்த முகுளம், இன்பப் பார்வை. 23. அனுவிருத்தம், அவசரப் பார்வை. 24. விப்லுதம் குழப்பப் பார்வை. 25. விகோஸம், இமையாப் பார்வை. 26.மதிரம், போதைப் பார்வை. 27. ஹ்ருதயம், நிலைப்பற்ற பார்வை. 28. விசோகம், விசனமற்ற பார்வை. 29. திருட்டம், நடுக்கப் பார்வை. 30. விஷண்ணம், துக்கப் பார்வை. 31. சிராந்தம், களைத்த பார்வை. 32. ஜிஹ்மம், கோணற் பார்வை. 33. சலிலதம், மெல்லிய பார்வை. 34. அகேகரம், சுழற்சிப் பார்வை.

ஒன்பது விழிப்புகள் : 1. ப்ரமணம், சுழற்சி. 2. வலனம், 3. பாடம், தளர்த்தல். 4. கலனம், பரபரப்பு. 5. ஸம்ப்ரவேசம், உட்குவிதல். 6. விவர்த்தனம், ஒரப் பார்வை. 7. ஸமுத்வ்ருத்தம், மேற் பார்வை. 8. நிஷ்க்ரமம், வெளிப் பார்வை. 9. ப்ராக்ருதம், இயல் நோக்கு.

ஒன்பது இமைப்பு : 1. உன்மேஷம், திறத்தல். 2. நிமேஷம், குவித்தல். 3. ப்ரசரம், விரித்தல். 4. குஞ்சிதம், இலேசாகத் தாழ்த்தல். 5. சமம். 6. விவர்த்திதம், மேலுறுத்தல். 7. ஸ்புரிதம், இமைத்தல். 8. பிஹிதம், இறுக மூடல். 9. ஸவிதாடிதம், நோவுற்ற விழி.

புருவமும், கண் இமை இவற்றுடன் அசையும். ஆதலால் அதே உணர்ச்சிகளைக் காட்டும். 1. ஸஹஜம், இயல்பு. 2. பதனம், தாழ்த்தல். 3. ப்ருகுடி, புருவங்களை இணைத்து உயர்த்தல். 4. சதுரம், விசாலித்தல். 5. உத்க்ஷிப்தம், உயர்த்தல். 6. குஞ்சிதம், வளைத்தல். 7. இரேசிதம், ஒரு புருவத்தை அழகாக நிவத்தல்.

21. முகக் குறிப்புகள்

மூக்கிலும் பல உணர்ச்சிகளைக் காட்டலாம். மூக்கை அடைத்தல் அகற்றல், விடைத்தல், பெருமூச்சு, ஒரு மூக்கு விடைத்தல், சாதாரணமாக வைத்துக்கொள்ளல் ஆகியவற்றால் உள் உணர்வுகள் புலனாகும்.

அதேமாதிரி கன்னங்களிலும் உணர்ச்சியைக் காட்டலாம். கன்னம் சமமாதல், தொங்கல், உப்பல், சிவத்தல், அதிர்தல், சுருங்கல் முதலியன மனவுணர்வைக் காட்டும்.

வாய் அங்காந்தும், அகன்றும், மேலும் கீழும் பக்கத்திலும் இளித்தும், இயல்பா யிருந்தும், உதடுகள் குவிந்தும், விரிந்தும், உயர்ந்தும், தாழ்ந்தும், துருத்தியும், பின்னிமுத்தும்; நாஉதட்டை

நக்கியும், தடவியும், பல்லை வருடியும்,. பல்லைக் கடித்தும் பல் இளித்தும், நறநறத்தும், இறுக்கியும்; உதட்டை மடித்தும், விரித்தும் பலவகையான முகபாவங்களைக் காட்டலாம்.

கழுத்தைச் சமமாக வைத்தும், குனிந்தும் உயர்த்தியும் சாய்த்தும், ஒருபக்கந் திருப்பி நீட்டியும், முன்னே நீட்டியும், பின்னே வளைத்தும், பக்கந் திருப்பியும் பல பாவனைகளை உணர்த்தலாம்.

22. கைக்குறிகள்

முகக்குறிகளுக்கு அடுத்தபடி அவற்றுடன் இணைந்தவை கைக் குறிகள். கண்ணிலும் கையிலுந்தான் நாட்டியக்கலையின் சூட்சுமம் உள்ளது. அழகுபெறக் காட்டுங் கை, எழிற்கை; தொழில்பெறக் காட்டுவது தொழிற்கை. எழிற் கையும் தொழிற் கையும் சத்வ ராஜஸ தாமஸ குணங்களைக் காட்டும் அகக்கூத்திற் குரியன ; பிண்டியும் பிணையலும் புறக்கூத்திற்குரியன.ஒற்றைக் கைக்கும் குவித்த கைக்கும் **கூடை** என்பர்.

அகக்கூத்தில் ஒற்றையிற் செய்யும் கைத்தொழிலும் இரட்டையிற் செய்யும் கைத்தொழிலும் முரண்படாதிருக்க வேண்டும். கைக்குறிகள் ஒற்றைக்கை (அசம்யுக்தம்) ; பிணைக்கை (ஸம்யுக்தம்) என்று இரண்டு வகையாகும்.

ஒற்றைக் கைக்குறிகள் : 1. பதாகம், கொடி. 2. திரிபதாகம், மூன்று விரல் நீட்டல். 3. கர்த்தரி முகம், கத்தரிக்கோல் முகம். 4. அர்த்த சந்திரம், பாதி மதி. 5. அராளம், கோணல். 6. சுக துண்டம், கிளிமூக்கு. 7. முஷ்டி. 8. சிகரம். 9. கபித்தம், விளாம்பழம். 10. கடகாமுகம், நண்டு மூஞ்சி. 11. ஸூசியாஸ்யம் ஊசிமுகம். 12. பத்மகோசம், 13. ஸர்ப்பசிரம். 14. ம்ருக சிரம், மான் தலை. 15. காங்கூலம், அல்லது லாங்கூலம்,பூக்கொய்தல். 16. அலபத்மம், அசையும் தாமரை. 17. சதுரம், நால் விரல். 18. பிரமரம், தேனீ. 19. ஹம்ஸாஸ்யம், அன்னமுகம். 20. ஹம்ஸபக்ஷம். 21. மயூரம், மயில். 22. முகுளம், மொட்டு. 23. தாம்ர சூடம், கோழிக்கொண்டை. 24. சந்த்ர கலா. 25. சிம்ஹ சிரம். 26. ஸந்தாம்சம், இடுக்கி. 27. ஊர்ணநாபம், எட்டுக்கால் பூச்சி. 28. திரிசூலம்.

பிணைக்கைகள் : அஞ்சலி, கபோதம்—கர்கடம்— ஸ்வஸ்திகம் —கடகாவர்த்தமானம்நிஷாதம்—டோலம்—புஷ்ப புடம்—மகரம் –கஜதந்தம்—வர்த்தமானம்—அவாஹித்தம்—கர்த்தரி ஸ்வஸ்திகம்,—சகடம் சங்கம் சக்ரம்—ஸம்புடம்—பாசம்—கீலகம்— மத்ஸ

யம்—வராஹம் — கூர்மம் — கருடம் — நாகபந்தம் — கட்வா — நளினீ பத்மகோசம்—பேருண்டம்—அலஹித்தம், சிவலிங்கம் முதலியன.

பிரம்மா, விஷ்ணு, சிவன், சரஸ்வதி, பார்வதி, லக்ஷ்மி, முருகன், மன்மதன், இந்திரன், அக்னி, வாயு, யமன், வருணன், குபேரன் முதலிய தேவதைகளையும், தசாவதாரங்களையும், அரக்கரையும், நான்கு வருணங்களையும், நவக்கிரகங்களையும் ஆறு, மலை கடல் மரம், விலங்குகள், பறவைகள் முதலியவற்றையும் காட்டும் குறிகள் தனித்தனியே உண்டு. கருத்திற் கொண்டபொருளைக் கைக்குறியாற் காட்டல் பிண்டி. பிண்டி பந்தத்தால் தெய்வங்களைக் குறிக்கலாம்—உதாரணமாக இடது உள்ளங்கைமேல், கட்டைவிரல் நீட்டி மற்ற விரல்கள் மடக்கிய வலக்கையை ஊன்றி சிவலிங்கத்தைக் குறிக்கலாம். நடனத்தில் ஒரு தெய்வத்தைக் குறிக்கும் அங்கஹாரம், கரணம் இவற்றிற்கும் **பிண்டி** யெனப் பெயர். பிண்டியும் பிணையலும் சேர்ந்து எத்தகைய தெய்வப் பொருளையும் விளக்கும். அதேமாதிரி பலவகைப் புட்கள், விலங்குகள், உறவினர்களைக் கைக்குறிகளாலேயே காட்ட முடியும்.

கதகளியில் முத்ரை, பல்லவம், முகுரம், வர்த்தமானம் முதலிய குறிகள் மிகுதியாக வரும்.

23. காலாட்டம்

ஆடும்போது ஸ்தானகம், ஆலீடம், பிரேரிதம், ஸ்வஸ்திகம், ஸமஸூசி, பார்வஸூசி, ஏகபாதம், நாகபத்மம், மோதிதம் முதலிய லட்சணங்கள் காலுக்குண்டு. காலைத்தூக்கிச் சுழற்றுவதற்குச் சக்ரம், ஏகபாதம், குஞ்சிதம், ஆகாசம் முதலிய ஆட்ட வகைக ளுண்டு. நடத்தல், தாவல், நகரல், ஓடல், விரைதல், நடுங்கல், தத்தல், புரளல், துவளல் முதலிய பல நடைகள் உண்டு.

24. அங்கஹாரங்கள்

அங்கஹாரம் அல்லது உடலசைவு முப்பத்திரண்டு வகையாகும். இவற்றிற்குக் கரணங்கள் மூலமாம். நாட்டியத்தில் கையும் காலும் இடுப்பும் வளைக்க வேண்டிய வகையே கரணமாம்.

அங்கஹாரங்கள் : ஸ்திர ஹஸ்தம், பர்யஸ்தகம், ஸூசிவித்தம், அபவித்தம், விஷ்கம்பம், உத்கட்டிதம், அபராஜிதம், விஷ்

கம்பாபச்ரிதம், மத்தாக்ரீடம், ஸ்வஸ்திக ரேசிதம், பார்ஸ்வ ஸ்வதிகம், விருச்சிகம், பிரமரம், மத்தாக்ஷாலிதம், மதவிலாசிதம், கதிமண்டலம், பரிச்சின்னம், பரிவ்ருத்த ரேசிதம், வைசாக ரேசிதம், பராவ்ருத்தம், அலாதகம், பார்ஸ்வச்சேதம், வித்யுத்ப்ராந்தம், உத்வ்ருத்தம், ஆலிதம், ரேசிதம், அச்சுரிதம், ஆக்ஷிப்த ரேசிதம், ஸம்ப்ராந்தம், அபஸர்ப்பம், அர்த்த நிகுட்டகம்–ஆக32.

25. கரணங்கள்

கரணங்கள் 108 ஆகும் : தாளபுஷ்பபுடம், வர்திதம், வலிதோருகம், அபவித்தம், ஸமானகம், லீனம், ஸ்வஸ்திக ரேசிதம், மண்டல ஸ்வஸ்திகம், நிகுட்டம், அர்த்த நிகுட்டம், கடிச்சன்னம், அர்த்த ரேசிதம், வக்ஷஸ்வஸ்திகம், உன்மத்தம், ஸ்வஸ்திகம், ப்ருஷ்டஸ்வஸ்திகம், திக் ஸ்வஸ்திகம், அலாதம், கடிஸமம், ஆக்ஷிப்த ரேசிதம், விக்ஷிப்தாக்ஷிப்தம், அர்த்த ஸ்வஸ்திகம், அஞ்சிதம், புஜங்கத்ராசிதம், ஊர்த்வஜானு, நிகுஞ்சிதம், மத்தல்லி, அர்த்தமத்தல்லி, ரேசித நிகுட்டம், பாதாப வித்தம், வலிதம், கூர்நிடம், லலிதம், தண்டபக்ஷம், புஜங்கத்ராஸ்த ரேசிதம், நுபுரம், வைசாகரேசிதம், ப்ரமரம், சதுரம், புஜங்காஞ்சிதம் தண்டரேசிதம், விருச்சிக குட்டிதம், கடிப்ராந்தம், லதா வ்ருச்சிகம், சின்னம், விருச்சிக ரேசிதம், விருச்சிகம், வியம்ஸிதம், பார்ஸ்வ நிகுட்டனம், லலாட திலகம், க்ராந்தம், குஞ்சிதம், சக்ர மண்டலம், உரோ மண்டலம், ஆக்ஷிப்தம், தலவிலாசிதம், அர்கலம், விக்ஷிப்தம், ஆவர்த்தம், டோலபாதம், விவ்ருத்தம், விநிவ்ருத்தம், பார்ஸ்வக்ராந்தம், நிசும்பிதம், வித்யுத் ப்ராந்தம், அதிக்ராந்தம், விவர்திகம், கஜக்ரீடிதம், தலஸம்ஸ்போடிதம், கருடப்லுதம், கண்டஸூசி, பரிவ்ருத்தம், பார்ஸ்வ ஜானு, க்ருத்ராவலீனம், ஸன்னதம், ஸூசி, அர்த்தஸூசி, ஸூசிவித்தம், அபக்ராந்தம், மயூரலலிதம், ஸர்பிதம், தண்டபாதம், ஹரிணப்லுதம், பிரேங்கோலிதம், நிதம்பம், ஸ்கலிதம், கரிஹஸ்தம், பரஸர்ப்பிதம், சிம்ஹ விக்ரீடிதம், ஸிம்ஹகர்ஜிதம், உத்விருத்தம், உபஸ்ருதம், தலஸங்கட்டிதம், ஜநிதம், அவாஹித்தம், நிவேசம், ஏலகாக்ரீடிதம், உருத் வ்ருத்தம், மதக்ஷலிதம், விஷ்ணுக்ராந்தம், ஸம்ப்ராந்தம், விஷ்கம்பம், உத்கட்டிதம், வ்ருஷபக்ரீடிதம், லோலிதம், நாகாபஸர்பிதம், ஸகடாஸ்யம், கங்காவதரணம்.

26. காட்சிகள்

கூத்துக்குத் தகுந்த பாடல்கள் ஒரு காட்சியை ஒட்டி அமைய வேண்டும். அப்பாடல்கள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் உணர்த்த வேண்டும்; தளர்ந்தவரை வீறுபடுத்த வேண்டும்; கலையின்பம் வேண்டுவோருக்குக் கலையின்பம், பேரின்பம் வேண்டுவோருக்குப் பேரின்ப மளிக்க வேண்டும். புராணக் கதைகளுடன் சமுதாயத்திற்கும் மனித முன்னேற்றத்திற்கும் பொருத்தமான கதைகளைப் பாட்டில் அமைக்கலாம்; சமுதாயத்திற்குப் பயனாகும் தொழில்முறைகளைக் காட்சிகளிற் புகுத்தலாம். சரித்திர நிகழ்ச்சிகளைச் சேர்க்கலாம். மனிதவியல்பின் குணதொந்த விகாரங்களையும் ஏற்றத் தாழ்வுகளையும் ஒன்பது சுவைகளும் பொருந்தக் காட்டி, இன்ன மாதிரி வாழ்ந்தால் மேன்மை பெறலாம் என்று உணர வைக்கலாம். அக்காலம் மாயவன் ஆடும் அல்லியம், விடையோன் ஆடும் கொட்டி, ஆறுமுகன் ஆடும் குடை, குன்றெடுத்தோன் ஆடும் குடம், முக்கண்ணன் பாண்டுரங்கம், நெடியோன் மல்லாடல், வேல்முருகன் துடியாடல், அயிராணி கடையம், காமன் பேடாடல், மாயவள் மரக்கலம், திருமகள் பாவை யாடல் என்று பதினோராடல்கள் வழங்கின. திரிபுர தகனம், சிவபார்வதி நடனம், பைரவியின் கூத்து, குவலயாபீட வதம், பாணாசுர வதம், சூரபத்ம வதம், தக்ஷ வதம், உஷா கல்யாணம், காமக்கூத்து, காளிக்கூத்து, மோகினியாட்டம், கரகக் கூத்து முதலியவையும் அக்காலம் பரவியிருந்தன.

நவரஸ நடனாஞ்ஜலி உலகம், உயிர், இறைவன் ஆகிய முப்பொருளறிவும் முக்குண வுலகை வென்று மனிதான்மா சுத்தபரமாத்மனைக்கூடும் யோக ரகசியமும், உலகானுபவக் காட்சிகளையும், ஆத்மானுபவக் காட்சிகளையும் பண்ணும் பரதமும் பனுவலும், உணர்வும் பொருந்த விளக்கும்.

நாட்டியக்கலை, ஆடல் பாடல் அழகுடன் அருளும் அறமும் தெய்வச் சுவையும், வீரமும், சமுதாய ஒற்றுமையும், நாட்டன்பும், உலக சமாதானமும் தர, ஒரு சாதனமா யிருக்க வேண்டும் என்று கருதியே, இந்நூலை இயன்றமட்டும் கவனமாகச் செய்திருக்கிறேன். தமிழன்பர் இதைப் பயன்படுத்திக் கலையெழில் பெற்று முன்னேற ஆடுந்தெய்வம் அருளுக!

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின்

நவரஸ நடனாஞ்ஜலி

1. அஞ்ஜலி நடனம்

1. ஆசி கூறுவாய்

(பூர்விகல்யாணி) (ஆதி)

ப : ஆசி கூறுவாய் அம்பலத் தரசே
ஆடிப் பாடிநின் அருள் கூடிடவே (ஆசி)

அ : மாசிலாத மா ணிக்க ஜோதியே
மலையருவி போலே கலையருவி பொங்க (ஆசி)

ச : எல்லையில்லாப் பே ரின்பவாரிதியே,
இன்னுயிர்க் குயிராய் மன்னும் பதியே
நல்ல நவரஸ நடனாஞ் ஜலியால்
ஞாலமுன்னை யெந்தக் காலமும் வணங்க (ஆசி)

2. ஹாரதி

(நடன கலாவாணிக்கு ஹாரதி எடுத்து உபாசித்தல்)

(நாட்டை) (ஆதி)

ப : ஹா ர தி. . . நடன கலாவதி
அம்பா, ஜயமருள் ஓம் சுபமங்கள (ஹா)

அ : பாரதி சரணம் சரஸ்வதி
பரவச நவரஸ பரதவரமருள்வாய் (ஹா)

ச : அங்கஹாரமுடன் அழகிய கரணங்கள்
அகமுக பாவனை சுகமிகச் சுவைமிக
திங்களைக் கண்ட திரைகடல் போலவே
திம்திரிகிடவென திவ்ய நடனம்புரிய (ஹா)

3. நடன பூஜை

(கமாஸ்) (ரூபகம்)

ப : நடன பூஜை செய்வோம் வாரீரே—
நவரஸகலை நயங்கள் குலுங்க
நடன ராஜன் சந்நி தியினில் (நடன)

அ : தடதடவெனத் தாளம் முழங்கத்
தங்க யாழுங் குழலும் பொங்க (நடன)

ச : வேதம் ஓதி இசை யரங்கை
விதி முறைப்படி வணங்கி,
ஆதி பரத நிபுணர் வகுத்த
ஆகமப்படி தேகம் இணங்கி (நடன)

எண்ணும் எண்ணங் கண்ணில் விளங்க
இருகை உள்ளம் துலங்க,
பண்ணுடன் பசு பதியைப் பாடிப்
பரமானந்தத் தாண்டவ மாடி (நடன)

அகமகமெனச் சகவுயிரினில்
ஆடும் அருளை நாடி,
தகஜிமி ததிங் கிண தோமெனத்
தாவித் தாவி ஆவி மகிழ (நடன)



2. சிவ-கௌரி நடனம்

4. ஆனந்தத் தாண்டவம்

(பைரவி) (திரிபுடை)

ப : ஆனந்தத் தாண்டவம் புரிவாயே—தில்லை
அப்பாஎன் னுள்ளேநீ அறிவாகிப் பர (மானந்த)

அ : மோனம் அளாவிய வானப் பரவெளியில்,
முத்திச் சுடர்மணியே தத்வமஸிஓம் என்றே (ஆனந்த)

ச : ஓங்கார டமருகம் ஒலித்தே—என்னுள்
ஒங்கும்சிற் கனலாகச் சொலித்தே,
ஏங்காதே என்றிடர் தவிர்த்தே—என்
ஹ்ருதயக்ரந்திகளை அவிழ்த்தே

ஆங்கார வேங்கையை அடித்தே—பாயும்
ஆணவக் கரியினை யுரித்தே—அகம்
நீங்கா முயலகனை மிதித்தே—வெறும்
நீசப் பொறுமைப் பாம்பை நெரித்தே (ஆனந்த)

பவபய மோட்டிடும் அபயக் கரத்தை நீட்டி,
பாசவி னைகளென் பக்கம் வராமல் ஓட்டி,
சிவகாமி யாம் எனது செங்கையைப் பற்றி,
திம் திம் திமிகிட திக்கிட திக்கிட
தொம் தோம் ததிங்கிண தகஜுனு தகஜுனு
தளாங்கு தரிகிட ததிங்கிணத் தோமென (ஆனந்த)

5. யோக சமாதியிலே

(கைலையில் பரமன் யோகத்தமர்தல்; கௌரி தொண்டு செய்தல்)

(மத்தியமாவதி) (சாய்ப்பு)

ப : யோக சமாதியிலே—கைலாசபதி
ஊன்றி யிருந்தானே— (யோ)

அ : தாக சோகமில்லாத சாந்த நிலையினிலே
சச்சிதா னந்தத்தின் உச்சமணி விளக்காய் (யோ)

ச : அந்தக் கரணங்களே அடக்கி—ஐயன்
ஐம்பெருந் தொழில்களே ஒடுக்கி
சிந்தையில் தானேதா னுகி—இன்பச்
சிகரத்திற் கப்பாலும் ஏகி,
சந்ததம் ஸஹஸ்ராரத் தேனே—உண்டு
தணலுந் துரியாதித வானில்
சுந்தர கௌரி தொழுது வணங்கிடும்
தொண் டினையும் விழி கண்டறி யாமலே (யோ)

6. மெல்லிய தென்றலிலே

(மன்மதன் ரதியுடன் நடனமாடி வருகிறுன்.)

(பேஹாக்) (திஸ்ர ஏகம்)

மதன் : மெல்லிய தென்றலிலே—ஏறி
வேகமாய்ச் சென்றிடுவோம்
அல்லிக் கணே தொடுப்போம்—சிவனுர்
ஆழ்ந்த தவங் கெடுப்போம் !

ரதி : சாமிகள் கண்விழித்தே—பெண்
சக்தியைக் கண்டவுடன்
காமிக ளாகிடவே—நாம்
கண்டு களித்திடுவோம் !

மதன் : இரும்பு நெஞ்சினேயும்—உடனே
இணக்கி வென்றிடுவேன் !
கரும்பு வில்வளைத்தே—ஆள்வேன்
காமன் இப் பூமியெல்லாம் !

ரதி : கசந்த வாழ்வினேயும்—கட்டிக்
கற்கண்டெனப் புரிவோம் !
வசந்தப் பூங்குயிலும்—நம்மை
வாழ்த்தும் தமிழிசையால் !

7. என்ன நெஞ்சுரம்

(சிவன் நெற்றிக்கண்ணைத் திறந்து, காமனைச் சுட்டெரித்தல்)

(மாண்டு) (ரூபகம்)

சிவன் : என்ன நெஞ்சுரம் உனக்கடா—என்னை
யாரென் றெண்ணி அம்பு விட்டனை
உன்னைச் சுட்டெரிக்க நெற்றிக்கண்—இதோ
உயர்த்தினேன் உதிர்க சாம்பலாய்

காமன் : எனது தீமை என்னைச் சுட்டதே—ஹர ஹர !
எரிந்துடல் அநங்க னுயினேன்...

ரதி : மனது வைத்தென் அன்பு நாதனை—கைலை
மாதவா எழுப்பி யருளுவாய்

சிவன் : கன்னி கௌரியின் கடுந்தவம்—நல்ல
கனிபழுத்த போது மன்மதன்
முன்னைப் போலெழுந்தொளிருவான்—தூய
முனிகணத்தை அஞ்சித் தாழுவான்.

(காமனைச் சுட்ட சிவத்தை அஞ்சி விலகி, கௌரி தனித்தவம்
செய்து சிவனை வழிபடுதல்.)

8. வாராதோ கருணை

(அசாவேரி) (ஆதி)

ப : வாராதோ கருணை—எனக்கிரங்கி
மலைவளர் தவ யோகியே—பரமாத்மனே (வா)

அ : நிராள மாக உன்னை நினைந்து நினைந்துருகி,
நெஞ்சி லுபாசித்தேன் பஞ்சபாணஹரனு—ரமணு (வா)

ச : ஓம்நம : சிவமென்றே நேமமுடன் ஜபித்தே
ஊனுறக்க மின்றி வேணதவம் புரிந்தேன்
காமாரியே எனது சாமீ சிவகாமிநாதன்
கண்குளிர உன்னைக் கண்டு கலந்திருக்க (வா)

9. ஏதுக்குக் காதல் கொண்டாய் ?

(பரமசிவன் பிரமசாரியாகவந்து பார்வதியைச் சோதித்தல்)

(புன்னாகவராளி) (திஸ்ர ஏகம்)

ஏதுக்குக் காதல் கொண்டாய்—பிச்சை
ஏந்தும் சதாசிவனை ?—
சாதுக்கள் போற்றுகின்ற—நல்ல
தவம்பெறுங் கன்னிகையே (ஏது)

பெற்றவர் யாருமில்லை—அவன்
பிறப்பினை யாரறிவார் ?
சுற்றமோ பேய்க்கணங்கள்—அவன்
சூழலோ சுடுகாடு ! (ஏது)

சாம்பலைப் பூசிடுவான்—உன்னைத்
தழுவிடும் போதவன் மேல்
பாம்புகள் படமெடுக்கும்—நீயும்
பயம்பிடித் தோடிடுவாய் ! (ஏது)

வீட்டினி லிருப்பதில்லை—ஒரு
வேலையும் பார்ப்ப தில்லை—காளை
மாட்டினைத் தட்டிவிட்டே—அவன்
மாயமாய்ப் போய்விடுவான் ! (ஏது)

கடும்புலித் தோலுடுப்பான்—மதக்
கரியுரி போர்த்திடுவான்—அவன்
குடுகுடுப் பாண்டியன்றோ—ஞானக்
குறிசொல்லக் கிளம்பிடுவான் ! (ஏது)

உன்னுடன் இருப்பதுபோல்—எல்லா
உயிருடன் கலந்திருப்பான் !
அன்புடன் அழைத்துவிட்டால்—அடி
யாரிடம் ஓடிடுவான் ! (ஏது)

சடைப்பிடித்த தலையில்—ஒரு
சக்களத் தியைச் சுமப்பான்
இடியிடி யிடியெனவே—புரம்
எரிந்திடச் சிரித்திடுவான் (ஏது)

ஒட்டுற வில்லாமல்—சும்மா
உம்மெனத் தென்முகமாய்
அட்டணக் கால்போட்டே—கல்
லாலடி யிருந்திடுவான் (ஏது)

வேலையில் லாவேலை—செய்து
விளை யாடிக்கொண்டிருப்பான்—ஒரு
காலைக் கிளப்பிக்கொண்டே—இன்பக்
களிநடம் புரிந்திடுவான் (ஏது)

தீத்தணல் போலழகே—ஞானத்
திருவுரு கன்னிகையே—இந்தக்
கூத்தாடிப் பித்தனுக்கோ—உன்னைக்
கொடுப்பது மலையரசி ? (ஏது)

அன்னமும் இஞ்சுகமும்—தேவர்
அமுதமும் போன்றவளே,
என்னை மணம் புரிந்தால்—நீ
என்றென்றும் சுகம் பெறுவாய் ! (ஏது)

10. பொல்லாத வார்த்தைகள்

(பார்வதி பிரமசாரி செய்த சிவநிந்தையைக் கண்டித்தல்.)

(மோகனம்) (ஜம்பை)

பொல்லாத வார்த்தைகள் பேசினீர்—என்
புண்ணிய நாதரை ஏசினீர் ;
நில்லாது போம், உடன் போம்—சிவ
நிந்தையைக் கேட்பது பாபமாம் ! (பொ)

நாரின் இணைமலர் மாலைபோல்—இந்த
ஞால வுயிர்க்குயிர் ஆனவன் ;
ஆரணம் ஆகமம் யாவையும்—போற்றும்
அன்புக் கடவுளைத் தூற்றினீர் ! (பொ)

மேருவை வில்லாய் வளைத்தவன்—அன்பர்
மேன்மை பெறவே உழைத்தவன் ;
பேருருப் பேதங்க ளற்றவன்—என்றும்
பேரின்பம் பொங்கிடும் ஊற்றவன் ! (பொ)

அபசார வார்த்தைகள் வீசினீர்—நீர்
ஆரையா ? நிரெந்த ஊரையா ?—நான்
உபசாரம் செய்த பலனிதோ ?—நீர்
யோகியோ, போகியோ ? ஓதுவீர் ! (பொ)

11. வெள்ளி மலையினில்

(பிலகரி) (ஆதி)

சிவன் : வெள்ளிமலையினில் வீடுகொண்டேன்—அந்த
வீட்டுக் கரசி யம்மா—நீயென்
வீட்டுக் கரசி யம்மா !

எவனைநீ யெண்ணித் தவம்புரிந்தாய்—அந்தச்
சிவனைநீ கண்டுகொண்டாய்—சதா
சிவனைநீ கண்டு கொண்டாய் !

யோகியம்மா—தவ—யோகியம்மா—சுத்த
போகியம்மா—உமையே—மங்கை
பாகனம்மா எனைப் பார் !

(சிவன் இயலுருவுடன் நிற்றல் ; பார்வதி வியந்து
மகிழ்ந்து கூறல்.)

கௌரி : மாரியைக் கண்ட பயிரைப்போ லென்மனம்
பூரித்துப் பொங்குதையா—பரி
பூரணம் வந்ததையா !

சோதனை செய்திட வந்த சதாசிவன்
வேதனை தீர்த்துவிட்டான்—எனைத்தன்
பாதியாக் கொண்டுவந்தான் !

இருவரும் : யாக்கையும் ஆவியும் போலநாம் கூடிய
வாழ்க்கை சிறந்ததம்மா—பேரின்பம்
வந்து சுரந்த தம்மா !
யோகத்திலே சுத்த போகத்தைக் கண்டவர்
மோகந் தணியுமம்மா—அவர்
தேகம்பொன் னாகுமம்மா!

12. தேனுகி, ஆனந்த

(சிவனும் பார்வதியும் ஊஞ்சலாடல்.)

(உசேனி) (ஜம்பை)

தேனுகி ... ஆனந்தத் தெளிவ தாகி,
திருத்தொண்டர் துணையான தெய்வ மாகி,
தானுகித் தன்மயமே எவையும் ஆகி,
சக்தியுடன் சிவபெருமான் ஆடி லூஞ்சல் !

வானுகி வளியாகி ஒளியும் ஆகி,
வாழுகின்ற உயிராகி, வளமையாகி,
ஆனந்த நடனசபா பதியு மாகி,
அமிர்தவல்லி யோடு சிவன் ஆடிலூஞ்சல் !

அன்புறுதி யென்கின்ற கால்கள் நாட்டி,
ஆர்வமெனும் சங்கிலிகள் அமையப் பூட்டி,
இன்பமிகு தியானமெனும் பலகை நீட்டி
இதயேசன் என்னுடனே ஆடிலூஞ்சல்

பெண்ணுகி ஆணுகிப் பிரபஞ்சமாகி,
பேசரிய துரியபர பிரமமாகி,
கண்ணுகிக் கதிராகிக் காட்சியாகிக்
கதியாகும் அருட்சோதி ஆடிலூஞ்சல் !

ஓங்காரக் குழலுடனே உருக வீணை
ஓம் சுத்த சக்தியென்றே உள்ளந் துள்ள
நீங்காத நிஷ்டையிலே நிலைபெற் ருேங்கி
நிறைவான பேரின்பம் ஆடிலூஞ்சல்

எத்திக்கும் அருளாட்சி யிலகி வாழ்க !
எந்தாயின் இசையோங்கி யென்றும் வாழ்க !
தித்திக்கும் செந்தமிழின் சீர்த்தி வாழ்க !
திருவுடனே அழகேசன் ஆடி லூஞ்சல் !

3. சக்தி நடனம்

13. குண்டலிப் பாம்பே

(வராளி) (திஸ்ர ஏகம்)

ப ; ஆடிடு குண்டலிப் பாம்பே—எங்கள்
ஆதி சிவன் முடியில் ஆனந்தப் படம்விரித்தே— (ஆடிடு)

அ : ஓடிவருங் கங்கை நதி ஓங்காரக் குழலூத (ஆடிடு)

ச : கோணத்தில் உறங்கிடும் பாம்பே—தொட்டால்
கோபக் கனல் பறக்க குப்பெனச்சீறி மிக
ஆண்மைகொண் டெழுந்திடும் பாம்பே—கீழ்
ஆதாரம் ஆறையும் மீதேறித் தாவியே (ஆடிடு)

காலனை யுதைத்தமுக் கண்ணன்—அவன்
காட்டும் அபிநயத்தைக் கண்டு கண்டு பழகி,
வாலைச் சுருட்டித் தலை நீட்டி—ஞான
மகுடிக் கிசைந்தபடி தகுதிகுதோ மென்றே (ஆடிடு)

14. சக்தி ஓம் சக்தி

(உசேனி) (ஆதி)

சக்திஓம் சக்தியென்றே—அம்மா
சந்ததங் கூவுகின்றேன்—உன்
சித்த மிரங்காதோ ?—தாயே
சேயினை யறியாயோ ? (சக்தி)

எங்குமுன் செவிகளுண்டு—பராசக்தி
என்முறை கேட்டிலையோ ?
எங்குமுன் கண்களுண்டே—அம்மா
என்னிடர் காணுயோ ?
எங்குமுன் கைகளுண்டே—பராசக்தி
எனக்கொரு துணையிலையோ ?
எங்குமே நிறைந்தவளே—பராசக்தி
என்குறை தீராயோ ? (சக்தி)

எட்டெட்டுத் திக்கினிலும்—உன்
  இயற்கையின் அற்புதமே !
பட்டப் பகலொளியும்—உன்
  பரிதி விழிக் கனலே !
வட்ட வுலகினிலே—கால
  வாகன மேறிச் செல்வாய்
தட்டுத்தடைக ளுண்டோ—அம்மாநீ
  தனியன் முன் வருவதற்கே ? (சக்தி)

பூசித்துக் காண்பேனோ—நெஞ்சப்
  பூவி லிருப்பவளே !
வாசித்துக் காண்பேனோ—என்
  வாய்மனங் கடந்தவளே.
ஆசித்துக் காண்பேனோ—வரங்களை
  அள்ளிக் கொடுப்பவளே—உள்ளே
நேசித்துக் காண்பதல்லால்—வேறு
  நெறியொன்றும் அறிகிலனே ! (சக்தி)

15. இன்னுமேன் ஒளிந்திருப்பதோ

(ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் மகாகாளிமுன் பக்தி பரவசத்தால் உளங் கசிந்துருகுதல்.)

(மாண்டு) (திஸ்ரஏகம்)

இன்னுமேன் ஒளிந்திருப்பதோ—தாயே
  ஏழைமேல் இரக்கம் இல்லையோ ?
தன்னிகர் இலாத சக்தியே—உன்னைத்
  தாகமாகக் கூவி நிற்கிறேன் !
மன்னர் போகம் வேண்டிலேன் அம்மா—உன்
  மதலையாகும் யோகம் வேண்டினேன் !
நின்னை நேரிற் காண வேண்டினேன்—வேறு
  நினைவொன் றில்லை, நிலையொன் றில்லையே ! (இன்னு)

எல்லை யற்ற புவனம் எங்குமே—நீ
  எண்ணிலா உயிர்க ளாயினை ;
கல்லும் புல்லுங் கனலும் வாயுவும்,
  கதிருங் கடலும் காரும் உன்னருள் !
வெல்லும் வீரர் வீரம் உன்னதே—என்
  விரதம் வேண்டும் வீறு தந்தருள்—அம்மா
சொல்லிறந்துனை நினைக்கிறேன்—ஓம்
  சுத்தசக்தி, சண்டி காளிஓம் ! (இன்னு)

வெள்ளமென்பர் உன்கருணையை—அஃதென்
 வேட்கை தீர்க்கும் வேக மற்றதோ ?
பிள்ளைமீ திரக்க மில்லையோ ?—அம்மா
 பெற்ற மனம் பித்தென் பார்களே !
உள்ளமுன் உறையுளே யன்றோ ?—அதில்
 உன்முகத்தைக் காட்டுநா ளென்றோ ?
கள்ள மின்றிக் கேட்கிறே னம்மா—ஓம்
 காளி, என்முன் காட்சி தந்தருள் ! (இன்னு)

16. காளீ, வீர ஜய சண்டீ !

(சண்டி யாகம் செய்து வாள் பிடித்து, குருகோவிந்தன் வீர சக்தியைத் தோத்திரம் செய்தல்.)

(பேஹாக்) (ஆதி)

காளீ வீர ஜய சண்டீ—எம்மைக்
 காக்கும் பைரவி பவானீ !
வாளுக்கு வெற்றியினைத் தருவாய்—அறம்
 வளர்க்க வேண்டுந் துணை புரிவாய்—ஓம் (காளீ)

அடிமை விலங்குகளை முறிக்க—நாங்கள்
 அஞ்சாச் சுதந்தரராய் உயிர்க்க,
கொடுமை களை எதிர்த்துக் குமைக்க—நல்ல
 கொள்கைகளை வாழ்வில் அமைக்க—ஓம் (காளீ)

அதர்மப் பதர்களை ஒழிப்போம்—உன்
 அன்பில் ஒருகுலமாய்ச் செழிப்போம்.
சுதர்மப் பயிரை நன்கு வளர்ப்போம்—உண்மை
 துலங்க ஒருமனங்கொண் டுழைப்போம்—ஓம் (காளீ)

தீரர் உனது திரு மைந்தர்—வாழ்வைத்
 தியாக வேள்விக்கெனத் தந்தோம் !
போரில் எமக்குதவி செய்வாய்—உன்னைப்
 போற்றிக் கடமைசெய் துய்வோம்—ஓம் (காளீ)

தோளைத் திண்மலைபோல் ஆக்கி—எங்கள்
 சொல்லில் வல்லமையை ஊக்கி
தாளுக்கு வேகத்தை வழங்கி—எங்கள்
 சத்தியப் போர்முனையில் விளங்காய்—ஓம் (காளீ)

வீரக்கனல் பறக்கத் தொழுதோம்—உண்மை
வெல்லப் பொய்ப்பகைமை வீழ
காரமான சக்தி தருவாய்—எங்கள்
கத்தியில் இரத்தநகை புரிவாய்—ஓம் (காளீ)

17. வீர பவானியை

(சிவாஜி, பவானிதேவி சந்நிதியில் சக்தி உபாசனை செய்தல் ; வீரருடன் சக்தி நடனம் புரிதல்.)

(வராளி) (திரிபுடை)

வீர பவானியைப் போற்றுவோம்—சக்தி
வெற்றி யளித்துக்காப் பாற்றுவாள் !
சூரக்கனலை மிக ஊட்டுவாள்—ஆத்ம
சுதந்தர வாழ்வினை நாட்டுவாள். (வீர)

பக்தி வைராக்கியம் பேணுவோம்—கெட்ட
பந்தங்கள் சிந்திடக் காணுவோம் ;
சித்தத்தில் சக்தியை நாட்டுவோம்—அவள்
தியானத்தி லேநம்மைக் கூட்டுவாள் ! (வீர)

கள்ளப் புலன்களைக் கட்டுவோம்—சக்தி
காமாதிப் பேய்களை வெட்டுவாள் ;
உள்ளத்தைக் கோயிலென் றுக்குவோம்—சக்தி
உண்மைச் சுடரினை ஊக்குவாள். (வீர)

கையை அடைக்கல மாக்குவோம்—சக்தி
காரிய வீரத்தை ஊக்குவாள்.
மெய்யை அடைக்கல மாக்குவோம்—சக்தி
வீறதில் ஊறிடச் செய்குவாள் ! (வீர)

தோளை அடைக்கல மாக்குவோம்—சக்தி
தூண்போல் அதைத்திட மாக்குவாள் !
வாளை அடைக்கல மாக்குவோம்—தெய்வ
வல்லமையை அதில் ஊக்குவாள் ! (வீர)

வாக்கை அடைக்கல மாக்குவோம்—ஐய
வாணியே பேசிடக் காணுவோம் !
நோக்கை அடைக்கல மாக்குவோம்—சக்தி
நுண்மதி யூகத்தை ஊக்குவாள் ! (வீர)

ஆவியை வேள்வியென் ருக்குவோம்—சக்தி
அல்லல்கள் யாவையும் போக்குவாள் !
தேவி பராசக்தி காப்பென்போம்—ரண
திரருக் கானந்தம் பாலிப்பாள் !—ஓம் (வீர)

18. ஊழிக் காளி

(கல்யாணி) (ரூபகம்)

ப : ஊழிக் காளி நடன மாடினாள்
உருத்திரன் கொண்ட கருத்துற வேண்டி (ஊழிக்)

அ : ஆழி யேழும் ஹாவென் றலறி
அள்ளி யுலகை விழுங்கிக் குமுற (ஊழிக்)

ச : கடகடவென இடி யிடித்திட
ககனம் புவனம் நடுங்க,
தடதடவெனக் காலத் தேரும்
சாய்ந்து வாழ்க்கை ஒடுங்க (ஊழிக்)

படபடவென பஞ்ச பூதம்
பறந்து பாழில் வீழ,
சடசடவென உயிர்கள் உதிரத்
தணலும் கோபப் பொரிதெறித்திட (ஊழிக்)

முதிய உலகம் முற்று மொழிய,
மூல சக்தி யன்னை
புதிய உலக மாக்க வேகப்
புயல் அலைகளை வீசி
தட்டுக் கெட்டு எட்டுத் திசைகளும்
தகர்த்திடத் தகர்தின தோமென (ஊழிக்)

19. அபயம்

(பூர்வீகல்யாணி) (ஆதி)

ப : அபயம் அளித்தென்னை ஆண்டுகொள் ஓம்சக்தி
அம்மா தயாபரியே—ஜகதீச்வரி (அப)

அ : சபதங்கூறி வரும் சங்கட ராக்ஷஸர்
சள்ளை பொறுக்க வில்லை; பிள்ளைமொழிக் கிரங்கி (அப)

ச : காலத்தின் அலங்கோலம்—வெறும்
கவலையின் இந்த்ர ஜாலம்
தூலத்தின் மினுக் காட்டம்—எல்லாம்
சொற்பனப் பட ஓட்டம்
வேலொத்த விழிவலையில்—மாந்தர்
மீனெத்து விழுந் தலைவார்...
பாலொத்த சிலர்களை—நயவஞ்சப்
பதகர் பழிதூற்றுவார்...
ஞாலத்தில் எவரையும் நம்ப வழியில்லை;
நானென தென்கின்ற நச்சுப்பிடித்த தொல்லை (அப)

20. மங்களாம்பிகே

(பைரவி) (ஆதி)

ப : மங்க ளாம்பிகே—மஹாலக்ஷ்மி தாயே
மந்தஹாஸமுடன் வந்தெனுள் வசிப்பாய் (மங்)

அ : பொங்கு செல்வமும் போக போக்யமும்
புவிபோற்றும் கலைப் புகழுந் தருவாய் (மங்)

ச : தாழ்வு நீங்கியே ஸௌபாக்யம் ஓங்க
தரணிமுற்றும் சுத்த சமரஸம் விளங்க
வாழ்வெல்லாம் இன்ப வரகவி யாக
மன்னுயிர் நலமே என்னுயிர்க் கினிதாய் (மங்)



4. வள்ளி—முருக நடனம்

21. குமரா !

(சோலைக் குயிலுக்கு வள்ளி தன் காதலைச் சொல்லுகிருள்.)

(காமாசு) (ரூபகம்)

ப : குமரா எனக் கூவு பூங்குயிலே—மனங்
குளிர வா ஷண்முக குகசுகக் (கும)

அ : அமரர்படைத் தலைவா, சிவன்
அருள் வீர, என் ஆசைக் கினிய (கும)

ச : கன்னி யென்னைக் காதலித்துக்
கதைகள் பேசிக் கைப்பிடித்து,
கன்னங் கனிய முத்தமிட்டுக்
கம்பி நீட்டி வம்பு செய்யும் (கும)

புள்ளி மயில்மேல் துள்ளி வந்து,
புனத்தைக் காத்த தனித்த என்னை,
அள்ளி யணைந்த கள்ளப் புலவன்
அழகன் குழகன் அன்பு நாதன் (கும)

ஒருதரம் மது வுண்ட வண்டின்
ஓயாப் பசி போலென் உள்ளம்
முருகா னந்தத் தேனைப் பருக
மோகங் கொண்டது தாகந் தணிக்கும் (கும)

22. வா வெனக் கூவுகின்ருள்

[முருகன், வள்ளியைத் தேடி வருகிருன்]

(காபி) (ஆதி)

ப : 'வா' வெனக் கூவு கின்ருள்—வள்ளிக்குயில் (வா)

அ : தாவும் அருவிவளர் பூவார் குறிஞ்சியிலே,
தனிமையைத் தாங்காமல் இனிய குரலெடுத்தே (வா)

ச : முல்லேச் சிரிப்புடையாள்—பொன்முகத்திலே
மோகச் சிவப்புடையாள்—காமன்வில்லே
வெல்லும் புருவமுடையாள்—எனதுகை
வேலேப் பழித்த விழியாள் !—

கல்லுங் கரைந்துருகும்
காதலோ டென்பெயரைச்
சொல்லிச் சொல்லி நெஞ்சைத்
தூதுவிட் டார்வமாய் (வா)

23. வெட்கமா யிருக்குதடி

(முருகனைக் கண்டதும், வள்ளி நாணத்துடன் முகத்தைத் திருப்பித் தோழியிடம் கூறுதல்.)

(நாதநாமக்கிரியை) (ஆதி)

ப : வெட்கமா யிருக்குதடீ—தோழீ இந்த
வேலவர் செய்திடும் வேலேயில்லா வேலே (வெட்)

அ : அக்கம் பக்கத்து விட்டார் கொக்கரித்துச் சிரிக்க—நான்
ஆசை கொண்ட கதையைக் கூசாமல் பேசுகிருர் (வெட்)

ச : சிந்தை குவிந்து சற்றே தியானித்தாலுமே போதும் ;
திருப்பரங் கிரிப்பக்கம் திரும்பிப் பார்த்தாலும்போதும் ;
கந்தா என்ருலும் போதும்; இந்தா வென் றென்முன்வந்தே
கருத்தைத்தொட் டிழுத்தவர் கையைத்தொட்டிழுக்கிருர் (வெட்)

24. முகத்தைத் திருப்பி

(வள்ளி, நாணப் பார்வையுடன் மயில் ஏறுதல் ; வள்ளி, முருகர் மறைதல்.)

(ஆனந்த பைரவி) (ஆதி)

ப : முகத்தைத் திருப்பிக் கொண்டாயே—நமக்குள் இந்த
மூடுமந்திரம் வேண்டுமோ ?—நாணமோடீ ! (முக)

அ : சகமெல்லாம் அறிந்தபின் சாகசப் பிலுக்கேனே ?
சந்திரனை அல்லி தடுத்திடுமோ—மானே! (முக)

ச : வருவாரோ துரையென்றே வருந்தித் தவிக்கின்றாய் ;
வாகாக வந்தபின் ஆகாசம் பார்க்கின்றாய் ;
ஒருவார்த்தை சொல்லாமல் ஊமைபோ லிருக்கின்றாய் ;
ஓகோ இப்பெண்களின் மோகக்கோணலென் சொல்வேன்
(முக)

மின்னலைப் போலே ஒரு வெட்டு நகை வீசி,
மீன்விழிக் கோணத்தால் மெல்லக்கண்டு குனிந்தாய்.
கன்னத்தில் உன்னாசை கனிந்து காட்டுதே, வள்ளி
காதலால் அதையுண்ணக் களிக்குதென் மனந் துள்ளி
(முக)

கட்டுக்கொண்டை முடித்த காட்டுமல்லிகையுமுன்
கதையினைச் சொல்லிச்சொல்லிக் கள்ளநகை செய்குதே !
எட்டி எட்டிச் சென்றால் விட்டு விடுவேனோடீ !
ஏகுவோம் பரங்கிரி ! ஏறடீ மயில்மேலே! (முக)

25. சண்டை வருகுதடீ !

(தெய்வானை மேற்படி செய்தி யறிந்து, தனது தோழியிடம் முருகன் நடத்தையைப் பற்றிச் சொல்லுதல்.)

(மத்தியமாவதி) (தேசாதி)

ப : சண்டை வருகுதடீ—சக்களத்திச்
சண்டை வருகுதடீ (சண்டை)

அ : எண்டிசை யும்புகழும் எம்மான் ஷண்முகதுரை
வண்ட வாளங்களெல்லாம் கண்டுகொண்டேன் சகியே
(சண்டை)

ச : அப்பனுக் குபதேசம் தப்பாமல் செய்தவன்,
அடியே னிடந் தினமும் அன்பு நடித்த குகன் ;
இப்படிக் கண்ணைக் கட்டிச் செப்படி வித்தை செய்தான்
இரட்டைப் பெண்சாதிக்காரன் அரட்டை யைப் பார்ப்போ
மினிச் (சண்டை)

26. வாரும், வாரும் வேலவரே

(வள்ளி முருகன் வருதல். தெய்வானை குத்தலாகப் பாடல்)

(ஸ்ரீ) (ரூபகம்)

ப : வாரும், வாரும், வாரும் வேலரே—குற
வள்ளி...புதுக்...கள்ளியுடனே ! (வாரும்)

அ : தீரும், தீரும் திருட்டுக் காதலே
தெய்வானைக்குந் தெரியும் தெரியும் (வாரும்)

ச : மான்வேட்டைக்குச் சென்ற பேச்சு,
மயிலுக் கொரு முன் பார மாச்சு,
தேன் திங்களுந் தினைப் புனத்திலே
செலவி டாது திரும்பி னீரே... (வாரும்)

வேடர் கண்ணில் பொடியைத் தூவி,
வேலின் சமர்த்தைச் சேல்விழிமுன்
நாடக மாக நடத்திக் கடத்தி
நடந்த கதையை நானும் கேட்க (வாரும்)

உரத்தி வேதம் உபதே சித்திர்
ஊரெல்லாம் பெத்த பேரும் பெற்றீர்;
குறத்தி மோகங் கொண்ட உமது
குட்டும் இன்று வெட்ட வெளிச்சம் (வாரும்)

அப்பன் பாம்புக்கும் அச்ச மில்லை ;
அம்மை நிலிக்கும் அச்ச மில்லை ;
† ஒப்பிலி மகன் ‡ தப்பிலி யென்றே
உலகம் அறிய உண்மை சொல்வேன் (வாரும்)

27. ஓகோ...செப்படியோ

[வள்ளியம்மை முருகனை இடித்துக் காட்டல் தெய்வானையிடம் இன்னும் இவர் குட்டை உடை என்னல்.]

(பியாகடை) (சாப்பு)

ப : ஓகோகோ...செப்படியோ—முருகையரே
உம்செய்தி இப்படியோ ?—அக்கச்சி இன்னும் (ஓகோ)

அ : தாகமென்றார்—மன மோகமென்றார்—மங்கை
பாகன்மகன் பின்வி வாகமென்றாரடீ (ஓகோ)

ச : தாலிகட்டிக் கொண்ட தாரம் இருக்கையிலே,
தரங்கெட்டு வந்தெனது கரம்பிடித் தாரம்மா !
பாலுக்குங் காவலாய்ப் பூனைக்குந் தோழனாய்ப்
படுமோசஞ் செய்தீரே,
நெடுங்கதிர் வேலரே ! (ஓகோ)

---

† ஒப்பிலி—ஒப்பில்லாத சிவன்; ‡ தப்பிலி—தப்பில்லாதவன்

கண்ணைத் திருப்பிச் சும்மா விண்ணைப்பார்த் தாலுமே
கட்டைவிரற் சட்டங் காட்டுந் துரைமார்கள்...
பெண்ணைக் கடத்திச் செல்லக் கண்ணைப்புரட்டியே
பெருத்த சரடுகளைத் திரித்து விடுவதென்னே. (ஓகோ)

என்னையிவர் வஞ்சித்த தெண்ணி யெண்ணி நெஞ்சம்
எரியில் விழுந்தபுழு என்னத் துடிக்குதம்மா !
பொன்னைக் கொடுத்தாலும் போன மானம் வருமோ ?
புன்னகை புரிகிறீர் என்னவழி சொல்கிறீர் ?— (ஓகோ)

28. உண்மை யறியாமல்

(முருகன் தனது தத்துவ ரகசியம், வள்ளி தெய்வானை ரகசியம் முதலியவற்றை விளக்குகிறான் : சிவக்கனலே முருகன். அக் கனலின் இரண்டு கொழுந்துகளே வள்ளி தெய்வானை. இக் கனல் சூரனைச் சுட்டு, அசுரத்தன்மையை வீழ்த்தி, உலகில் தெய்வக் கனலை நாட்டவே வந்தது.)

(உசேனி) (ஏகத்ரிச்ரம்)

உண்மை—யறியாமல் இருவரும்
உளறுகின்ற தென்னே—முக்
கண்ணன் பராசக்தி—தந்த
கனல் வடிவமன்றோ—நாம் சிவக்
கனல் வடிவமன்றோ ! (உண்)

தானவரை யழித்தே—தெய்வத்
தன்மையைக் காத்திடவே
ஞானச் சிவபெருமான்—தந்தார் ;
நம்மைக் கனலெனப் பார் ! (உண்)

(முருகன், கனல் வடிவாகிறான்; வள்ளி தெய்வானைகள், கனலில் இரண்டு சுடர்க்கொழுந்துக ளாகின்றனர் ; மயில் ஓமகுண்டமாகிறது. சிவபெருமான் தோன்றி, மீண்டும் அவர்களை முன்னுருவாக்கிச் சொல்லுதல்.

சிவன் : முச்சுடர் மாமணிகாள்—வேல்
முருக மாணிக்கமே—உலகில்
அச்சம் ஒழிந்திடவே—உம்மை
அளித்தனன் அருளால் !

கொழுந்தொளிர் கனல்காள்—முன்னே
கொண்ட வடிவுடனே,
எழுந்து நான் மகிழ—உடனே
இன்பநடம் புரிவீர் !

(முருகன், வள்ளி, தெய்வானை மூவரும் எழுந்து கைகோத்து சிவபிரானை வணங்கி நடனமாடல்.)

மூவரும் : சிவசக்தி வணக்கம்—மஹா
தேவனே வணக்கம்
தவச் சுடர் பரவும்—அருட்பெருந்
தன்மயனே வணக்கம்

தெய்வானை : ஓங்கார மெய்ப்பொருளைத்—தேவர்முன்
ஓதிய போதகனே,
ஆங்காரம் நீங்கிடவே—எனக்கோர்
அரிய சொல் லருள்வாய்

வள்ளி : உன்பெயர் சொன்னவுடன்—முருகா
உள்ளஞ் சிலிர்க்குதையா !
அன்பெனுந் தென்றல் வந்தே—என்னுடன்
ஆனந்தம் பாடுதையா !

தெய்வானை : வள்ளி மணாள னென்றால்—எனக்கொரு
வல்லமை ஏறுதம்மா—என்
உள்ளம் உருகுதம்மா—முருகன்
உருவைக் கண்டதுமே !

வள்ளி : செங்கதிர் பொங்கு முகம்—ஞானத்
தீப்பறக் கும் விழிகள்—உன்
மங்கள முத்துநகை—தன்னில்
மயக்கங் கொண்டுவிட்டேன் !

தெய்வானை : சொக்குஞ் சுடர்நெடுவேல்—வீசிச்
சூரனைக் காய்வதுபோல்—என்
பக்கம் படையெடுக்கும்—பகையைப்
பாய்ந்து தகர்த்தெறிவாய் !

இருவரும் : நில வுலகினிலே—உனைப்போல்
நேசன் எமக்குண்டோ ?
தலை வணங்குகிறோம்—ஓம் சுத்த
சரவண பவனே !

முருகன் : எல்லையில்லா உலகில்—அரக்கர்
இரத்தமழை பொழிவார்—அவர்
தொல்லை யொழிப்பதற்கே—பிடித்தேன்
சொக்குஞ் சுடர்வடிவேல் !

சூரபத்மன் செருக்கைத்—தகர்த்துத்
துன்ப மொழித்திடவே
வீரக்கனல் வடிவேல்—எடுத்தேன்
வெற்றி சிவம் அருள்க !

(முருகன் போர்க்கோலத்துடன் செல்லல்.)

29. உலக மெல்லாம் கிடுகிடுக்க

(சூரனும் அரக்கரும் தாம் கொன்று குவித்தபிணங்க ளிடையே பாடி யாடுதல்.)

(மாண்டு) (திஸ்ர ஏகம்)

உலகமெல்லாம் கிடுகிடுக்கக்
கலகம் செய்வோமே;
உயிர்க ளெல்லாம் நடுநடுங்கத்
துயர்விளைப் போமே ! (உல)

காற்றுங் கடலுங் கதிரும் அஞ்சும்
ஆற்றல் கொண்டோமே,
கூற்றும் எங்கள் கட்டளையைப்
போற்றி வாழுமே (உல)

கள்ளும் ஊனும் கலந்துண் டூரைக்
கொள்ளை கொள்வோமே !
நள்ளிரவில் குண்டு போட்டுக்
கொள்ளி வைப்போமே ! (உல)

நோக்குமிக்க நங்கைமாரைத்
தூக்கிச் செல்வோமே
ஆக்க மிக்க செல்வத்திரளைத்
அள்ளிச் செல்வோமே... (உல)

மலைமலையாய் உடல் குவியக்
கொலைகள் செய்வோமே
தலைகள் பேய்ப்பந் தாடக் கண்டு
கலகலப் போமே ! (உல)

கத்தி திட்டிக் குத்தி வெட்டி
இரத்தம் ஊற்றியே,
எத்திசையும் அசுரக் கொடியை
ஏற்றி வைப்போமே ! (உல)

இந்தி ராதி தேவர்களும்
வந்து பார்க்கட்டும் !
விந்தையான கந்தன் வேலும்
வந்து காக்கட்டும் ! (உல)

30. அரக்கர் கொடுமைகளை

(தேவரும் சாதுக்களும், அரக்கர் கொடுமைகளைத் தாங்காமல் முறையிடுதல்.)

(காபி) (திரிபுடை)

அரக்கர் கொடுமைகளை அரைக்கணந் தாங்கோம்
அஞ்சலென் றருள்புரி செஞ்சுடர் வேலா !
உரக்க முறையிடவும் திகைக்குதெம் உள்ளம்
ஊனரின் ஆணவம் காண்வடி வேலா ! (அர)

வேதனை தாங்கிலம் ; சோதனை ஏனோ ?
வீரக் கனல்வடி வேல்முரு கையா,
தீதினைத் தொழிலெனச் செய்பவர்—தீமை
தீர்சரண், தீர்சரண்—கூர்வடி வேலா ! (அர)

31. வீரக் கனல் பறக்கும்

(முருகன் வீரவேலுடன் சூரபத்மனைப் போரில் வதைத்தல்)

(செஞ்சுருட்டி) (திஸ்ர ஏகம்)

வீரக்கனல் பறக்கும்—சக்தி
வேல்சக்தி வேல்சக்தி வேல் !
கோர நிருதர்களை—அழிக்கும்
கொற்ற நெடு வடிவேல் !

சூரன் : கூத்தாடி யின்மகனே—வனக்
குறத்தி காதலனே !
ஆத்திரங் கொண்டுவந்தேன்—உன்னை
அள்ளி விழுங்கிடவே !

முருகன் : வீரங் குமுறுது பார்—வெற்றிவேல்
விம்மிக் குதிக்குதுபார் !
சூரபத் மாசுரனே—உன்னை அது
சுட்டுப் பொசுக்குதுபார் !

தேவர் : வீணரட்டை யடிக்கும்—அசுரா
விழுந்து கும்பிடடா—உன்
ஆணவப் பொய்மதத்தை—அழிக்கும்
ஆற்றல் பிறந்ததடா !

சூரன் : எட்டெட்டுத் திக்குகளும்—பயப்படும்
இரத்த ஜோதியடா—என்
கிட்டவராதே போ—முருகா
கிழட்டுத் தந்தையிடம்.

முருகன் : பாவிப் பழிகாரா—இனிப்
பாரில் இருக்காதே—உன்
ஆவியை உண்ணுதுபார்—நல்
அன்பரைக் காத்திடும் வேல்.

மலைகளைத் தகர்க்கும்—வடிவேல்
மமதை கொண்டவனே—உனது
தலைகளைத் தகர்க்க—இனியும்
தாம திப்ப துண்டோ ?

வைரிகளை யழிக்கும்—எனது
  வைரக் கொடுநெடுவேல்—உன்
கைகளை வீழ்த்தாமல்—வீண்
  காலம் போக்கிடுமோ ?

கொழுத்த தானவரை—அழித்திடக்
  குதித்திடும் ஜய வேல்—உன்னை
அழித்த சாம்பலின்மேல்—நட
  மாடிக் களிப்பதைப் பார் !

32. போற்றி போற்றி

(முருகன், சூரனைக் கொன்று வீழ்த்தல். தேவர் மலர் மாரி சொரிதல். வள்ளி தெய்வானை ஆலத்தி எடுத்தல். எல்லாரும் வெற்றி நடனமாடுதல்.)

(ஜோன்புரி) (ஆதி)

போற்றி போற்றி போற்றி வேலவா—நல்ல
  புகலளித்தனை இகலொழித்தனை
  பொலிக நின் புகழே !
ஆற்ற லளிக்கும் அருந்தவக் கனலே !—எங்கள்
  அச்ச மொழித்தே அபயமளித்த
  அருட்பெருஞ் சுடரே !

வாழ்க வாழ்க வீர சக்திவேல் !—எங்கள்
  வழியினில் வந்து பழிசெயும் பகை
  அழியச் செய் வடிவேல் !
சூழ்க வீர ஜோதி எங்குமே—சிவ
  சுப்ர மண்யன் கிருபை யாலே
  துலங்குக ஜயமே !

5. கீதா நடனம்

33. ஆவி பதறுதையா

(குருகுலப் போரில், பெரியாரைக் கொல்ல மனமின்றி, விஜயன் வில்லைக் கீழே போட்டுச் சோர்ந்து நிற்றல்.)

(பரசு) (ஆதி)

ப : ஆவி பதறுதையா—காண்டீபமும்
அம்புந் தளருதையா—கண்ணா கண்ணா கண்ணா—என் (ஆவி)

அ : பாவிநான் எப்படிப் பந்துமித்திரரையும்
பரமகுருமாரையும் சரந்தொடுத்து
வதைப்பேன்—அந்தோ !—என் (ஆவி)

ச : பார்வேண்டேன்—அதன் சீர்வேண்டேன்—இந்தத்
தேர்வேண்டேன்—அக்கப் போர்வேண்டேன்—
கண்ணா, கண்ணா, கண்ணா !
எல்லாந் துறந்துலகில், இரந்து பிழைக்கின்றேன் ;
கொல்லேன், கொல்லேன், கொல்லேன்,
நல்ல வழி காட்டாய், நாராயணா சரணம் ! (ஆவி)

34. வில்லை எடுத்து நில்லடா

(கண்ணன், சோர்ந்து நின்ற விஜயனுக்குக் கர்ம யோக உபதேசம் செய்து தேற்றி, வில்லை எடுக்கச் செய்தல்.)

(மோகனம்) (ஆதி)

ப : வில்லை எடுத்து நில்லடா—வீர விஜயா
வெய்ய பகையை வெல்லடா ! (வில்லை)

அ : நல்ல ஜாதிச் சிங்கம் நடுங்கித் தளர லாமோ ?
நானிருக்கப் பயம் ஏனுனக் கன்பனே ? (வில்லை)

ச : அழிந்திடும் உடல்களே, அழிவன போரிலே,
அமரத்தன்மை பெற்ற ஆன்மாவை அழிப்ப தார் ?
பழிபாவந் திண்டாது பரமனைச் சரண்செய்து
பணியினைச்செய் ; வரும் பலனை நிவேதித்தே ! (வில்லை)

அறந்தனைக் காக்கவும், அதர்மத்தை நீக்கவும்,
அடிக்கடி உன்னுடன் அவதரிப் பவன்யானே !
மறவாதுன் இதயத்தில் மனனஞ்செய் தென்னையே
மரண பயமொழித்துச் சரணாகதி யடைந்தே (வில்லை)

வேருடன் அரக்கரை வீழ்த்தினேன் முன்பே ;
வெளிக்குத்தான் போர்வினை; ஒளிக்காமல் காட்டுகிறேன்
பாரெல்லாம் என்னுள்ளே; பாரென் விச்வரூபத்தை !
பக்தரைக் கைவிடேன், சத்தியம் செய்கிறேன் ! (வில்லை)

35. வேகமாய் வில் வளைத்தேன்

(கண்ணன் மொழியால் தெளிந்து, விஜயன் வில்லை
வளைத்துப் போர் செய்தல்.)

(அடாணா) (திரிபுடை)

ப : வேகமாய் வில் வளைத்தேன்—கண்ணா இதோ
விரோதிகளை ஒழித்தேன் ! (வேக)

அ : தேகி நித்தியமாம் விவேகங் கொடுத்தாய் ;—சோக
மோகங் கெடுத்தாய்; கர்ம யோகங் கடைப்பிடித்தே
(வேக)

ச : அன்பரைக் காத்து நீ அரக்கரை அழிப்பதை
அகக் கண்ணால் கண்டுகொண்டேன் !
நின்பரம், நின்சரண் உன்செயல் ஆகுக !
நிமித்த காரணமாக நியமித்த வினை செய்ய (வேக)

நீயே உலகமெல்லாம் ; நீயே உயிர்க ளெல்லாம் ;
நீயே எனது புகலாம் !
தேயச் சுடரேஎந் தாயே உனை நம்பினேன் !
செயம் செயம் செயமென்றே
செய்து டங்கார நாதம் (வேக)

6. இராதா கிருஷ்ண நடனம்

36. கண்ணனை வென்றேனே

[கண்ணன் பரமாத்மன் ; ராதை ஜீவாத்மன் ; இராதை அன்பினால் கண்ணனை வசப்படுத்துகிறாள். உலகம் கண்ணன் வசம், கண்ணன் என்வசம் என்று செருக்காடுகிறாள். ஒருநாள் கண்ணனை யமுனைக்கு வரச்சொல்லி, தான் அழகாக அலங்கரித்துக் கொண்டு சென்றாள்.]

(உசேனி) (ஆதி)

ப : கண்ணனை வென்றேனே—அந்தக்
கள்ளனைக் கொள்ளை கொண்டேனே ! (கண்)

அ : மண்ணுல கவன் அடிமை,—அந்த
மாதவன், ராதைக்கு மாறாத அடிமையே (கண்)

ச : பொன்னான மேனியினால்—மாசற்ற
பூரண மதிமுகத்தால்,
மின்னான மெல்லிடையால்—நில
மேக வர்ணவுடையால்,
அன்னம் பழித்த நடையால்—தேவர்
அமுதம் பழித்த மொழியால்,
புன்னகை பூத்த இதழால்—மயில்
போன்ற திருவடிவால்,

அல்லிக் கரங்களினால்,
புல்லிப்புல்லிப் பூரிக்கும்
சொல்லுக் கடங்காத—
சுககனச் சொக்கினால், (கண்)

37. அழகுக் கண்மணியே!

[கண்ணன் திடீரென்று வந்து, இராதையின் அழகுச் செருக்கைக் கேலிசெய்து மறைதல்.]

(செஞ்சுருட்டி) (சாய்ப்பு)

அழகுக் கண்மணியே—அகம்பாவம்
ஆகாது பெண்மணியே !
பழகிய நட்பை—அது
பங்கப் படுத்துமடீ ! (அழ)

எத்தனை தூக்கிடினும்—வானை
எட்டிடுமோ தலையே,
மெத்த வலங்கரித்தும்—இளமை
வென்றிடுமோ வயதை ! (அழ)

வான மழையின்றி—மண்
வளம் பெறுவ துண்டோ ?
ஞான மழையின்றி—வாழ்வு
நன்மை பெறுவ துண்டோ ? (அழ)

பணிவு சற்றுமின்றி—அன்பு
பலன் கொடுப்ப துண்டோ ?
துணிந்து சொல்லுகின்றேன்—செருக்கைத்
தூருடன் வெட்டி யெறி ! (அழ)

மேனி மினுக்குகளால்—என்ன
மேட்டிமை காட்டுகின்றாய் ?
நானென் றகங்கரிக்கும்—பொய்
நடையைக் கட்டிவைப்பாய்—ராதே. (அழ)

38. கண்ணனைக் காணேனே !

[கண்ணை மூடித் திறந்து கண்ணன் மறைகிறன். ராதை யமுனைக்கரையில் கண்ணனுக்காகக் காத்திருந்து, அவனைக் காணுமல், மனம் வெதும்பிப் புலம்புகிறள். அவளது அழகுச் செருக்கும், மெல்லக் கரைகிறது.

(தோடி) (ஆதி)

ப: கண்ணனைக் காணேனே—என் கண்ணுன
கண்ணனைக் காணேனே ! (கண்)

அ : கண்ணை மூடித் திறந்தே காணமல் ஓடிய
கள்ளன், என் உள்வளர்
காதலைக் கொள்ளை கொண்ட (கண்)

ச : பண்ணிசை யமுனையோர் வெண்ணகை புரிகுதே !
பாடும் ஜோடிக்குயிலும் பரிகாசம் செய்குதே !
எண்ணி யெண்ணி யவனை இதயம் பதறுதே,
"ஹே கிருஷ்ண, வா" வென்றே என்னுயிர் கதறுதே !
(கண்)

பங்கயம் குவிந்ததே, பகலொளி சாய்ந்ததே,
பதுங்கிப் பதுங்கியிருள் பாரின்மேல் பாய்ந்ததே ;
தங்கக் கலசமதி தணலென வருகுதே,
தனிமை பிடிக்காதென் மனந்துயர் பெருகுதே ! (கண்)

கட்டழகுச் செருக்கும் விட்டெனைப் போகுதே,
கான்மலர் மணத்தினைக் காற்றடித் தேகுதே,
கொட்டி மலர்விழிநீர் கொங்கை நனைந்ததே,
"கோவிந்தா" எனக்கூவி ஆவியும் கரைந்ததே ! (கண்)

39. மாயம் புரிவதேனே

[கண்ணன், புதர் மறைவில் ஒளிந்து, ராதையின் பாட்டுக்குத் தக்கபடி குழலூதுகிருன் ; திடீரென்று பின்னல் வந்து, கூந்தலை யிழுத்து மறைகிருன் ; அவள் பின்னல் திரும்பினல் முன்னல் வருகிருன் ! ராதை மனம் அலுத்துப் போகிருள் ; உடனே முன் வந்து, அவளைச் சமாதானப் படுத்துகிருன்]

(காமாஸ்) (ஆதி)

ப : மாயம் புரிவதேனே—மனமோகன ? (மாய)

அ : ஆயர்குலக் கொழுந்தாய் அவதரித்த தெய்வமே ! (மாய)

ச : பாட்டுக் கெதிர்பாடிப் பரிகாசம் செய்கின்ருய்
கேட்டதோழிமா ரெல்லாம் கேலி செய்கின்ருரே (மாய)
முன்னலே திரும்பினல் பின்னலே வருகின்ருய் ;
பின்னலே திரும்பினல் பின்னலை யிழுக்கின்ருய் (மாய)

காணும லுன்னைநான் கலங்கித் தவிக்கின்றேன்;
வேணுகானஞ் செய்து விளையாடி மறைகின்ருய் ! (மாய)
கண்ணும் மணியும்போல் கலந்தினி திருந்தோமே ;
கண்மணி போனபின் கண்ணுக்குச் செயலுண்டோ ? (மாய)

40. காதலெல்லாம்

[ஜீவனில் அகங்காரத் தடிப்புள்ள மட்டும் இறைவன் புலப்படுவ தில்லை. ராதை அழகுச் செருக்கால் கண்ணனை வென்று அடி மைப் படுத்தியதாகத் துள்ளினுள்; கண்ணன் மறைந்தான். இப் போது ராதை செருக்கெல்லாம் ஒழிந்து, உள்ளன்புடன் சரண் புகுந்து, கண்ணனை அழைத்தாள். உடனே கண்ணன் வந்து ராதையின் கைகளைப் பற்றி நடனமாடுகிருன். ராதை கண்ணன் இன்பத்தைப் பாடுகிருள்.]

(சிந்துபைரவி) (திரிபுடை)

ராதை :

காதலெல்லாம் கொள்ளை கொண்டாய்—கண்ணு கண்ணு !
கடைக்கண் பார்த் தருளுவாய் —கண்ணு கண்ணு
வேதமெனக் குன்னிசையாம் —கண்ணு கண்ணு
வேணுகானம் செய்வா யென்னுள்—கண்ணு கண்ணு !

கண்ணன் :

தேன்மலர் வனத்திலே —ராதே ராதே!
தெவிட்டாச் சங்கிதம் போலே —ராதே ராதே
ஆனந்த நடஞ் செய்வோம் —ராதே ராதே
அழகுத் திருமணியே —ராதே ராதே !

ராதை :

யாக்கையுன் பிருந்தா வனம் —கண்ணு கண்ணு
ஆடும் உயிர்நீ யதில் —கண்ணு கண்ணு
வாழ்க்கை உனது ராதை —கண்ணு கண்ணு
வாரி யணைத்துக் கொள்வாய் —கண்ணு கண்ணு

கண்ணன் :

பொங்கும் கடலென் ஆர்வம் —ராதே ராதே
பூரண மதியுன் முகம் —ராதே ராதே !

ராதை :

பங்கயமென் அன்புமலர் —கண்ணா கண்ணா
பரிதியுன் புன்னகையாம் —கண்ணா கண்ணா !

கண்ணன் :

அந்தக் கரணத்திலே —ராதே ராதே
அள்ளி யுனைக் கலந்தேன் —ராதே ராதே !

ராதை :

சிந்தையிற் கோயிற் கொண்ட —கண்ணா கண்ணா
ஜீவஜக நிசனே —கண்ணா கண்ணா !

கண்ணன் :

அன்பரும் அன்பும் ஒன்றே —ராதே ராதே
அன்பே கடவுளென்போம் —ராதே ராதே !

ராதை :

இன்பமயப் பொருளே —கண்ணா கண்ணா
எல்லாம் உன் மயமன்றோ —கண்ணா கண்ணா !



7. இராஸ லீலா நடனம்

41. கத்து திரைக் கடலில்

(ஆனந்தபைரவி) (ரூபகம்)

கத்து திரைக்கடலில்—நீலநிறக்
கண்ணன்புரி நடனம்,
தத்து மலையருவி—தடாரெனத்
தாவிப்புரி நடனம் !
தத்தைகள் பேசிடவே—குயில்கள்
சந்தக் கவிபாட,
ஒத்து வண் டுதிடவே—மயிலினம்
ஓங்குமொயில் நடனம் ! (கத்து)

கோதவிழ் பொன்மலர்கள்—தென்றலுடன்
கொஞ்சிப்புரி நடனம்,
காதலர் வெண்ணிலவில்—களிகொளும்
கானத்திரு நடனம் !
ஆதரவோ டடியார்—மகிழும்
அன்புத் திரு நடனம்
நாத வெளியினிலே—சுத்தாத்ம
நர்த்தன மாமிவையே ! (கத்து)

42. கண்ணன் அழைக்கிறான்

(ஜீவாத்ம கோபிகள் பரமாத்மனை நாடுதல் ; பரமாத்மா அன்பைச் சோதித்த பிறகு, ஜீவ பர ஐக்கிய விளக்கமான ராஸ லீலை செய்கிறான்.)

(காபி) (ஆதி)

ப : கண்ணன் அழைக்கிறான், கண்ணன் அழைக்கிறான்,
காதற் சகோதரிகாள்—வாருங்கள் (கண்)

அ : கண்ணைக் கருத்தைக் கவர்ந்து ஒளிந்தநம்
கள்வன் அழைத்துவிட்டான்—வாருங்கள் (கண்)

ச : மண்ணிலும் வானிலும் மோகன நாத
வலையை விரித்து விட்டான் !
கண்ணிவைத் தாவியைக் கட்டிப் பிடித்துத்தன்
கைக்கிளி யாக்கிவிட்டான்—வாருங்கள் (கண்)

குழல் இசைத்தது, குழல் இசைத்தது,
கோவிந்தக் காதலர்காள் !
மழலையும் யாழும் அமுதும் பொழிந்தது ;
மாதவன் பூங்குழலே—வாருங்கள் (கண்)

அழகின் கலைவடி வாகிய மோகனன்,
ஆவியைத் தொட்டி முத்தான் ;
வழியுந் திறந்தது, வாருங்கள்—பிருந்தா
வனத்தினுக் கேகிடுவோம்—வாருங்கள் (கண்)

ஏட்டில் அடங்கா ஒருவன்வந் தென்னுள்ளம்
கொள்ளைகொண் டேகியபின்,
பாட்டலை யேறிப் பரவச மாய்ஜீவப்
படகுமுன் செல்லுதம்மா—வாருங்கள் (கண்)

43. ஏனிங்கு வந்தீரம்மா ?

(கண்ணன் கோபிமார்களைக் கிண்டல் செய்கிருன்.)

(காமாஸ்) (ஆதி)

ப : ஏனிங்கு வந்தீரம்மா ?—இந்தவேளை
ஏனிங்கு வந்தீரம்மா ?—இளம்பெண்டுகள் (ஏனி)

அ : கானத் தனிமையிலே—மோன நிசியினிலே
கரவாக வீட்டைவிட்டுப் பரபுருஷனைத் தேடி (ஏனி

ச : "மகளே கவனம்" என்று மாதா சொல்லவில்லையோ ?
மக்கள் அழவில்லையோ ? மாமியார் தொல்லையோ ?
அகமுடை யானுக்கும் அடங்காப் பிடாரிகளோ ?
ஆச்சரியம் ! ஊரில் பேச்சுவந்தா லென்செய்வீர் ? (ஏனி)

44. கண்ணு, கண்ணு

(நாட்டைக்குறிஞ்சி) (ஆதி)

ப : கண்ணு கண்ணு கண்ணு—மணி
வண்ணு, சரணம் சரணம் ! (கண்)

அ : அண்ணு உன்மேல் ஆசை கொண்டோம்
கண்ணின் மணியே கதிரே—மதுரக் (கண்)

ச : எனதென் றிறுமாந் தலையும்
மனஞ்சிக் கியதுன் வலையில் ;
உனதே உடலும், உனதே உயிரும்,
உனதே பொருளும், மனையுன் னடியே (கண்)

பூவிற் கிறைவா சரணம்—எங்கள்
புகலே, புனிதா சரணம் ;
ஆவிக் கிறைவா, அன்புக் கிறைவா ;
அருளுக் கிறைவா சரணம்,சரணம். (கண்)

45. அன்பை யளித்து விட்டீர்

(கண்ணன், தன்னை ஜீவ சமுதாயநாதனுகக் காட்டி,
கோபியருடன் விளையாடுதல்.)

(செஞ்சுருட்டி) (ஆதி)

கண்ணன் : அன்பை யளித்துவிட்டீர்—கோபிமாரே—உங்கள்
ஆசையை அறிந்துகொண்டேன்—கோபிமாரே
உன்பரம் என்றடைந்தீர்—கோபிமாரே—இனி
உம்மைக்கை விடுவேனே ?—கோபிமாரே ! (அன்)

அகப்பட்டுக் கொண்டுவிட்டீர் கோபிமாரே—இனி
ஆடுங்கள் சொன்னபடி கோபிமாரே—நாளும்
சுகப்பட்டுக் கொண்டிருப்பீர் கோபிமாரே—நான்
சொன்னபடி கேட்டாலே கோபிமாரே ! (அன்)

வீட்டுக் கணவனைப்போல் கோபிமாரே—என்னை
விட்டோட முடியாது கோபிமாரே—நான்
காட்டுக் கணவனன்றே கோபிமாரே—உம்மைக்
கசக்கிப் பிழிந்திடுவேன் கோபிமாரே ! (அன்)

கோபிமார் : கட்டிப் பிடித்துக் கொண்டோம்-கண்ணதுரையே — எம்மைக்
கசக்கிப் பிழி பார்ப்போம்—அன்புத்துரையே !
எட்ட நடப்பதேனே கண்ண துரையே ?—எம்மை
ஏமாற்ற முடியாதே—இன்பத்துரையே ! (கட்)

அல்லிக் கரங்களினல் கள்ளக்கண்ண—உன்னை
அள்ளி யணைந்து கொள்வோம்—கள்ளக்கண்ண !
மெல்லிய பூங்கொடிபோல் மோகனக்கண்ண—உன்
மேனியைத் தழுவுகின்றோம் ஞானக்கண்ண ! (கட்)

(கோபியருள் போட்டி வருகிறது. "எனக்கே கண்ணன்" என்று அவரவர் பங்குபோடுகின்றனர். கண்ணன் எல்லாரையும் ஏமாற்றி மறைகிறன் !)

எனக்கே உரியவனும்—கண்ணதுரையே !
என்னன்புக் காதலனும் மன்மதக்கண்ணன் !
உனக்கில்லை போபோபோ—போட்டியாக—எங்கள்
ஊடே விழுகாதேடி சண்டை வலுக்கும் !

கண்ணன் : உள்ளன்பு நேசருடன் ஆடி மகிழ்வேன் !—சற்றே
ஊனன்பு தோன்றிவிட்டால் ஓடி மறைவேன் !

(கண்ணன் மறைதல்)

கோபிமார் : கள்ளன் மறைந்தானம்மா கோபிமாரே—தேடிக்
கட்டிப் பிடியுங்கோடி கோபிமாரே !

(கோபிமார் காட்டில் கண்ணனைத் தேடுதல்.)

46. மின் போல் மறைந்தானம்மா

(கல்யாணி) (ஆதி)

ப : மின்போல் மறைந்தானம்மா—சின்னிக்ருஷ்ணன்
மேகத்தி லேதோன்றி வேகமாய்ப் பளிச்சிடும் (மின்)

அ : அன்னையும், அப்பனும் ஆசை மணுளனும்
அன்பிளஞ் சேயுமவன்—சகியே
என்னுயிர்க் காதல் அவன்—எங்கோ (மின்)

ச : வெள்ளி யலைவீசி விம்மும் யமுனையின்
வெள்ளிடையில் இருப்பான்—அங்கே
வேடிக்கையாய்ச் சிரிப்பான் !
கள்ளார் மலர்வனத்தில் மெல்லப் பதுங்கி யந்தக்
கள்ளன் ஒளிந்திருப்பான்—சகியே
கண்ணன் ஒளிந்திருப்பான்—ஆஹா (மின்)

கோபி 1 : உள்ளம் உருகி உருகி யமுனையின்
வெள்ளமாய் ஓடுதம்மா—என்
கள்ள மனந்திருந்திக் கண்ணு கண்ணு வென்று
காதலாற் பாடுதம்மா !—அவன் (மின்)

கோபி 2 : மெள்ள மெள்ளக் கண்ணன் வந்துநம் உள்ளே
விளையாட மாட்டானோடீ ?
அள்ளிநம் அன்பை அணைந்துயிர் வாழ்க்கையில்
ஆனந்தங் காட்டானோடி—சகியே (மின்)

கோபி 3 : மாதவன் இல்லாத மானிட வாழ்க்கை—ஒரு
மண்புழு வாழ்க்கை யன்றோ ?—சகியே
மாதவன் இல்லாத கீதம் குடிவெறி
மாக்களின் கூச்ச லன்றோ ?—சகியே (மின்)

எல்லாரும் : நாராயணு கண்ணு ! நாராயணு கண்ணு !
நாராயணு முகுந்தா—நாங்கள்
பூரண மாகவுனைப் புகலென்று நம்பினேம்
போற்றி யெமை யாளுவாய்—

(கண்ணன் மெல்ல வந்து,ஒரு கோபியின் கண்ணை மூடி மறைதல்)

கோபி 1 : மெள்ளப்பின் வந்தென் விழிகளைப் பொத்தி
விரைந்து மறைந்தவன் யார் ?—சகியே
விரைந்து மறைந்தவன் யார்?

கோபி 2 : வெள்ளி நகைபுரியும் முல்லைப் புதரிடையே
கள்ளக் கண்ணன்......பாரடீ......ஹ ஹ என்
கையைப் பிடித்தானடீ !

(கண்ணன் வந்து கோபிமார் கையைப் பிடித்து மாயமாய் மறைதல்.)

47. மாயமாக வந்தே

(கோபிமார் சேர்ந்து கண்ணனுக்கு முறையிடுதல்.)

(பைரவி) (திஸ்ர ஏகம்)

மாயமாக வந்தே—நீ
மாயமாக மறைந்தாய்—உன்னைத்
தூய உள்ளங் கொண்டே—இன்று
தொண்டர் தேடுகின்றோம்—கண்ணா (மாய)

அன்னை தந்தை சுற்றம்—எங்கள்
அருமை பெருமை யெல்லாம்—கண்ணா
உன்னை யன்றி யுண்டோ ?—எம்மை
உதறிச் செல்லலாமோ ?—கண்ணா (மாய)

பொன்முகத்தைக் காட்டாய்—கண்ணா
புன்னகையை நாட்டாய்—கண்ணா
மின்னல் போல வந்தே—எங்கள்
விசனப்பேயை ஓட்டாய்—கண்ணா (மாய)

அன்பு சொல்லி யழைத்தோம்—கண்ணா
அழகு சொட்டும் அமுதா—உன்னை
நம்பி வாழு கின்றோம்—இந்த
நாட்டு மக்க ளெல்லாம்—கண்ணா (மாய)

மோதி விம்முங் கடல்போல்—உன்மேல்
மோகங் கொண்டு விட்டோம் !
காதலான மதியே—ஒரு
கட்டி முத்தந் தாராய்—கண்ணா (மாய)

48. அழைத்தவுடன்

(கண்ணன் மின்போல் துள்ளி வந்து, கோபியர் மகிழ அவர்கள் கையைப் பிடித்து வட்டமிட்டு நடனமாடுகிறான். ராஸ லீலை நடக்கிறது.)

(காம்போதி) *கண்ணன்* (ஆதி)

அழைத்தவுடன் வந்துவிட்டேன்—அன்புக்கோபிமாரே—இனி
ஆர்வமுடன் ஆடிடுவோம்—ஜீவகோபி மாரே !
இன்பராஸ லீலை செய்வோம்—இனிய கோபிமாரே—என்னை
இதயந்தோறுங் கண்டுகொள்வீர்—ஜீவகோபி மாரே !

கோபிகள் :

உன்னடியில் அன்பு வைத்தோம் —கண்ணபரமாத்மா
உலகெல்லாம் நீயெமக்கு —கண்ணபரமாத்மா
வன்னமலர்க் காலையிலே —கண்ணபரமாத்மா
வசந்தமணம் பரப்புகின்றாய் —கண்ணபரமாத்மா !

பொன்பரவும் அருணனிலே —கண்ணபரமாத்மா
புன்னகைசெய் அருளழகா —கண்ணபரமாத்மா
மின்னொளிரும் மேகத்திலே —கண்ணபரமாத்மா
மின்னுவதுன் வண்ணமடா —கண்ணபரமாத்மா !

வஞ்சனைசெய் பூதகியைக் —கண்ணபரமாத்மா
வட்டமுலை உண்டுகொன்றாய் —கண்ணபரமாத்மா
பிஞ்சிளஞ்சேய் தளிரடியால் —கண்ணபரமாத்மா
பேய்ச்சகடை உதைத்தவனே —கண்ணபரமாத்மா !

கன்றரக்கன் உடலைவீசிக் —கண்ணபரமாத்மா
கலகலெனக் கனியுதிர்த்தாய் —கண்ணபரமாத்மா
குன்றெடுத்துக் கோகுலத்தில் —கண்ணபரமாத்மா
கொடும்புயலைத் தடுத்துநின்றாய்—கண்ணபரமாத்மா !

நச்சரவு மேலிருந்தே —கண்ணபரமாத்மா—நீ
நர்த்தனஞ்செய் அர்த்தமென்னே ?—கண்ணபரமாத்மா !
அச்சமில்லை அச்சமில்லை —கண்ணபரமாத்மா—உன்
அருளெம்மைக் காக்குமப்பா —கண்ணபரமாத்மா !

காற்றினிலும் பூங்குழலே —கண்ணபரமாத்மா
காதில் வந்து கொஞ்சுதப்பா —கண்ணபரமாத்மா
ஆற்றினிலும் வேதவொலி —கண்ணபரமாத்மா
ஆத்மசுகம் பேசுதப்பா —கண்ணபரமாத்மா !

ஆவியிலே கலந்துவிட்டாய் —கண்ணபரமாத்மா—நீ
அறிவினுக்கும் அறிவானாய் —கண்ணபரமாத்மா—என்
நாவினிலே சொல்லச்சொல்லக் —கண்ணபரமாத்மா
நல்லமுதம் போலினிப்பாய் —கண்ணபரமாத்மா

கண்ணன்

உடலாவீர் நீரெனக்கு ஜீவகோபி மாரே—என்றும்
உயிராவேன் நானுமக்கே—உண்மை கோபி மாரே !
நடம்புரிவோம் பரவசமாய் அன்புக் கோபிமாரே,
நாதாந்த வெளியினிலே—நல்லகோபி மாரே !

8. வேத நடனம்

49. அமுதம் உண்டோமே

(இந்திராதி தேவர் அசுரரை வென்ற மகிழ்வில் அமுதுண்டு நடனமாடுதல்.)

(காபி) (ஆதி)

ப : அமுதம் உண்டோமே—சச்சி
தானந்தத்தில் ஊறிப் பெருகும் (அமு)

அ : நமுசியாதி அசுரர் வீழ
நல்ல தேவர் நீடு வாழ (அமு)

ச : இந்த்ரன் அக்னி வாயு சூர்யன்,
ஏமன் வருணன் இனிய அதிதி,
சந்த்ரன் விஷ்ணு கந்த ருதி
சக்தி பெற்ற அமரர் கூடி (அமு)

பொய்யகந்தைப் புல்லர்பொன்ற
பொருளறிந்த புலவர் ஒன்ற
தெய்வஜோதி வையமெங்கும்
திகழ அந்த ராத்மன் மகிழ (அமு)

50. சூரியனே வணக்கம்

(ஸ்ரீ) (ரூபகம்)

சூரியனே வணக்கம்—அருட்
சோதிக் கதிரவனே
பாரினைக் காத்தொளிரும்—ஆத்ம
பானு, திவாகரனே

வான வெளியினிலே—ஒரு
வட்டக் கடவுளைப்போல்
மோன விளக்கொளியாய்—வந்து
முன்னுல காண்டிடுவாய்

கோடி யுடுக்கணங்கள்—உன்
கொஞ்சு நகைக் கிணையோ ?
தேடியறி கலைகள்—உன்
தியானக் கதிர்க் கிணையோ ?

ஒன்று பரம்பொருளே—இந்த
உயிர்க்குலம் அதன் கதிர்கள்
என்று விளக்குகின்ருய்—எல்லார்க்கும்
இன்பமருள் சுடரே.

51. எவன் இந்த யக்ஷன் ?

(இது கேனுேபநிஷத்தின் விளக்கம் : தேவர்கள் அசுரரை வென்று, தமதே வெற்றியெனச் செருக்குறல் ; பிரம்மம் ஓர் யக்ஷனுக அவர் முன் தோன்றல் ; அக்னி, வாயு, இந்த்ரன் இம் மூவரும் யக்ஷனைக் கண்டு வியந்து, அவன் யார் என்றறிய முயலுதல் ; யக்ஷன் முன் அவரவர் திறமைகளைப் பேசல் ; யக்ஷன் முன்னே யிட்ட ஒரு துரும்பைக்கூட அக்னி எரிக்க முடியவில்லை ; வாயு எடுக்க முடியவில்லை. இந்திரனைக் கண்டதும் யக்ஷ வடிவம் மறைகிறது. இந்திரன் திகைக்கிருன்.)

(காம்போதி) (ஆதி)

இந்திரன்

ப : எவனிந்த யக்ஷனென் றறியோமே—தாயே
இதுபெரும் அதிசயமே ! (எவ)

அ : சிவசக்தியே யருள் தெய்வ ரகசியத்தை
தேவர்கள் ஆகிய மூவரும் திகைத்தனம் (எவ)

ச : இக்குனித் துரும்பினை யிட்டுமுன் சோதித்தான் ;
ஏழேழுலகத்தையும் எரித்துச் சாம்பலாக்கிடும்
அக்கினித்தேவனும் முக்கிப்பார்த் தயர்ந்தனன் ;
ஆற்றல் மிகு வாயுவும் தோற்ருனத் துரும்பிற்கே (எவ)

விருத்தி ராதி தானவர் வீழச் சமர்புரிந்து,
வெற்றிபெற்ற தேவர் வேந்தன்யான் வந்ததும்,
உருக்கரந்து மறைந்த ஒருவன் ஒப்பில் லாதவன்,
உண்மையைச் சொல்வாய்முக் கண்ணன் பராசக்தியே (எவ)

(பராசக்தி ஜோதிமயமாக வந்து, இந்திரனுக்கு பிரம்ம லக்ஷ ணத்தை உபதேசித்தல்)

(பரசு) (ஆதி)

ப : அதுவே பரப்பிரமம்—அதன் பெருமை
ஆரறிவார் ? சச்சி தானந்த வடிவமாம் (அதுவே)

அ : எதுவே சொல்மனம் எட்டாத உண்மையாம்
எக்ஷணாய் எதிர்வந்த ரக்ஷக சக்தியாம் (அதுவே)

ச: தானவரை யழித்து, வானவருக்கு வெற்றி
தந்த தனந்த சக்தி தாங்கும் பரம்பொருளே !
ஏனதை யறியாமல் இறுமாப் புடனிருந்தீர் ?
இமயவர் பலமெல்லாம் இதன்முன் ஒருதுரும்பாம்
(அதுவே)

கண்ணினிற் காண்பது, காதினிற் கேட்பது,
கருத்தினில் நினைப்பது, காயத்தில் உயிர்ப்பது,
விண்ணிலும் மண்ணிலும் தன்மயமானது,
வேதங்கள் "ஓம்" என்றே ஓதும் சுயம்ப்ரகாசம் (அதுவே)

9. பக்தி நடனம்

52. பொருள் இது

(திருவாசகப் பொருளைக் கேட்டவர்க்கு "இதுவே அது" என்று மாணிக்கவாசகர் பாடி நடன ஜோதியில் மறைதல்.)

(அடாணு) (ஆதி)

ப : பொருள் இது...பொருள் இதுவே—திருவாசகம்
போதிக்கும் பேரின்ப ஜோதிலய மளிக்கும் ! (பொரு)

அ : திருப்பெருந் துறையிலே அருட்பெருங் குருபரன்
சிந்தைகூர்ந் தொருதினந் தந்த மந்திரத்தின்! (பொரு)

ச : ஆசை யாணவச்சுமை அனைத்தையும் பறித்தே,
ஆவுடையார் கோயில் அணியுறச் சமைத்தே,
பேசரியசிவ நேசந்தந் துலகென்னைப்
பித்தனென் றேசிட வைத்த திருவுளத்தின் (பொரு)

அரசன் இருட்சிறையில் அடைத்தென்னை ஒறுத்திட,
அதுவுமுன் செயலென்றே அடியனும் பொறுத்திட. .
நரியைப் பரியாக்கிப் பரியை நரியாக்கி,
நதியின் வெள்ளம் பெருக நாதன் விளையாடிய (பொரு)

வன்னி பிட்டுக்குக் கூலிக்கு மண்சுமந் தாடினுன்
மன்னவன் பிரம்புண்டு மின்னென ஒடினுன்
என்னவன் இவனென்றே என்னையும் விளக்கினுன்,
இங்கே தில்லையில் வந்து தங்க வழிதுலக்கினுன்! (பொரு)

அம்பலப் பித்தனும் என் கவி தன்னையும்
அழகிய கிழவனுய் எழுதிவைத்து மறைந்தான்.
எம்பர மானந்தன் அன்பருக் கன்பனுய்
இன்பம் அளித்திங்கே இரண்டறக் கலந்திடும் ! (பொரு)

53. நமனில்லை

(அப்பரின் அன்பு)

(வசந்தா) (ஆதி)

ப : நமனில்லை நரக மில்லை—இனி
நாமார்க்கும் குடியுமில்லை (ந)

அ : அமரரே நரர்களெல்லாம்—பொன்
அம்பல மருந்தினை அக மகிழப் புசித்தால் (ந)

ச : நீற்றறையும் குளிரும்—ஓம்
நீலகண்டன் அருளால்
கூற்று நடுநடுங்கும்—மதக்
கொடுங்கரியும் பணியும்
சோற்று நஞ்சும் சுவைக்கும்—கல்லும்
தோணி யென மிதக்கும்
காற்றிலும் கதிரிலும் கலந்துறை ஒருவனைப்
போற்றி செய் நெஞ்சமே பொன்னம்பலச் சிவனை (ந)

54. ஆவியைக் காப்பவர்

(ஆண்டாள் காதல்)

(கல்யாணி) (சாபு)

ப : ஆவியைக் காப்பவர் அரங்கத்தம் மானிடம்
அடியேனைச் சேருங்களேன் . . ! (ஆவி

அ : பாவிமனம் அந்தப் பரந்தாமனை நினைந்தே
பதைபதைக்கு தம்மா—இந்தப்—பாவைக் கிரங்கிவந்தே
(ஆவி)

ச : கூட்டில் இருந்து கிளி கோவிந்தா எனக்கூவும் ;
கூசாதவனைக்கூட ஆசைமுன்னேதாவும் !
ஊட்டக் கொடுத்தாலும் உலகளந்தான் பேரே
உண்பே னெனப்பதறி உயிரும் படபடக்கும் (ஆவி)

வீடும் உறவுமினி வேண்டி யிருக்கவில்லை ;
வீதி சிரித்தாலும் வெட்க மெனக்கில்லை ;
நாடறிந்த கதையை மூடவு முடியுமோ ?
நாரண நம்பிவந்து நாணஞ்சிதைத்தா னம்மா ! (ஆவி)

சோலைக்குயிலுடனே சொல்லிச்சொல்லித் தவிப்பேன்,
சோடிமயலுக்கவன் மோடியை யுரைப்பேன் ;
மாலைமுல்லைத் தென்றலை ஓலையெங்கே யென்பேன்.
மாதவன் காதலின்னும் சோதிக்குதே அம்மா ! (ஆவி)

55. கனவில் வந்தவுடன்

(ஆண்டாள் கனவு)

(சகானு) (ஆதி)

ப : கனவில்வந் தன்புடன் எனது ரங்கதுரை
கலியாணம் செய்துகொண்டான்—கேளடீ தோழி ! (கன)

அ : நினைவில்வைத் தென்றும்யான் நெக்குநெக் குருகிய
நேசன் அரங்கநகர் வாசன் சர்வலோகேசன் (கன)

ச: தோரணப்பந்தல் அலங் காரமென்னசொல்வேன் ;
தொகைதொகையான சீரின் வகைகளென்ன சொல்வேன்;
பூரண கும்பத்தின் பொலிவையென் சொல்லுவேன் ;
புண்ணியர் பல்லாண்டு புகன்றதை யென்சொல்வேன் (கன)

மங்கல வாத்தியம் பொங்கிய தென்சொல்வேன் ;
மந்திர கோஷத்தின் மகிமையென் சொல்லுவேன் ;
செங்கையைப் பற்றியென் அங்கங்குளிரக் கண்ணன்
தீவலம் வந்ததன் செவ்வியை யென்சொல்வேன் !
(கன)

அணியரங்கப் பெருமான் மணிமாலை சூட்டியென்னை
அன்பான உள்ளத்தில் அள்ளி யணைந்தானடி.
இனியவன் வேறில்லை இளகி யிளகி மனம்
என்னைக் கொடுத்ததுவும் தன்னைக் கொடுத்தானம்மா !
(கன)

56. அன்புக் கடலினிலே

(வெண்ணிலாத் தூது)

(நீலாம்பரி) (ஆதி)

அன்புக் கடலினிலே வெண்ணிலாவே
அமுத கலசம் போன்றாய் வெண்ணிலாவே
துன்பக் கடல்கடக்க வெண்ணிலாவே
தோணியாய் உதவாயோ வெண்ணிலாவே.

காதலர் பிரிவினை வெண்ணிலாவே
கனலெனச் சுடுகின்றாய் வெண்ணிலாவே
தூது சொல்லி வாராயோ வெண்ணிலாவே
துளவ மார்பன் வரவே வெண்ணிலாவே.

அல்லிக் குளத்தினிலே வெண்ணிலாவே,
அன்னம்போல் ஆடுகின்றாய் வெண்ணிலாவே
மெல்லிய தென்றலுடன் வெண்ணிலாவே—
மேனியைக் கொஞ்சுகின்றாய் வெண்ணிலாவே.

மேகப் படலத்திலும் வெண்ணிலாவே,
விளையாடி வருகின்றாய் வெண்ணிலாவே
மோகப் படலத்திலே வெண்ணிலாவே
முகுந்தனைத் தேடுகின்றேன் வெண்ணிலாவே.

விண்மணிச் சுடரிடை வெண்ணிலாவே,
வெண்டா மரையைப் போன்றாய் வெண்ணிலாவே
கண்ணனை எண்ணி எண்ணி வெண்ணிலாவே
கண்விழித் திருக்கின்றேன் வெண்ணிலாவே. .

57. கிரி தர கோபாலன்

(மீராவின் பக்தி)

(காபி) (ஆதி)

ப : கிரிதர கோபாலன்—எனதுயிர்க் காதலன்
கிருஷ்ணனைத் துதி மனமே—தினமே (கிரி)

அ : பரம தயாபரன், பக்தரக்ஷகன் கண்ணன்,
பாரினில் அவனன்றி ஒர்துணை யில்லையே ! (கிரி)

ச : ஊணுறக்கமும் வேண்டேன் ; உலகின் சலுகை வேண்டேன்
உற்றார் பெற்றார் வேண்டேன் மற்றநினைவும் வேண்டேன்;
நாணமெல்லாந் துறந்தேன் ; காணப் பொதுஜனங்கள்
நாராயணனைப் பாடி நர்த்தனம் செய்கின்றேன் ! (கிரி)

அரசுரிமையும் வேண்டேன் ; அணிமணிகளும் வேண்டேன் ;
அழகன் அருளொளியை அள்ளி யணைத்துக் கொண்டேன்;
விரசமாய் உறவினர் வேதனை செய்தாலும்,
விசனமில்லை, ஹரி வேணுமுராரி காப்பான் ! (கிரி)

கொண்ட கணவனென்னைத் துண்டுசெய்தா லென்ன ?
கோபஞ்செய் நாத்தியின் சாபம்வந்தா லென்ன ?
பெண்டிரெல்லாம் என்னைக் கண்டு சிரித்தாலென்ன ?
பிரியாதென் மனமினி பிருந்தா வனத்தினின்றே ! (கிரி)

58. வெள்ளத்திலே

(ஆழ்வார் பூர்வராகம்)

(காபி) (ஆதி)

வெள்ளத்திலே பள்ளி கொண்டரங்கன்—மன
வேதனை தீர்த்திடும் சோதி ரங்கன்—என்
உள்ளத்திலே பள்ளி கொண்ட பெருமையை
உரக்கப் பாடுங்கள் பூங்குயில்காள். . (வெள்)

ஆடரங்கன் அன்பர் தேடரங்கன்—அருள்
கூடரங்கன் என்னுள் பாடரங்கன்,
வீடரங்கன் இந்த நாடரங்கன்—விண்
விளக்கரங்கன் வழி துலக்கரங்கன். . (வெள்)

அருவிகளா சோலைக் குருவிகளா—விம்மும்
அலைகடல்காள் கரு மழைமுகில்காள்
திருவரங்கா வா திருவரங்கா எனத்
திசையெதி ரொலித்திடக் கூவுமினே (வெள்)

'59. கொஞ்சிக் கொஞ்சி

(சைதன்யர் பக்தி பரவசம்)

(பேஹாக்) (ஆதி)

ப : கெஞ்சிக் கெஞ்சி யழைத்தேன்—கண்ணா
கேசவ கோவிந்த ராதா ரமணா ஹரி (கெ)

அ : நஞ்சை உமிழுகின்ற நாகப் படத்தின்மீது
நர்த்தனம் செய்நந்த பாலா வேணுவிலோலா. . (கெ)

ச : முல்லைத் தென்றல் வீறுதே—பிருந்தாவன
மோகக் கனல் ஏறுதே—ஆசை
எல்லையின்றி மீறுதே—மனம்
ஏங்கி ஏங்கிச் சோருதே—
கல்லும் கரைந்துருகச் சொல்லும் குரலடங்க
கண்ணும் மயங்க உன்னை எண்ணிப் பரவசத்தால் (கெ)

60. காதலால்

(நம்மாழ்வார் ஸாயுஜ்யம்)

(ஸௌராஷ்ட்ரம்) (ஆதி)

ப : காதலால் உருகியே கண்ணீர் பெருகியே
கலந்துகொண்டேன் எங்கும் கண்டேனே. (காத)

அ : நாதக்கடல் கலக்கும் நல்ல நதியைப் போலே
நாராயணா ஹரி வாராயெனவே கூவியே. (காத)

ச : இரவும் பகலு மவன் முரளிகானத்தைக் கேட்டே
இதயத்தந்திக ளெல்லாம் இன்னிசை மீட்டவே,
அரவணைச் செல்வனை ஆசை துடிதுடிக்க
அள்ளியென் உள்ளத்தில் பள்ளிகொண் டருள்செய்யும் (காத)

வான மழையினிலே மலையின் அருவியிலே
மண்ணின் பசுமையிலே, எண்ணில் உயிர்களிலே,
ஞான நகைசெய்வேணு கான மூர்த்தியுடனே
தேனும் பாலுமெனவே யானும் பரவசமாய்க் (காத)

61. ஊரடங்கும்

(நீலாம்பரி) (ஆதி)

ப : ஊரடங்கும் நிசியில்—கண்ணுளன்
உள்ளடங் காமலே துள்ளிக் குதிக்குதையா (ஊ)

அ : பாரடங்கும் காற்றின் பாட்டடங்கும்—பாடும்
பறவையடங்கும் ஆயர் குரவையும் அடங்குமே (ஊ)

ச : அல்லியைக் கொஞ்சிடும் அம்புலி மானுடன்
அரங்கத்தம்மான் என்னை அலைத்த கதைகளெல்லாம்
சொல்லிச்சொல்லிக் கண்ணீர் மல்கி மல்கி ராதா
சோகங்கொண்டே ஆத்ம தாகங்கொண்டே நிதம் (ஊ)

62. மாலை மயங்குகின்ற

(செஞ்சுருட்டி) (ஆதி)

மாலை மயங்குகின்ற நேரம்—பச்சை
மலைவளரும் அருவி யோரம்
காலைக் கமலமலர் போல முகமலரைக்
கண்டேன் காதல் கொண்டேன்

நெஞ்சந் துடிதுடிக்க நின்றேன்—இரு
நீலக்கருவிழியால் வென்றுன்
கொஞ்சுங் குயிலுடனே கெஞ்சும் எனையணைத்த
குமரன்—அவன்—அமரன்

எட்டிப் பறந்துசெல்லு மின்போல்—எங்கோ
ஏகிப் பறந்துவந்தான் முன்போல்
கட்டிப் பிடித்தினிநான் விட்டுப் பிரிவதில்லை
கண்ணே—என்றுன்—கண்ணன்

உடலும் உயிருமென வாழ்வோம்—இந்த
உலகஞ் செழிக்கநலஞ் சூழ்வோம்.
கடலுங் கதிருமெனக் களித்து மகிழு மெங்கள்
கலவி—இன்பங்—குலவி.

63. ஆடு மயிலே

(புன்னுகவராளி) (ஆதி)

ப : ஆடு மயிலே குதித்—தாடுமயிலே
ஆனந்தத் தோகைவிரித் தாடுமயிலே (ஆ)

அ : பாடுங் குயிலிசைக்க ஆடுமயிலே
பரங்கிரி வேலன்வர ஆடுமயிலே (ஆ)

ச : கடகடவென மேகம் கர்ஜனைசெய்யக்
கம்பிமின்னல் உன்னுடனே பம்பிநடக்க,
தடதட வெனஇடி தாளமடிக்க,
ததிங்கிண தோமென ஆடுமயிலே (ஆ)

64. பிரிந்தினி வாழ்வேனே ?

(பரமாத்மாவினின்று ஜீவாத்மா பிரிந்து வாழ ஆற்ருமல் முறையிடுதல். ஜீவன் தன்னைக் காதலியாகப் பாவித்தல்.)

(ஆனந்தபைரவி) (ஆதி)

ப : பிரிந்தினி வாழ்வேனே ?—இனிப்பிறவிப்
பெருங்கடல் ஆழ்வேனே ?—உயிர்க்கிறைவா (பிரி)

அ : கரந்து நிறைந்தென்னுள்ளே கார்மேக மின்னலைப்போல்,
கண்டுங்கா ணுமலும் பண்டுமுத லிருந்தாய் (பிரி)

ச : என்னைநீ கைவிட்டால் பின்ஞெரு வாழ்வுண்டோ ?
இவ்வுடல் சுமப்பதே எனக்கொரு தாழ்வன்ருே ?
அன்னைபோல் அருளுடன் அன்பரைக் காத்திடும்,
ஆண்டவனே, தில்லைத் தாண்டவனே—உன்னைப் (பிரி)

65. எதற்கெடுத்தாலும்

(காம்போதி) (ஆதி)

ப : எதற்கெடுத் தாலும் என்மேல் எரிந்து விழுவதேனே ?
என்னகுற்றம் செய்தேனே ? (எதற்)

அ : அதற்கும் இதற்கும் சும்மா அப்பழுக்குகள் சொல்லி,
அடுத்த வீட்டு நீலி கொடுத்த மதிமயக்கால் (எதற்)

ச : வந்ததும் போனதும் சிந்தையில் வைத்தேனே ?
வம்பருடனே மனத் தும்பைவிட் டலைந்தேனே ?
தந்திரத் தலையணை மந்திரம் படித்தேனே ?
தனிக்குடி வைத்திடச் சண்டைப் பிடித்தேனே ? (எதற்)

திருகும் பில்லாக்கும் வாங்கச் சிறுவாடு விற்றேனே ?
திருட்டுத் தனமாய் யாதும் சேர்த்துநான் வைத்தேனே ?
கருகு மணியைக்கூட உருவிக் கொண்டுவிட்டீர் !
காதலைத் தவிரவோர் ஆதரவில்லை ஐயா ! (எதற்)

நாடகத் திற்குத் தினம் ஓடக்கா லெடுத்தேனே ?
நாட்டுப்பெண் வரிசையைக் காட்டிப்போர் தொடுத்தேனே ?
ஆடுஞ் சிதம்பரத்தைப் பாடத்தான் மறந்தேனே ?
அடித்தாலும் வைதாலும் அன்பைத் துறந்தேனே ?
(எதற்)

66. அடக்குவாரின்றி

(முகாரி) (சாய்ப்பு)

ப : அடக்குவா ரின்றியின்னும் அழிச்சாட்டியஞ் செய்கின்றாய்
அகம்பாவங் கொண்ட மனமே ! (அட)

அ : ஒடுக்க வணக்கமின்றி ஊரெல்லாந் திரிகின்றாய்
ஓடுகாலிக்குநடு வீடு சரிப்படுமோ ? (அட)

ச : ஓரக்கண் பார்வையும், ஒய்யார நடைகளும்,
ஓயாது பேசிடும் வாயாடித் தனங்களும்,
பேரைக்கெடுக்கும்அக்கப் போரும், பொறுமையும்,
பெண்ணுக்குச் சரியில்லை—மண்ணுக்கும் பயனில்லை (அட)

அடைத்துவைத்தாலும் பூட்டை உடைத்தோடிப் போகின்றாய்;
அண்டப்புளுகுசொல்லி ஆந்தைபோல் விழிக்கின்றாய்.
இடத்தைக் கொடுத்தாலோ மடத்தைப் பிடுங்குகின்றாய் ;
இருக்கட்டும் உன்கொட்டம் இன்றுடன் சரிசரி ! (அட)

67. ஆராதிப்ப தெப்படி ?

(நாட்டை) (ஆதி)

ப : ஆராதிப்ப தெப்படி ? அறியேனே—அப்பா
அட்டமூர்த்தியே, அருட் பெரியோனே—உன்னை (ஆரா)

அ : ஒருருப் பெயரின்றி ஓரிட மின்றியே
பாருல கனைத்திலும் பரந்த பரம்பொருளே ! (ஆரா)

ச : வான்வளை யிடமெல்லாம் ஆலயமே—அதில்
வளரும் சுடர்களெல்லாம் மணிவிளக்கே ;
தேன்மலர் வனமெல்லாம் திருமாலை—எட்டுத்
திசைவளர் இசையெல்லாந் தேவாரமே—உன்னை (ஆரா)

அண்டபிண்டத்து ளெல்லாம் அமர்ந்தோனே—எங்கே
ஆசனம் உனக்கிவேன், அறியேனே !
எண்டிசைகளும் உனக் கம்பரமே—எனில்
எதையுனக் கணிகுவேன் எளியேனே ! (ஆரா)

அமரகங்கை யுள்ளதுன் முடிமேலே—எனில்
அபிஷேகம் செய்யவோ அடியேனே !
நமனை யுதைத்த சக்தி நாயகனே—பூஜை
நாளும் வேளையும் உண்டோ, நவில்வாயே ? (ஆரா)

பசிநசை யில்லாத பசுபதியே—எல்லாம்
படைத்தவா, உனக்கென்ன படைப்பேனே ?
வளியமர் வெளியெல்லாம் அணிந்தவனே—ஆடை
வனையவும் வேண்டுமோ சிதம்பரனே ! (ஆரா)

கண்ணும் கதிரும் போலே கலந்தவனே—என்னைக்
காந்தத்தைப் போலுள்ளே கவர்ந்தவனே !
எண்ணும் எழுத்துஞ்சொல்லும் ஆனவனே—உனக்கும்
எந்தமந்திரஞ் சொல்வேன் எளியேனே ! (ஆரா)

சாதி மதங்கடந்த சத்தியனே—எந்தச்
சமயப்படிப் பூசிப்பேன் அறியேனே !
ஆதியந்த மில்லாத சோதியனே—உன்னை
ஆரையா பூசிப்பார் மேதினியில் ! (ஆரா)

10. சரித்திரக் காட்சிகள்

68. காரை நிகர் கருணேசா

(தண்டகாரண்ய முனிவர் அரக்கர் கொடுமைகளை இராமனிடம் முறையிடுதல். இராமன் வில்லைத் தூக்கி அபயமளித்தல்.)

(அடாணு) (ரூபகம்)

முனிவர்

காரைநிகர் கருணேசா—எம்மைக்
  காத்தருள்—அச்சத்தைத்—தீர்த்தருளாய் ராமா !
பாரை அரக்கர் கவர்ந்தார்—அவர்
  பண்ணும் கொடுமையால் புண்ணியர் கண்ணீர்
தாரையாய்ப் பெருகிய தையா—அ
  தர்ம விஷப்புழு சத்திய தருமத்தின்
வேரை யரித்திட லாமோ ?—உன்
  வில்லிருந்தும் இந்தப் புல்லர் கொழுப்பதோ ? (காரை)

(இராமன் வில்லைத்தூக்கி)

அஞ்சலிர் சாதுமுனிகாள்—ராமன்
  அம்புண்டு ; வெற்றி அறத்தினுக் கேயுண்டு ;
தஞ்சம் புகுந்தவர்க் கென்றும்—தெய்வ
  சக்தி துணையுண்டு ; பக்தருக் குய்வுண்டு !
பஞ்சமா பாதகக் கும்பல்—அதன்
  பாபத் தீயாலினிப் பஞ்சென வெந்திடும்.
வெஞ்சமர் மூண்டிடுங் காணீர்—இதோ
  வில்லை வளைத்தனன்—சொல்லைக் கொடுத்தனன் (அஞ்ச)

திண்ணிய தோளின்மேல் ஆணை—என்
  சீரிய வில்லின்மேல் சீதைமேல் ஆணை ;
புண்ணிய பாரத தேசம்—சில
  புல்லரக் கர்செய்யும் தொல்லைக ளால்—இன்று
கண்ணீர் வடித்திடக் காணேன்—இதன்
  காவலுக் கென்றேநான் ஆவலாய் வந்துள்ளேன் !
பண்ணுவேன் டங்கார நாதம்—காலம்
  பார்த்திருக் கின்றேன் என் வார்த்தையை நம்புங்கள்
(அஞ்ச)

69. மூவுலகின் ஒரு நாயகன்

(அசோகவனம் ; இராவணன் தற்பெருமை பேசிச் சீதையின் மனதைக் கவரப் பார்க்கிருன். சீதை தனது கற்புறுதியைக் காட்டி, ''போடா துரும்பே' என்று மூவுலகிற்கும் அரசனுன வரம் பெற்ற தசமுகனை வெறுக்கிருள்.)

இராவணன் சொல்வது பைரவி ராகம், சீதை—அசாவேரி ;
(தாளம் ஆதி)

இரா : மூவுலகின் ஒரு நாயகன்—தீரா
மோகங்கொண் டுன்னடி தாழ்ந்தனன்—நீ
ஏவும் பணிகளைச் செய்கின்றேன்—சற்றே
என்முகம் பார்த்தருள் சீதையே !

சீதை : சீதை யில்லை, உன் குலத்தினைச்—சுடும்
தீயென் றென்னை யறி தீயனே !—காமப்
போதைகொண்டாய் தலை பத்துமே—சிந்தப்
புத்திகெட் டிப்படிச் செய்தனை !

இரா : வெள்ளி மலையைப் பெயர்த்தனன்—திசை
வேழங்கள் எட்டையும் வென்றனன் ;
தெள்ளிய நான்மறை கற்றனன்—எல்லாத்
தேவரின் ஏவலுங் கொண்டனன் !

சீதை : பொய்மானைக் காட்டி மயக்கிறுய்—வெறும்
போலித் துறவால் ஏமாற்றிறுய்—என்
ஐயனை அப்புறஞ் செய்தபின்—என்னை
அள்ளிவந்தாய் வெட்க மின்றியே—வீரர்
எய்தும் புகழும் உனக்குண்டோ ?—நீ
ஏதுக்கு வேதம் படித்தனை ?—உன்
செய்கையைத் '' தூ '' வென்பர் நாலுபேர்—உன்
செருக்கை யுலகஞ் சிரிக்குமே !

இரா : நாட்கள் இறந்தன, மோகத்தால்—வெந்து
நானும் இறந்து முடிந்தபின்—உன்
வாட்கண் சிறிதென்னை நோக்குமோ ? —என்
வானை யுயர்த்துமுன் பாரம்மா !

சீதை : எண்ணுயி ரஞ்சொல்லிக் கெஞ்சினும்—துஷ்டர்
எச்சிலைத் தேவதை யுண்ணுமோ ?
விண்கதிர் கண்டலர் தாமரை—சிறு
மின்மினி கண்டு மலருமோ ? —பிறர்
பெண்ணைத் திருடிய பித்தனே—புகழ்
பேசவும் வாயுனக் கேதடா—என்
புண்ணியன் காலடித் தூசி நீ—ஒரு
புல்லினும் புல்லிதுன் வாள்வலி !

இரா : கள்ளுகுஞ் செம்மலர் வாயினல்—என்
காதலுக் கோர்மொழி சொல்லடீ !—உன்னை
அள்ளிவைத்தே பொன் னரியணை—என்னை
ஆளும் அரசியென் றேத்துவேன் !

சீதை : கார்முக ராமனைக் கண்ட கண்—கருங்
காமாதிப் பேயனைக் காணுமோ ?—அவன்
பேர் சொல்லி யின்புறும் வாக்கினல்—காமப்
பித்தர் பெயரினைச் சொல்லவோ ?

கற்புக் கனலொன்றே போதுமே—உடன்
கட்டோ டிலங்கையைச் சுட்டிட—ராமன்
விற்குச் சயந்தர வேண்டியே—வீர
விரதங்கொண் டிங்குயிர் தாங்கினேன்—உன்
சொற்குப் பயப்பட வில்லைநான்—என்
சோதி முதல்வன் கணைமுன்னே
நிற்கும் துணிவுனக் கேதடா—துஷ்ட
நிருதத் துரும்பேபின் செல்லடா !

இரா : தாபத்தை இன்னுமோர் மாதத்தில்—தீர்க்கத்
தாமதஞ் செய்யாதே பேதையே—என்
கோபக்கனலினை மூட்டினை—உன்னைக்
கொல்லுவேன் சந்திர ஹாசத்தால் !

70. கலை வடிவாக

(கம்ப ராமாயணக் காட்சிகள்)

(பூர்வீகல்யாணி) (திரிபுடை)

ப : கலைவடி வாக நின்ருனே—காகுத்த ராமன்
காதலை முற்றும் வென்ருனே—ஜயஜானகி (கலை)

அ : அலைமேலே மிதந்திடும் அமுத கலசம் போலே
அருளேதய சுந்தரி கருணுரஸம் பொழிந்தே (கலை)

ச : உமையாள் ஒக்கும் மங்கையர் உச்சிக் கரம் வைக்கும்
கமையாள் மேனி கண்டவர் காட்சிக் கரை காண...
இமையா நாட்டம் பெற்றிலம் என்ருர் இருகண்ணுல்
அமையா தென்ருர் அந்தர வானத் தவரெல்லாம்—
தெய்வக் (கலை)

கொல்லும் வேலும் கூற்றமும் என்னும் இவையெல்லாம்
வெல்லும் வெல்லும் என்ன அதற்கே விழிகொண்டாள்!
சொல்லும் தன்மைத் தன்றது குன்றும் சுவரும் திண்
கல்லும் புல்லும் கண்டுரு கப்பெண் கனியங்கே !... (கலை)

71. எனது காதல் ஜானகி

(காபி) (ரூபகம்)

ப : எனது காதல் ஜானகியை
எங்கே காண்பேன், இளங்குயிலே ? . . (எனது)

அ : கனலும் கற்பின் வடிவுடையாள்,
கணவன் மேலே உயிருடையாள் ! (எனது)

ச : ஓடா நின்ற கனி மயிலே,
சாயற் கொதுங்கி உள் அழிந்து
கூடா தாரில் திரிகின்ற
நீயும் ஆகம் குளிர்ந்தாயோ ?
தேடா நின்ற என் உயிரைத்
தெரியக்·கண்டாய் ; மனமுவந்தே
ஆடா நின்ருய் ஆயிரங்கண்
உடையாய்க் கொளிக்கு மாறுண்டோ ? (எனது)

பஞ்சு பூத்த விரல் ; பதுமம்
பவளம் பூத்த அடியாள் ; என்
நெஞ்சு பூத்த தாமரையின்
நிலயம் பூத்தாள் ; நிறம் பூத்தாள் ;
மஞ்சு பூத்த மலர் பூத்த
குழலாள் கண்போல் மணிக்குவளாய்
நஞ்சு பூத்த தால் என்ன
நகுவாய், என்னை நலிவாயோ ? (எனது)

72. வாழி ஐய வாழி!

(கணையாழி பெற்ற சீதையின் இன்பம்)

(நாதநாமக்கிரியை) (ஜம்பை)

ப : வாழி ஐய வாழி கணை யாழிதரு வீரன்
வாழி ஐய சீதை ஐயராமன்அருள் வாழி !. . (வாழி)

அ : ஆழி, புடை சூழ் உலகம் யாவும் நல மோங்க,
அறம் வளர்க, தீமைகள் அழிந்துநலம் ஓங்க ! (வாழி)

ச : இருந்துபசி யால் இடர் உழந்தவர்கள் எய்தும்
மருந்தும் என லாகிய தறந்தவரை அண்மும்
விருந்தும் என லாகியது வீயும் உயிர் மீளும்
மருந்தும் என லாகியது வாழிமணி வாழி. . (வாழி)

73. கூறுகின்றேன் சபதம்

(சகுனியைக் கொண்டு மாயச்சூதாடி, துரியோதனன் தரும புத்திரனின் அரசு, செல்வம், உரிமை எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு திரௌபதையையும் சபையில் துயிலுரியச் செய்தான். கண்ணன் கருணையால் பாஞ்சாலி மானம் தக்கியது. பாஞ்சாலி சபதம் செய்கிருள்.)

(சாவேரி) (ஆதி)

ப : கூறுகின்றேன் சபதம்—குலமகள்யான்,
கூறுகின்றேன் சபதம்—கண்ணன் அருளால் (கூறு)

அ : வீறுகொள் ஐயவரால் வெய்ய கௌரவர் குலம்
நீறுபடும் எனது நெஞ்சக் கொதிப்புந் தீரும் (கூறு)

ச : கண்ணிலா தவன் மகனுல் சகுனியுடன்—என்
கணவரும் சூதாடினுர்—மதிமயங்கி
மண்ணரசினை யிழந்தார்—செல்வமுடன்
மனிதவுரிமை யிழந்தார்—இழந்தபின்பு
பத்தினி, யெனக்குமோர் பகடையுருட்டிவிட்டார் ;.
பதறுதே நெஞ்சம் பதகர்கொடுமைதிரக் (கூறு)

வேந்தப்பதர்கள் மகிழ—என்கணவரின்
வில்லும் அவரை இகழ—துச்சாதனன் என்
கூந்தலை இழுத்துவந்தே—சபைநடுவே
கூசாது துயிலுரிந்தான்—என்
சாந்தக்கணவருமவே தாந்தவிசாரம் செய்தார்
ஏந்திழை மானங்காத்த இறைவன் முன் அறைகூவிக்
(கூறு)

உண்மையின் மேல் ஆணை—என்னை உய்வித்த
ஒருவன்மேல் ஆணைசெய்வேன்—உரிமைபெற்ற
பெண்மையின் பெருமையின்மேல்—ஆணை செய்தேன்
பெரியபோர் மூளும் இங்கே...பகைவர்குலம்
சோர்ந்து, சுயோதனனின் தொடையிரத்தம் பூசியே
கூந்தல் முடித்தெனது கொள்கைநிறைவேற்றுவேன்
(கூறு)

74. அபயமளித்தல்

(பஞ்ச பாண்டவர் திரௌபதையுடன் வனவாசஞ் செய்தல். துரியோதனன் அவர்களைக் கொல்ல எத்தனையோ சூழ்ச்சி செய்தும் பலிக்கவில்லை. கண்ணன் அவர்களைப் பாதுகாக்கிறான். ஒருநாள் கண்ணனை வழிபட்டு அவனிடம் அனைவரும் தமது சபதங்களைச் சொல்லுகின்றனர். கண்ணன், '' பாரதப்போர் மூளும் ; பாஞ்சாலி குழல் முடிவாள்'' என்று தைரியஞ் சொல்லிச் செல்கிறான்.)

(செஞ்சுருட்டி) (ஆதி)

பாண்டவர்: அன்பொடுன் அடி பணிந்தோம்—கண்ணா
அபயம், அபயம் எங்கள் ஆண்டவனே !
துன்பத்தைத் துடைத்தவனே—உண்மைத்
தொண்டரின் அண்டையில் இருப்பவனே !
இன்பத்தைக் கொடுப்பவனே—எங்கள்
இடர்களை வேறுடன் அறுப்பவனே !
வன்பகை அரக்கர் குலம்—வேக
வடவனல் போலுளங் கொதிப்பவனே (அன்)

(வேறு)

(பந்துவராளி) (ஆதி)

கண்ணன் : உண்மை யன்பு மணிகாள்—உங்கள்
உள்ளுடைந்து பொங்கும்
கண்ணருவி துடைக்க—நான்
கருணை கொண்டு வந்தேன் !

திரௌபதி : கண்ணருவி துடைக்க—என்
கார்குழலை முடிக்க,
பெண்பெருமை விளங்க—வேண்டும்
பெரிய பாரதப் போர் !

தருமர் : விதி வசத்தினுலே—இந்த
வினைவசத்த ராஞேம் !
மதியுடன் பொறுப்போம்—காலம்
மாறிப் போகு மம்மா !

பீமன் : உரிமை தன்னைத் தோற்ருேம்—அண்ணு
உரத்த கையி ருந்தும் ;
பொறுமை பேசுகின்ருய்—வேதாந்தம்
பொறுக்க மாட்டேன் இனிமேல் !

தருமர் : குற்றம் பார்த்தாற் சுற்றம்—இல்லை
கோவிக்காதே தம்பீ !
பற்றி நாக்கைக் கடித்த—பல்லைப்
பறித்தெறிவ துண்டோ ?

பீமன் : மானம் போகு தண்ணு—நம்
மனைவி கூந்தல் இழுத்தான்—அந்த
ஈனத்துச்சன் கையை—வெட்டி
இரத்தங் குடிப்ப தென்ருே ?

தருமர் : உறவினரைக் கொன்றே—நாம்
ஊரை யாள்வதினும்,
துறவினரைப் போலே—கனி
துய்த்துக் கானம் வாழ்வோம் !

பீமன் : கதையிருக்கு தண்ணு—அந்தக்
கயவன் மார்பிளக்க
உதைகொடுத்து நாட்டை—மீட்பேன்
உதடசைப்பாய் சற்றே !

தருமர் : காயவாழ்க்கை நிலையோ ?—தலையிற்
கட்டிச் செல்வதென்னே ?
தியரை அழிக்கும்—தெய்வம்
தீநினைவை மறப்போம் !

பீமன் : சகுனிமாமாக் கூட்டம்—நம்
சகத்தை யாள லாமோ ?
நகுதென் கோபத் திதான்—வில்லே
நாண்செய் வீர விஜயா !

விசயன் : வில்வளைத்து விட்டேன்—அம்பு
விரைந்து பாயும் பகைமேல்—அண்ணு
சொல்கொடுத்துவிட்டால்—இன்றே
துஷ்டக் கும்பல் சாம்பல் !

பத்தினியைத் துஷ்டர்—மான
பங்கஞ் செய்யக் கண்டும்,
செத்தவர்போல் இருந்தோம்—நம்
சென்ம மென்ன சென்மம் ?

தாரை தாரையாகக்—கண்ணீர்
தருமதேவி விட்டுப்
போரை நோக்கு கின்ருள்—இதோ
பூங்குழல் விரித்தே !

தருமர் : இருந்து பார்ப்போந் தம்பீ—அங்கும்
இருக்கின்ருர்கள் மேலோர் ;
திருந்துவார் பகைவர்—பிறகு
சேர்ந்து வாழுவோமே !

பீமன் : தேனில் ஊறிஞலும்—எட்டி
தித்திப் பாவ துண்டோ ?
பானகம் வருமோ—கடலில்
பதக்குவெல்லங் கலந்தால் ?

விசயன் : புல்லரக்கர் ஆள—வீரப்
புதல்வர் தூங்குவாரோ ?
நல்ல சாதிச் சிங்கம்—அண்ணு
நரிக்குப் பட்டந் தருமோ ?

திரவீர ருக்கே—அண்ணு
தெய்வங் கை கொடுக்கும்,
சாரமில்லா ஞானம்—பேடி
தாங்கும் வாளைப் போலாம் !

நகுலன் : சத்துருவின் குடைக்கிழ்—வாழும்
சாந்த வாழ்வு சாவாம் !
யுத்தம் செய்து செத்தால்—அதுவே
உயர்ந்த வீர வாழ்வாம் !

சகாதேவன்: பாரின் பாரந் தீர்க்கக்—கண்ணன்
பாரதப்போர் செய்வான் !
ஆரதைத் தடுப்பார் ?—அறிவேன்
அவ னுளத்தை நன்றே !

விசயன் : கண்ண னுள்ள பக்கம்—அவன்
கருணை வெள்ளத் தாலே,
திண்ண மாகும் வெற்றி—அவனே
செயல்களுக் கிறைவன் !

தருமர் : அறவி னைகள் யாவும்—என்றும்
அமைதி யாக வெல்லும் !
மறவினைக் கொடுமை—இறு
மாந்து மண்ணைக் கௌவும் !

பாஞ்சாலி : புன்னகைக்கும் கண்ணன்—எங்கள்
புண்க ளின்று தீர,
என்ன சொல்லு கின்றான்—அதுவே
இனிய தென்னக் கொள்வோம் !

கண்ணன் : பாரதப்போர் வேண்டும்—தருமம்
பாரையாள வேண்டும் !
தீரர் வாழவேண்டும்—கொடிய
தீயர் வீழ வேண்டும் !

விசயன், பீமன்: விண்ணு மண்ணும் வெல்ல—நல்ல
வில்லும் வீறுங் கொண்டோம் !
கண்ண னன்புங் கொண்டோம்—இனிக்
கவலை சற்று முண்டோ ?

கண்ணன் : தருமத்திற்கு வெற்றி—தெய்வ
சக்தி தன்னை நம்பும்
கருமவீர ருக்கே—வெற்றி
கைக் கனிபோல் வருமே !

எல்லாரும் : பொருளறிந்து கொண்டோம்—வரும்
போரறிந்து கொண்டோம்—உன்
அருளில் வாழுகின்றேம்—கண்ணு
அடைக்கலம் புகுந்தோம் !

(கண்ணன் ஆர்சிவதித்து மறைதல் !)

75. அம்மையே...அப்பா !

(அன்பன் முறையீடு, அருளின் உதயம் ஆகிய இரு கருத்துக் களைக் கொண்ட திருவாசகத்தைச் சரணமாக வைத்த பாடல்.)

(சாவேரி) (ஆதி)

ப : அம்மையே...அப்பா ஒப்பிலாக் கருணையே
அடியேனுன் அடைக்கலமே (அம்மை)

அ : செம்மையாய் உன்னையே சிக்கெனப் பிடித்தவர்
சிந்தையில் இனித்திடுஞ் சிற்சுகத் தேனே—என் (அம்மை)

ச : பாரொடு விண்ணுய்ப் பரந்தஎம் பரனே,
பற்றுநான் மற்றிலேன் கண்டாய் ;
சீரொடு பொலிவாய்ச் சிவபுரத் தரசே,
திருப்பெருந் துறையுறை சிவனே...
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யாகில்...
வார்கடல் உலகினில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே —என் (அம்மை)

இன்றெனக் கருளி, இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று,
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன் ;
நியலாற் பிறிதுமற் றின்மை...
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே ;
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே—என் (அம்மை)

76. விழித்தெழுந்தாய் மனமே

(புத்தர் துறவு)

(கானடா) (திரிபுடை)

ப : விழித்தெழுந்தாய் மனமே—உடனேநீ
விரைந்துசெல்—ஞானமா—மருந்தினைத் தேடவே ! (விழித்)

அ : செழித்த போகசுகங்கள் செய்தமனைவாழ்வும்
புளித்தது பளிச்செனப் புவியின் இயல்பறிந்தே (விழித்)

ச : உறவுகொண்டே முத்தி பெறமுடியாது செய்த
பிறவித் தளைகளை அறிவினுற் பிளந்தின்றே ! (விழித்)

பூவுயிர் நாடகம் பொய்யரங்கில் ஆடிச்
சாவுத் திரைக்குள்ளே போவதைக் கண்டுநீ (விழித்)

தங்க மாளிகை துன்பத் தணலென உணர்ந்தபின்
இங்கொரு கணமேனுந் தங்கி யிராமலே (விழித்)

உறங்கின உலகெல்லாம், உறங்கின சுற்றமும்,
உறங்கும் விழிகளிடம் உடனே விடைபெற்றுநீ (விழித்)

இனிய மனைவிமக்காள், எல்லாரும் இன்புறவே
தனிமையை நாடினேன் தருவீர் விடையென்றுடன்(விழித்)

இழிகுண மாயங்கள் இன்றுடன் விலகின ;
வழியுந் திறந்தது ; வருக வனத்திற்கென்றே ! (விழித்)

77. மாதா பொறுப்பேனே ?

(ஏசுநாதரைப் பகைவர் சிலுவையிட்டிருக்கின்றனர் ; தாய் மேரி, மகன் படும் துயரைக் கண்டு கண்ணீர் விடுகிருள்.)

(முகாரி) (ஆதி)

ப : மாதா. . . பொறுப்பேனே ?—இக் கொடுமையை
மகனே, மகனே, மகனே—அந்தோ ! (மாதா)

அ : தீதொன்று மில்லாத தெய்வ குமாரனே,
திருடர் நடுவிலுன்னை—சிலுவையிட்டதுயரை (மாதா)

ச : புலன்களை. . . வென்றவனே—பரமபிதா
புகல்வழி நின்றவனே—மலையின்மேலே,
நலன்களைப் புகன்றவனே—யோகசக்தியால்
நல்லன புரிந்தவனே . .
தந்திரச் சாத்தானைப் பிந்திநில் என்றவனே,
இந்தநிலை வந்ததேன் ? இதயம் வெடிக்குதம்மா ?
(மாதா)

வானர சாட்சியினை—உலகிலே
வளர்த்திட வந்தவனே !
ஞானமணிச் சுடரே—பரிபூரணம்
நல்கும் அருட் கனலே !
நெற்றி, கை, கால்களிலே—ஆணியடித்து
நெடுஞ் சிலுவையிட்டவர் . . . .
குற்றமென் றறியாதார்—இறைவனே
குளிர்ந்து மன்னிப்பாய் என்றனை !
பரிவுக்கே உடலினைப் பலியாக்கி உயிருடன்
பரம பிதாவிடம் பறந்தோடி மறைந்தனை ! (மாதா)

மரணத்தை வென்றவனே—அன்பு
மன்னவனே சரணம் !
தரணியின் ரக்ஷகனே—கிறிஸ்து நாதா,
தாவீதின் குலக்கொழுந்தே,
நற்றவச் சோதியே, நல்ல குணநிதியே,
பெற்ற மனம் கண்ணீர் பெருகித் தவிக்குதையோ !
(மாதா)

78. அல்லாவின் பெருமையை

(முஹம்மது நபிகள், ஆண்டவன் திருவடி சேரும்போது தமது ஆடையை சாது ஹஃபீசுக்குத் தரச்சொன்னுர். ஹஃபீஸ் பிறவித்துறவி, தெய்வப்பித்தர் ; முகம்மது நபிகளை உண்மையாக அறிந்த ஒருவர். அவர் நபிகளின் ஆடையை உமாரிடமிருந்து வாங்கிக்கொண்டு, இஸ்லாம் மார்க்கத்தை நபிகள் நாயகம் அனுட்டித்துப் பரப்பிய பெருமையைப் பாடுகிருர்.)

(பேஹாக்) (ஆதி)

ப : அல்லாவின் பெருமையை எல்லாரும் அறியவே
அன்பு செய்தார் அல்அமீன்—எல்லாம்வல்ல (அல்லா

அ : "அல்லாஹு-அக்பர் பிஸ் மில்லா இற்றஹ்மான்" என்னும்
அரிய மந்திரம் ஒதி ஐந்து நிமாசுஞ் செய்தே (அல்லா)

ச : ஹீராக் குகையினிலே பூரா தியானம் செய்தே,
இறைவன் அருளைப் பெற்றவர்
தாராள மாக ஏழை எளியவருக்கு நல்ல
தருமஞ் செய்த நற்றவர் ;
போர்முனையிலும் மனப் பொறுமையுடன் இறையைப்
போற்றிப் பணியக் கற்றவர் ;
திரம் மிகுந்த பரசூரர் பரமதியாக
வீரர் அரியதியாக சிலர்—முகமத் ரசூல் (அல்லா)

பொல்லாக் குரேஷியர்கள் கல்லா லடித்தபோதும்
பொறுத்துத் திருத்தி வென்றவர்
கொல்லக் குகையருகே புல்லர் புகுந்தபோதும்
அல்லா துணை யென்றவர்
பல்லாயிர மன்பர்க்குக் குர்பானி நல்கிய
பரமா சாரிய புருஷர்
மக்கத்தும் மதினத்தும் இஸ்லாம் குடியரசைப்
பக்குவ மாகநாட்டிப் பக்தர்க்கு வழிகாட்டி (அல்லா)

79. உலக மெல்லாம்

(எல்லா மதத்தினரும் வட்டமிட்டு ஆடல்)

(பிலகரி) (ரூபகம்)

உலக மெல்லாம் ஒருகுலமாய் வாழுவோம் !
உள்ளமொன்றி ஒற்றுமையை நாடுவோம் !..
கலகமில்லை, கட்சியில்லை யாவரும்,
கருமவீர ராகத் தொண்டு செய்குவோம் !.. (உலக)

எல்லையற்ற வான்குடையி னிழலிலே,
இருசுடருந் தரு மியற்கை ஒளியிலே,
பல்லுயிர்க்கும் பாய்ந்து நல்கும் காற்றிலே
பார்த்ததில்லை ஒரகத்தின் சாயலே (உலக)

அன்பருளை ஒதிடாத மதமுண்டோ ?
அறிவொளியைப் போற்றி டாத மதமுண்டோ ?
இன்பம்வேண்டி முயன்றிடாத மதமுண்டோ ?
எவ்வுயிர்க்கும் இன்னல் வேண்டு மதமுண்டோ ?
(உலக)

மனிதருள் மனிதனை யறிகுவோம்,
மனவிகாரத் தையெடுத் தெறிகுவோம் ;
அனைவருக்கும் பொது நலங்கள் ஆற்றுவோம் ;
அச்சமற்ற சுதந்தரத்தைப் போற்றுவோம் !
(உலக)

பெயர்வடிவ பேதமாயை நீத்தவர்,
பிரிவினையற் றுலகை ஒன்ருய்ப் பார்த்தவர்,
உயர்பொருளை உயிர்க்குயிராய்க் கண்டவர்,
உள்ளமன்பு வெள்ள மாகும் உணருவீர் !.. (உலக)

80. பொறுமைக்கும் எல்லை

(பிரதாபசிங்கன் அக்பர் சேனையுடன் பொருதிக் களைத்து அரவலி மலைக்கணவாயில் குடும்பத்துடன் வருந்துகிருர். வறுமை, வறுமை ! அப்போது தனது தலைமையை ஏற்ருல் அரசைத் தருவதாக அக்பர் செய்தி யனுப்புகிருன். குடும்பத் துயரைக் கருதி வீரன் அதை ஏற்க நினைக்கிருன். மகள் சம்பாவதி ''என்ன வந்தாலும் பணியக்கூடாது'' என்கிருள்.)

(*பிரதாபசிங்கன்*)

(காபி) (ஆதி)

பொறுமைக்கும் எல்லையுண்டு—என்
போருக்குச் சேனையில்லை
வறுமைக்கிங் கெல்லையில்லை—மனை
மக்கள் வருந்துகின்ருர்
இறைமையை ஏற்றுவிட்டால்—நான்
இன்றே வளம்பெறலாம்
சிறுமை நமக்கு முண்டோ ?—ஆனல்
தேசம் விடுபடுமோ ?

(*சம்பாவதி*)

மானம் பெரியதப்பா—இந்த
மண்ணுடலை வளர்க்க
ஏனிக் கவலை கொண்டாய்—பராசக்தி
என்றுந் துணை புரிவாள்
தீனர்க ளாயிடினும்—நாம்
தீரர்களா யிருப்போம்.
ஈன உடன்படிக்கை—அப்பா
ஏதுக்குச் சோதிப்பதோ ?

கோரப் படைக்குலத்தை—மலைக்
குறவரைக் கொண்டெதிர்த்தாய்—நின்
சூரத்தை ஹல்தி கட்டம்—என்றும்
சொல்லிச் சொல்லி வியக்கும்.
வீரத்தியாகமொன்றே—நம்
விரதமிதே சரதம்
தீரத் தணற் கொழுந்தே—தேசச்
சிங்கமே பங்கமுண்டோ ?

(பிரதாபன்)

(மோகனம்) (ஜம்பை)

போயின துன்பமெல்லாம்—கண்ணே
புத்துயிர் பெற்றெழுந்தேன்
தீயென வேவறுமை—நம்மைத்
தின்றிடினும் பொறுப்போம்.
தேயத் துரோகிகளின்—வலையிற்
சிக்கிப் பதமழியோம்
சேயிற் சிறந்தவளே—உனது
செம்மொழி வாழியவே......

பாட்டுப் பறவையைப்போல்—இங்கே
பாயும் அருவியைப்போல்,
காட்டுக் கணவாயில்—ஓம்
காளி துணை யெனவே
நாட்டின் விடுதலைக்கே—ஒரு
நம்பிக்கை கொண்டுயிர்ப்போம்
தீட்டிய வாளினிமேல்—சும்மா
தேம்பி யுறங்கிடுமோ ?

கீரை புசித்தாலும்—காட்டுக்
கிழங்கைப் புசித்தாலும்—வெறும்
நீரைக் குடித்தாலும்—எனது
நெஞ்சந் தளர்வதுண்டோ ?
போரை முழக்கிடுவேன்—பகைப்
பூண்டை யழித்திடுவேன்—
காரைப் பிளந்தொளிரும்—மின்னலென்
கத்தியில் வீசுதுபார்

81. வெற்றி வெற்றி மன்னு

(அசோகன் விரதம்)

(பேஹாக்) (திஸ்ரகதி ஆதி)

சேனதிபன் : வெற்றி வெற்றி மன்னு—மகத
வீரர் போரை வென்ருர் !
பற்றலர் மடிந்தார்; —ஐயப்
பவனி செல்லும் போதே,
சுற்றுங் கண்டும் மகிழ்வோம்—நம்
சூரர் வாள் விருந்தை !—கலிங்கம்
முற்றும் உன்னுடமை—இன்றே
முடி புனைய வாராய் !

அசோகன் : தலை சுழலுதையே—புத்த
தருமந் தன்னை மீறிக்—கொடுங்
கொலைஞனே னந்தோ !—என்னல்
கோடி மாந்தர் மாண்டார்—பிண
மலை குவியு தையே—என்
மகுடம் பெற்ற புகழ்மேல்—பாப
வலையி லென்னை யிட்ட—வடி
வாளை வீசி யெறிவேன் !

தன்னலங்கள் போற்றிப்—பெருந்
தானை சேர்த் தரக்கர்,
மன்ன ரென்ற பேரால்—உலகை
மயான மாக்குகின்ருர்—இனி
இன்னல் செய்து வாழேன்—யார்க்கும்
இனிதொன்றே நினைப்பேன்—என்
கண்ணுக்கு நீரால்—இரத்தக்
கறையை நீக்கு கின்றேன் !

உயிரி ரக்கங் கொண்டே—அரசை
உதறிக் கானஞ் சென்ருன்—ஆசை
துயரின் மூல மென்ருன்—ஞானச்
சோதியான புத்தன்—அவன்
பெய ரிருக்கு மட்டும்—போர்ப்
பேய்க் கிடங்கொடேன் யான்—அறப்
பயிர் செழித்து வாழ—வுலகில்
அன்பையே வளர்ப்பேன் !

82. கோளிச் சொல்லி

(கி. மு. 327-ல் இந்தியாவில் நுழைந்த அலெக்சாந்தரை எதிர்த்து வெல்ல முன்னின்ற வீரமன்னன் புருஷோத்தமனு வான். அவன் பலமான படைகொண்டு அன்னியரைக் கொன்று குவித்தான் ; ஜீலம் நதியைத் தாண்டி அவர்கள் வரமுடியாமல் நாட்டைப் பாதுகாத்து நின்றுன். ஆனுல், ஒரு துரோகி அலெக் சாந்தருக்குப் பாதை காட்டினுன். அதனுல் அவன் புருஷோத்த மனை வென்று சிறைப்பிடித்தான். எனினும், புருஷோத்தமன் வீரத்தை மெச்சி, அரசைத் திருப்பித் தருகிறுன். வீர புருஷன் தனது நாடு அன்னியர் வசம் ஆன காரணத்தைச் சொல்லு கிறுன்.)

(மாஞ்சி) (திஸ்ர ஏகம்)

புருஷோத்தமன்: கோளிச்சொல்லிக் குடியைக் கெடுக்கும்
குண்டுணிகளால்—ஐயோ
குண்டுணிகளால்—நான்
வாழுந் தேசம் நாசமாகி
வருந்துகின்றதே !

மோசமாகக் காட்டிக் கொடுக்கும்
மூட வஞ்சரால்—என்
தேசம் அடிமைப் பட்டுப் பட்டுத்
திரு விழந்ததே—ஐயோ
பொலி விழந்ததே.

வீர மாகப் போர் புரிந்து
வெல்லும் வேளையில்—ஒரு
ஈர மற்ற வஞ்சப் பாவி
எனைக் கெடுத்தானே.

அலெக்சாந்தர் : அறிவுங் கலையும் திருவும் பெருகும்
அழகிய நாடே,
அறமும் துறவும் பரமும் துலங்கும்
அமுத நாடிதே.

அன்பும் அருளும் அரிய தவமும்
ஆத்ம சக்தியும்
இன்பப் பாட்டும் எழுந்து பொங்கும்
இந்திய நாடு—வாழ்க—இந்திய நாடு !

என்கை வாளால் உன்னை வென்றேன்
  என்னை நீ வென்ருய்
உன்னைப் போன்ற வீரனில்லை
  உண்மை உண்மையே !

கோடிச் சிங்கம் போலப் போர்
  கொடுத்த சூரனே,
நாடிதோ ; தந்தேன் உனக்கே ;
  நலமுற் ரேங்குவாய்...........

புருஷோத்தமன் : வெற்றி யோங்க வீர மோங்க
  விடுதலை யோங்க—என்னைப்
பெற்ற நாட்டை ஆவிபோலப்
  பேண லென் கடன்.

வஞ்ச ரின்றிப் பதக ரின்றி,
  வாய்மை வீரத்தால்,—நாளும்
அஞ்சப் பகைவர், ஆளு கின்றேன்
  ஆண்மை யோங்கவே—நல்ல
  கேண்மை யோங்கவே—நாட்டின்
  மேன்மை யோங்கவே !

11. குரவை நடனம்

83. ஆலோலம் ஆலோலம்

(முதற் காட்சி)

(மலைக் காட்சி. நீர்வீழ்ச்சி. 'ஜோ'வென்று முழங்குதல். அருகே தினைப்புனத்தில் இரண்டு இளம் பெண்கள் பாடிக்கொண்டே பறவைகளை ஓட்டுகின்றனர்.)

(புன்னாகவராளி) (மிஸ்ர ஏகம்)

ஆலோலம் ஆலோலம்—ஜோ
ஆலோலம் ஆலோலம் !

தலைவி : மலையோரக் காட்டினிலே—நல்ல
வனப்பான மேட்டினிலே
கலைகொஞ்சும் பாட்டினிலே—நாங்கள்
காலங் கழித்திருப்போம் ! (ஆலோ)

தோழி : இழுமென வீழுகின்ற—அந்த
இயற்கை அருவியிலே
அழகெல்லாம் நீந்துதம்மா—மனம்
ஆனந்தம் கொள்ளுதம்மா ! (ஆலோ)

84. சலசலத்து மலையருவி

(இரண்டாங் காட்சி)

இருவரும் அருவியாடுதல்

(பிலகரி) (திஸ்ர ஏகம்)

தலைவி : சலசலத்து மலையருவி
தாவி வருகுதே—அதில்
கலகலக்கக் குளிக்க வுள்ளம்
கவலை மாறுதே !

தோழி : கோடி மின்னல் கூட்டம் போலக்
கொட்டும் வெள்ளமே !—அதில்
பாடியாடிப் படிந்து படிந்து
பரவசமாவோம்—தோழி
பரவசமாவோம் !

தலைவி : முத்திரைக்கும் அருவி நல்ல
மூலிகை களால்
அத்தர்போல மணக்குதம்மா
அலைகள் வீசியே !

தோழி : வெள்ள நீரை அள்ளி யள்ளி
வீசி யாடுவோம்—நெஞ்சைக்
கொள்ளை கொள்ளும் அருவிப் பாட்டிற்
குளிர மூழ்குவோம் !

85. அருவி யருகினிலே

(மூன்றாங் காட்சி)

(அருவிக்கருகே ஓர் அழகன் வருதல். தலைவி குறிப்புணர்தல்)

(இந்தோளம்) (திஸ்ர ஏகம்)

தலைவி : அருவி யருகினிலே—தோழி
அந்திப் பொழுதினிலே—ஒரு
குருவி ஆசையெல்லாம்—நெஞ்சங்
குளிர இசைத்ததம்மா !

தோழி : இங்கே வருங்குருவி—உன்மேல்
இச்சைகொண்ட குருவி—உன்
பங்கையக்கண் அழகைச்—சும்மா
பார்த்துப் பருகுது பார் !

86. வீரத் திருவழகன்

(அழகன்மேல் காதல் கொள்ளல்)

நொண்டிச் சிந்து

தலைவி : வீரத் திருவழகன்—வடி
வேல்முருகன் என விளம்பிடவோ ?
ஆரத் திருமார்பன்—ஆண்
அரியென அகன்றநன் மார்புடையான்—அவன்
சூரத் தனங்களெல்லாம்—அந்தச்
சுடர்விடுஞ் சூலத்திற் சொக்குதம்மா !
மாரனைப்போல் அழகன்—மாதர்
மனத்தினை அள்ளிடுங் கள்ளனிவன் !

87. யானை வருதம்மா

ஐந்தாங்காட்சி

(இச் சமயம் ஒரு பெரிய மதயானை அங்கே வருகிறது ; அதைக் கண்டு தலைவி பயப்படுகிருள்.)

(கானடா) (ஆதி)

தலைவி (அச்சத்துடன்):

யானை வருகுதம்மா—மத
யானை வருகுதம்மா !
தேனருவி முழங்கும்—இந்தத்
தினைப்புனக் காவலிலே—ஐயோ ! (யானை)

(திடீரென்று வீரன் பாய்கிருன். அந்த யானையைச் சூலத்தால் குத்தி விழ்த்தித் தலைவியை "அஞ்சாதே" என்கிருன்.)

தலைவி (தோழியை நோக்கி) ;

அச்சமினி யில்லை—மதக்கரி
ஆட்ட மொழிந்த தம்மா !
இச்சைப்படி யிருப்போம்—இவர்
எந்த வூர் கேளடியோ ?

88. மலையருவி

(ஆருங் காட்சி)

(தலைவி குறிப்பைத் தலைவன் அறிகிருன். தன் ஊரை வருணிக்கிருன் .)

(குறவஞ்சி மெட்டு)

மலையருவி வளங்குலுங்கும் எங்கள் திருவூரே
மடிமடியாய்ப் பால்சொரியும் எங்கள் திருவூரே
குலைகுலையாய்க் கனிகுலுங்கும் எங்கள் திருவூரே
கொழுமலர்த்தேன் பொழிந்தோடும் எங்கள் திருவூரே
(மலை)

சுனைகளெல்லாம் கனிரசமாம் எங்கள் திருவூரே
தோகைமயில் விளையாடும் எங்கள் திருவூரே
மலைகளெல்லாம் மழைவளர் எங்கள் திருவூரே
மரநிழலில் மானமரும் எங்கள் திருவூரே !

குரவையுடன் பறவையிசை யெங்கள் திருவூரே
குழலிசையும் யாழிசையும் கொட்டுமெங்கள் ஊரே
வரையில்லா ஈகைவளர் எங்கள் திருவூரே
வருவிருந்தைப் பார்த்திருக்கும் எங்கள் திருவூரே !

வீடெல்லாந் தமிழ்மணக்கும் எங்கள் திருவூரே
வீதியெல்லாங் கவியிசைக்கும் எங்கள் திருவூரே
நாடெல்லாம் புகழ்சுமந்த தெங்கள் திருவூரே
நாட்டுப் பெண்கள் ஆனவர்க்கு நல்லநல்ல ஊரே !

என்னூரின் பெருமையிதே
பொன்னமர்பூ முகத்தாய்—இனி
உன்னூருங் குலமதிப்பும்
உள்ளபடி சொல்லாய் !

89. வனக் குறவர்

(*ஏழாங் காட்சி*)

(தலைவி தனது குறிஞ்சி நில வாழ்வைச் சொல்லுதல்)

(அசாவேரி) (ஆதி)

வனக்குறவர் வாழ்வுக்கிணை
வையகத்தில் உண்டோ ?
மனக்குறையொன் றில்லையெங்கள்
மலைக்குறவர் வாழ்வில்... (வன)

ஜோவென்றே பாடிவரும்
சொகுசான அருவி—அதில்
தாவித்தாவிச் சுதந்தரமாய்த்
தாண்டவங்கள் புரிவோம்—உடல்
தங்கமுறக் குளிப்போம் ! (வன)

தேனுடனே தினைமாவுந்
தீங்கனியும் உண்போம் ;
மானுடனும் மயிலுடனும்
மகிழ்ந்தாடிக் களிப்போம் !—நாங்கள்
வனப்பறவை பிடிப்போம் !., (வன)

பச்சைமலைக் குடிசையிலே
பஞ்சமில்லை ஐயா—நாங்கள்
இச்சைகொண்ட பொருள்களெல்லாம்
இயற்கைதரும் ஐயா—எங்கள்
இன்பத்திற்குக் குறையா ? (வன)

வேங்கைகளும் அஞ்சுகின்ற
வீறுமிக வுடையோம் ;
தூங்காத துணிவுடையோம் ;
சோம்பலொன்றும் அறியோம் !.. (வன)

கைபார்த்து மெய்க்குறிகள்
கச்சிதமாய்ச் சொல்வோம் ;
பொய்யாது பலிக்கு மெங்கள்
பொருத்தமான குறிகள் ! (வன)

90. டியோ, டியோ, டியோ

(*எட்டாங் காட்சி*)

(ஒரு முதிய குறத்தி வந்து தன் அனுபவங்களுடன் காதலருக்குக் குறி சொல்லல்)

டியோ டியோ டியோ டியோ டியோ டியோ ஆயாலோ

நாடு நகரும் சுற்றி வந்த நல்ல குறத்தி ஆயாலோ
நல்ல நல்ல குறிகள்கொண்டு சொல்லவந்தேன் ஆயாலோ

காடுமலையும் சுற்றி ஞானம் கண்ட குறத்தி ஆயாலோ
கண்ணிற் கண்ட உண்மை சொல்வேன்-காதுகொடுங்கள் ஆயாலோ
கொடிய வஞ்ச நரியின் கொம்பு கொண்டுவந்தேன் ஆயாலோ
கோபப்புலியின் பல்லைத்தாலி யாகக்கொண்டேன் ஆயாலோ
இடியும் புயலும் வெயிலு மழையும் ஏற்றுவந்தேன் ஆயாலோ
இரத்த உலகின் கூத்தைப் பார்த்துச் சிரித்துவந்தேன் ஆயாலோ
முகத்தில் நகையும் அகத்திற்பகையும் முடிவைப்பார் ஆயாலோ
முத்து முத்தாய்ப் பேசிச் சிண்டு முடித்திடுவார் ஆயாலோ
பகலோர் வேடம் இரவோர் வேடம் பார்த்து வந்தேன் ஆயாலோ
பசந்தபோலி நாகரிகம் கசந்துவந்தேன் ஆயாலோ.

உண்மையான காதலாளர் உருவைக் கண்டேன் ஆயாலோ
உள்ளமொன்றி மகிழ்ச்சி கொண்டால் உலகமொன்றும் ஆயாலோ
கண்ணும் கண்ணும் கண்ணிவைத்த கருத்தைக் கண்டேன் ஆயாலோ
கந்தன் வள்ளி போலவாழ்வு காத்திருக்கு தாயாலோ...
கையைப் பார்த்து முகத்தைப் பார்த்துக் காதலறிந்தேன் ஆயாலோ
காதலுக்குக் கட்டழகன் கிட்டவந்தான் ஆயாலோ
தைபிறந்து வழிபிறந்து தங்கம்போலே ஆயாலோ
தாளமேளங் கொட்டித் தாலி கட்டிவாழ்வீர் ஆயாலோ

91. தன்னனே

(பொங்கல் புதுநாளில் திருமணம் நடத்திக் குறவர் தைக் குரவை யாடி வேலனை வணங்குதல்.)

(மாஞ்சி) (ரூபகம்)

தன்னனே தன்னனே—தங்கம்
தன்னனே தன்னனே

தையும் பிறந்ததம்மா—எங்கும்
தங்கம் பொலிந்த தம்மா
செய்யும் விளைந்த தம்மா—நல்ல
செங்கரும்பும் வந்த தம்மா (தன்)

மாம்பூ மணந்த தம்மா—தலை
வாழைத் தார் போட்டதம்மா
தேம்பால் சொரிந்ததம்மா—இந்தத்
தேசம் மகிழ்ந்த தம்மா (தன்)

குயிலோசை கெஞ்சுதம்மா—ஆயர்
குழலோசை கொஞ்சுதம்மா
மயில்போல் நடம்புரிவோம்—சுப
மங்களப் பொங்கலுண்போம் (தன்)

மண்ணுயிர் வாழ்க்கையெல்லாம்—இன்று
வசந்த நகை குலுங்க
கண்ணலக் கோலமுடன்—இன்பக்
காதல் கொளிக்குதம்மா... (தன்)

உள்ளத் துடிப்பினிலே—புது
உலகம் துடிக்குதம்மா !
துள்ளிக் கலையருவி—ஆத்ம
சுதந்தரம் பாடுதம்மா. (தன்)

92. பொங்குக பொங்குகவே

(மாண்டு) (திஸ்ர ஏகம்)

பொங்குக பொங்குகவே—வளம்
பொங்குக மங்களமே
எங்குமே பூவுங் கனியும் பசுமையும்
இன்புறப் பொங்குகவே (பொ)

மங்குக மங்குகவே—நம்மை
வாட்டும் வறுமையிருள்
செங்கதிர்ப் புன்னகை தங்க வுலகெங்கும்
சேமம் பரப்புகவே (பொ)

கரும்பைச் சுவைத்திடுவோம்—ஞானக்
கற்கண்டுப் பொங்கலுடன்.
விரும்பி யனைவரும் வேற்றுமையில்லாது
விண்விளக்கைத் தொழுவோம் (பொ)

பெண்ணை வணங்கிடுவோம்—பராசக்தி
பேரை முழங்கிடுவோம்
கண்மணிச் செல்வர் கனியிளங் கன்னத்தில்
கண்ணனைக் கொஞ்சிடுவோம் (பொ

ஆண்மையைப் போற்றிடுவோம்—நல்
லறிவை வளர்த்திடுவோம்
கேண்மைகொள் ஒர்குலத் தோழர்களாகக்
கிழக்கொளியைப் பணிவோம். (பொ)

(வேறு)

(நொண்டிச்சிந்து)

மங்கலப்பண் முழங்கிடுவோம்—புது
  வசந்தம் பிறந்த தென்று மகிழ்ந்திடுவோம்
சங்கமுறக் கூடிடுவோம்—பல
  சாதி வேற்றுமையெல்லாம் ஓடிடவே
தங்கநிறக் கனிபிழிந்தே—பரா
  சக்திசிவன் ஐயமெனப் பருகிடுவோம்
செங்கரும்பின் முத்தெடுத்தே—நாடு
  சேமமுற வேலனுக்கு மாலையிடுவோம் (மங்க)

கூட்டுறவு கொண்டு செழிப்போம்—நிதம்
  கொண்டுகொடுத் தின்பநலம் கண்டுகளிப்போம்
வீட்டரசி மகிழ்ந்திடவே—புது
  விருந்துடன் மனையறம் சிறந்திடவே,
நாட்டரசி மகிழ்ந்திடவே—விஞ்
  ஞானவொளி ஏற்றிடுவோம் கானமுடனே
போட்டியின்றி ஈட்டியதை—உண்டு
  பூரித்துப் பூரணராய் வாழ்ந்திடுவோம் (மங்க)

93. உள்ளுருகும் அன்பர்

(சிவ-பார்வதி—வேடர் நடனம்)

(செஞ்சுருட்டி) (ஜம்பை)

உள்ளுருகும் அன்பர் தொழும் வெள்ளிமலைக் குறவர்
  உமையென்பார், சம்புவென்பார், ஒருபெயரும் இல்லோம்!
உள்ளத்தில் உள்ளபடி உலகமெல்லாம் இருப்போம்;
  ஒருதொழிலும் இல்லாமல் உலகையளித் தழிப்போம்!
விள்ளரிய பெரியகந்த விளம்பரிதெம் ஆடல்,
  மெய்த்தொண்டர்க் கேயெடுத்தோம் விதவிதமாய் வேடம்!
தெள்ளுதமிழ் நாட்டினிலே திருநடனம் புரிந்தோம்!
  தேவாரம் பூண்டுதிரு வாசகத்தே னுண்போம்!

புல்லரக்கர் ஆணவத்தைக் கல்லியெறிந் திடுவோம் !
புலியுரித்தோம், கரியுரித்தோம், புரமெரியச் சிரித்தோம் !
கல்லினையும் வில்வளைத்தோம், கங்கைமதி தரித்தோம் !
கண்கொடுத்தோம், பண்கொடுத்தார், காதல்வினை
முடித்தோம்.
வல்லதிருத் தொண்டர்குலம் வழிதவறிச் சென்ருல்,
வழிமறித்தே தடுத்தன்பு வலைவீசிப் பிடிப்போம் !
எல்லாரும் எமையறிவார், எவரும் அறியார்கள் ;
இதயத்தைத் தொட்டறிவார் இல்லையென மாட்டார் !

94. ஏலேலோ

(புன்னுகவராளி) (ரூபகம்)

ஏலேலோ—ஏலஏலோ—முருகா (ஏலே)

காலமெனும் வெள்ளத்திலே—வெற்றிக்
கப்பல் விட்டுச் செழித்திடுவோம்
ஞாலமெல்லாம் சரக்கு விற்போம்—தினம்
நவநிதிகள் மிகக் குவிப்போம் (ஏலே)

(புன்னுகவராளி) (ஜம்பை)

செந்தமிழ்க் கப்பலடா ஏலேலோ—
செகம்புகழும் கப்பலடா லேலேலோ.
துந்துமென முரசுகொட்டி ஏலேலோ
சுதந்தரமாய்ச் செல்லுதடா—முருகையா...

ஏலேலோ ஏலேலோ பரமசிவம்...முருகையா
ஏலேலோ வாழியஎந் தமிழமுதம்.

தொண்டியிலே முத்தெடுத்து ஏலேலோ
துறையெல்லாம் விற்றுவந்தோம்—முருகையா
கண்டியிலே பாக்கெடுத்து—முருகையா
காந்த நகர் விற்றுவந்தோம்—முருகையா...

தென்னுட்டுத் தேக்குமரக் கப்பலிலே
தேசமெல்லாம் சுற்றிவந்தோம் முருகையா.
பொன்னுறு கொண்டுவந்தோம்—பரமசிவம்
புலிமீன்விற் கொடி பறக்க—முருகையா.

முத்துமணி தந்தவகை சந்தனமும்
  முறுக்கான மதுரைச்சல்லா பட்டுவகை,
கத்தூரி களிப்பாக்கு தக்கோலம்,
  காட்டான மிளகேலம் கொண்டு சென்றோம்.

சிங்களமும் ரங்கபுரம் சிங்கபுரம்
  சீனகமும் சாவகமும் மணிலாவும்,
வங்கமுடன் யவனகமும் சோனகமும்
  வான்வளைக்கும் பூமியெல்லாம் கொண்டு விற்றோம்...

95. வீசுவோமே

(செஞ்சுருட்டி) (ஆதி)

ப : வீசுவோமே வலை வீசுவோமே—
  விண்ணுயர அன்பு வலை வீசுவோமே. (வீசு)

அ : நேசம் பதிந்த நல்ல நெஞ்ச மலரில்
  ஈசனைப் பிடித்திட வீசுவோமே... (வீசு)

ச : கொம்புடன் பறைகொட்டிக் கூடிக் குதித்தே
  கும்பிட்டுச் சங்கொலித்துக் கொண்டு துதித்தே
விண்புவியில் விளையாடிக் கண்களுக் கெட்டா—அந்த
  விந்தையனைப் பிடித்திடச் சிந்தனைக் கடல் (வீசு)

கிழக்கரை முத்துடனே ரத்தினமென
  கெண்டை கெளுத்தியென கிளர் மனதாம்
ஆழத்தில் மூழ்கியறி வானந்தத் திரள்
  அள்ளிக் குவித்திடவே துள்ளல் அடங்கி—வலை (வீசு)

கண்டவரை மயக்கிடும் காதல் விழிபோல்,
  காரிற் கரந்தொளிருங் கம்பிமின்னல்போல்
தொண்டருக்குத் தொண்டனெனத் தூதுநடக்கும்
  தோன்றுத துணைவனைத் தொட்டுப்பிடிக்க (வீசு)

96. வானத்தை

(சிந்துபைரவி) (ஆதி)

வானத்தைக் கூடாரங் கட்டி—நல்ல
வைர மலர்களை வாகுடன் சூட்டி
ஞானக் கதிர்விளக் கேற்றி—இள
நங்கை இயற்கை விருந்தளித் தாளே.

பண்ணுதிர் புன்னகைப் பூந்தேன்—ஏலப்
பானகம் போன்ற பசுமலை வெள்ளம்,
கண்குளிர் கானக் கனிகள்—அருட்
காவிய மென்னக் களிப்புடன் ஈந்தாள்.

விண்ணமு தச்சுவை யெல்லாம்—என்
வீறுகொள் நெஞ்சினில் ஊறிடச் செய்தாள் ;
உண்ண உணத்தெவிட் டாதே—என்
உள்ளப்பசியும் புலனுக்கெட் டாதே.

ஆளும் இயற்கை யழகி—என்
ஆனந்தத் தோழி அளித்த விருந்தால்,
நாளு மனப்பசி யாறி—ஜீவ
நாடக மேடையில் ஆடி மகிழ்ந்தேன்.

97. கலையெனும் போதே

(பேஹாக்) (ஆதி)

கலையெனும் போதே
கருத்தினில் அமுத
அலையெழுந் தோங்கும்
ஆனந்தத் தோழி... (கலை)

நல்லிசை பருகிட
நாடி துடிக்கும்
புல்லரிக்கும் உடல்
புதுக்கவி கேட்டால்... (கலை)

பேச்சுக்குப் பேச்சு
பிழையறு செயலாய்
மூச்சுக்கு மூச்சு
மோகனக் கனவாய்க் (கலை)

சிற்பத்தைக் கண்டால்
சித்திரங் கண்டால்,
அற்புத ரசங்கள்
அகத்தினில் ஊறும் (கலை)

தட்டற நெஞ்சத்
தந்திகள் விம்மிக்
கட்டறு பாட்டைக்
கனலெனப் பாடும். (கலை)

98. தேசம் தேசம்

(செஞ்சுருட்டி) (ரூபகம்)

தேசம் தேசம் என்று தெய்வவெறிகொண்டு
தீயெழப் பாடுகிறேன்—அது
வாச வசந்த மலர்கனிச் சோலையாய்
வாழ வரந்தருவாய்

சாதிமதவெறிச் சண்டைக ளின்றிச்
சமரஸ நல்லமைதி—அதன்
வீதிதொறும் அழகாக விளையாடி
விண்ணரசைக் கொணர (தே)

பீடைசெய் அச்சம் பிணிதுயர் அஞ்ஞானம்,
பிச்சைக் குரல்களின்றி
ஆடையுணவினுக் காயிரம் ஆயிரம்
அன்புத் தொழில் வளர (தே)

கோரப்பகாசுரக் குண்டரின் ராக்ஷஸக்
கொட்ட மொழிந்திடவே
வீரப்படையுடன் ஒவ்வொரு பேரும்
விஜயனைப் போல் விளங்க (தே)

99. திசை யதிர

(மாண்டு) (திஸ்ர ஏகம்)

திசையதிர முரசு கொட்டுவோம்—எங்கும்
 தீந்தமிழ் இசை முழங்கவே
வசையி லாதவெற்றி காணுவோம்—வீர
 வாகை மீது வாகை பூணுவோம். (தி)

உலகமெங்குங் கலகமின்றியே—வாழும்
 உண்மைகண்ட நாடு நம்மதே
கொலையிலாத சைவ நீதியைக்—கொண்ட
 கோயி லெங்கள் தாயி தாகுமே. (தி)

திரிகி விட்ட மீசை துள்ளவே—மிகத்
 திண்மையான சிங்க நெஞ்சுடன்
பரிதி போன்ற பார்வை கூடியே—நாம்
 பகைவர் வீழப் போர்புரிகுவோம். (தி)

வன்கொலை புரிந்து மாண்டிடும்—சாதி
 மதமயக்கங் கொண்ட மண்ணிலே
அன்பிறைவன் என்று போற்றிடும்—நம்
 அமுத மான தமிழைப் போற்றுவோம். (தி)

குமரி தொட்டு வேங்கடம் வரை—நம்
 கொடியை நாட்டி யாட்சி செய்குவோம்.
நமதுரிமை காக்குந் தொண்டிலே—பொல்லா
 நமனையும் எதிர்த்து வெல்லுவோம். (தி)

ஒற்றுமைகொண் டுள்ளம் ஓங்கியே—நாம்
 உலகில் வல் லரசை நாட்டுவோம்...
வெற்றியுண்டு சக்திவீறுண்டு—பொது
 வேதமுண்டு வீர தீரர்காள்! (தி)

100. புதிய வாழ்வின்

(நடபைரவி) (ரூபகம்)

ப : புதிய வாழ்வின் சிகரம் ஏறினேன்—பரி
பூரணன் கருணை சேரவே (பு)

அ : மதிமயக்கும் மதத்தைத் தாண்டி
மாறிப்பிறக்கு மருந்தை அருந்தி. (பு)

ச : காமமென்னும் புயலைத் தாண்டிக்
கலக்கு மாயக் கவலை நீங்கி,
நாமெனும் அகந்தை யற்று
ஞானமென்னும் தோணி பற்றிப் (பு)

சண்டைபோடும் கலைகடந்து
சங்கடஞ்செய் வலையறுந்து,
எண்டிசையும் இறைவனுடல்
கண்டு கண்டு களிமிகுந்து (பு)

101. மங்கள வளம்

(சுரடி) (ஆதி)

ப : மங்கள வளம் பெருகி—இந்த
மாநிலம் வாழிய வாழியவே (மங்)

அ : திங்களும் இரவியும் திரைகடலும்போலே
தெய்வத் திருவருளால் செய்வன செய்தென்றும் (மங்)

ச : மேகமும் பயிரும்போல் தேகியும் உடலும்போல்
விண்ணுடன் காற்றும்போல் மண்ணுடன் பயிரும்போல்
யோகமும் உயர்சிவ போகமும் கலையுடன்
ஏக நவரஸ நடனாஞ் ஜலி யாகி (மங்)

ஓம் சுத்த சக்தி

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின்

புதிய நூல்கள்

1.	கீர்த்தனாஞ்ஜலி இந்நூல் சிதம்பர கீதம், தேவகானம், முருகோபாஸனை, சக்தி பரவசம், ஹரி பஜனை, சாதன கீதம், சுத்த சன்மார்க்க கீர்த்தனங்கள், ஐக்கிய கீதம், அன்பு மாலை ஆகிய ஒன்பது நூல்களின் தொகுப்பு. 556. இன்னிசைப் பாடல்கள் கொண்ட அரிய சங்கீத நிதி.	... 3	8
2.	நவரஸ நடனாஞ்ஜலி (நாட்டியக் கலை விளக்கத்துடன்)	2	0
3.	கவிக் கனவுகள்	... 1	8
4.	புதுயுகப் பாட்டு	... 1	8
5.	ஏழை படும்பாடு (லே மிஸரபிள்ஸ்)	... 5	0
6.	இதுதான் உலகம் (அற்புதமான நாவல்)	... 8	0
7.	பகவத் கீதை	... 1	4
8.	ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம்	... 2	8
9.	ஸ்ரீ அன்னை	... 0	8
10.	நாகரிகப் பண்ணை முதலிய கதைகள்	... 2	0
11.	பாப்பா பாட்டு	... 0	8
12.	வானரசு (ஓரங்க நாடகம்)	... 0	9
14.	The Gospel of Perfect Life	... 3	8
15.	Yogi Shuddhanand (Life and Works)	... 4	0
16.	திருமந்திர விளக்கம் மூன்று பாகங்கள், (அச்சில்)		

புதுயுக நிலையம்

புதுச்சேரி

ஸ்ரீ அரவிந்த ஆசிரம அச்சகம்,
புதுவை

உலகிற்கு நல்லசெய்தி ! தமிழுலகின் அற்புதம் !

பாரத சக்தி மகா காவியம்

(ஐந்து காண்டங்கள்)

கவியோகி சுத்தானந்த பாரதியார் நீண்டகாலம் மௌன விரதம் பூண்டு இயற்றிய பாரத சக்தி ஐந்து காண்டங்களும் வெளி வந்துவிட்டன. இது கவிக்குக் கவி ; கலைக்குக் கலை ; தமிழுக்கு வெற்றி மகுடம்; உலக மகான்களின் உள்ளத் துடிப்பு. எல்லாரும் படிக்கும்படியான தெளிந்த ஆவேச அருவி நடை ; வரிக்கு வரி புதுப்புது விஷயங்கள் ; உலகப் பெரியார் வரலாறுகள், எல்லாச் சமய சன்மார்க்க யோக மார்க்கங்களின் சாதனை முறைகள் ; சுத்த யோக சித்தி ரகசியங்கள்; கலை, பொருளாதாரம், சமயம், அரசியல், தொழில் எல்லாத் துறைகளிலும் மனிதன் பூரணம் பெற்று அதிமனிதனாக வாழும் வழிகள்—அடங்கிய புதியகாவியச் சோலை. 1000. பக்கங்கள், அழகான அமைப்பு. விலை ரூபா. 15.

"தமிழில் பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு எழுந்த முத னூல் பாரதசக்தி மஹா காவியம் ; இதில் எல்லா மதத்தினருக்கும், நாட்டினருக்கும், எல்லா ரசிகர் களுக்கும் ஒரு ஸ்வாரஸ்யம் ஏற்படும்படி அவ்வளவு பொருள் அடங்கியிருக்கிறது."

—வ. வே. சு. ஐயர்.

கிடைக்குமிடம்:—

புது யுக நிலையம்

புதுச்சேரி